பக்கங்கள் 20
20/=
Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

17-23 ஏப்ரல் 2019
வாரஇதழ்



**தமிழ்ப்புத்தாண்டுக்கும் வழியில்லாத, தமிழன்?**

## வஞ்சத்தால் வீழ்ந்த அசாஞ்சே

# அடுத்த ஜனாதிபதி கோத்தாவா?

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

எதிரொலி Ethiroli

17-23 ஏப்ரல் 2019

# வன்னியின் குரல்

● கருணாகரன்

# வெயிலோடு விளையாடி



வெளியே தலையைக் காட்ட முடியாத அளவுக்கு வெயில். பகலில் நெருப்பு. இரவில் அனல். இரண்டு வேளையும் தகித்துக் கொண்டேயிருக்கிறது வெக்கை. ஒரு சிறிய அசைவே இல்லாமல் மரங்களெல்லாம் உறைந்து போயிருக்கின்றன. காற்றும் வெயிலில் தலைகாட்ட முடியாமல் எங்கே சுருண்டு விட்டதா? நாயொன்று மர நிழலில் படுத்துறங்குகிறது. ஏதோ அசுமாத்தம் கேட்கவும், மெல்லத் தலையை உயர்த்தி வெயிலைப் பார்த்து விட்டு மறுபடியும் சோம்பிப் படுக்கிறது. அந்தா அந்த மாடுகள் கூட மேய்ச்சலுக்குப் போகப் பஞ்சிப்பட்டு மரத்துக்குக் கீழே அசை போட்டுக்கொண்டு அரைத் தூக்கத்திலிருக்கின்றன.

ரஞ்சகுமாரின் "சுருக்கும் ஊஞ்சலும்" கதையில் வருகிற ஆனி மாதத்து வெயிலையும் மிஞ்சி விடுகிற மாதிரி இந்தப் பங்குனி வெயில் கொளுத்துகிறது.

இந்த வெயிலுக்கு வீட்டுக்குள் இருக்க முடியாது. அவ்வளவு புளுக்கம். ஆத்திக்கு மின்சாரமும் இல்லை. வெளியே திரியவும் முடியாது. கடுமையான வெக்கை.

"கண்டபடி வெயிலுக்குள் திரிய வேண்டாம்" என்று பத்திரிகை அறிவிப்புகளும் வானொலி எச்சரிக்கைகளும் அச்சுறுத்துகின்றன.

"என்னதான் தைலங்களைப் பூசிக் கொண்டு போனாலும் தோல் வெடிப்போ குருதிக்கசிவோ ஏற்படலாம். இல்லையென்றால் வெகிர் போடும். அம்மை கூடப்போடலாம். நன்றாகத் தண்ணீரைக் குடியுங்கள். நீராகாரமே இந்தக் கோடையைப் பாதுகாப்பாகக் கடப்பதற்கான ஒரே வழி" என்கிறார்கள் மருத்துவர்கள்.

அப்படியென்றால் என்னதான் செய்வது? எங்கே போவது?

"இதில என்ன புதினமிருக்கு? பங்குனி என்றால் இப்படித்தானிருக்கும்" என்கிறா வலு சாதாரணமாகப் பூரணம் மாமி.

எழுபது பங்குனிகளைக் கண்ட அனுபவம் அது.

"பங்குனியை வெல்ல வேண்டும் எண்டால் வெங்காயத்தை வெட்டிப்போட்டு மோரைக் குடியுங்கோ. இல்லாட்டிக்கு பழந்தண்ணியைக் கரைச்சுக் குடியுங்கோ. நல்ல வத்தகப்பழமாகப் பார்த்து வாங்கிச் சாப்பிடுங்கோ. வெள்ளரிப்பழமிருந்தால் இன்னும் நல்லது" என்றொரு அறிவுரை.

நீர்த்துப் பூசணிக்காயை மதியக் கறிக்கு நறுக்கிக் கொண்டு, மனுசி வலு சிம்பிளாகச் சொல்வதைக் கேட்க எரிச்சல் வருகிறது. இப்ப போய் எங்க மோர் வாங்கிறது? வத்தகப்பழத்துக்குக் கடிதம்தான் எழுதிப் போட வேணும். ஊரில எங்கையேனும் ஒன்றிரண்டு கடைகளில தலையைக் காட்டும் பழங்களை அடுத்த மணித்தியாலத்தில் காணவே முடியாது. அவ்வளவுதான். அதுக்கிடையில அதை யாரோ வாங்கிப் போய் விடுவார்கள். வெள்ளரிப்பழம் வந்தாலும் வாங்க முடியாத அளவுக்கு உச்சவிலை. அந்த விலையைக் கொடுத்துப் பழத்தை வாங்கி வந்தாலும் அது கல்லுப்போலக் கட்டியாக இருக்குமே தவிர, பூப்போல மலர்ந்திருக்காது. மருந்தையோ உரத்தையோ போட்டு நாசமாக்கி வைத்திருக்கிறார்கள்.

இதுகள் இல்லையென்றால், பழைய சோற்றுத் தண்ணிதான். பழந்தண்ணியை இப்ப யார்தான் குடிக்கிறார்கள்? பிள்ளைகள் வாயில் வைக்கவே மாட்டார்கள்.

வேணுமென்றால் ஒரேஞ் ஜூஸை அல்லது பைன் அப்பிள் ஜூஸை, அல்லது மங்கோ ஜூஸைக் குடிக்கலாம். ஆனால் அதையும் ஒவ்வொரு நாளும் குடிக்க முடியுமா? அல்லது நாள் முழுவதும் குடிச்சுக் கொண்டிருக்க ஏலுமா? அல்லது யோக்கற்றோ ஜெலியோதான்.

ஆனால், பூரணம் மாமியை இந்த வெக்கை ஒன்றுமே செய்யவில்லை. அவ காலையில் வெறும் வயிற்றில் பழந்தண்ணியைத்தான் குடிக்கிறா. கொஞ்சம் வெயில் ஏறி மதியத்துக்குக் கிட்ட வரும்போது தயிரைக் கடைந்து இரண்டு டம்ளர் மோர் வெங்காயத்தோடு நாலு மிடறு.

வீட்டில் இருக்கிறதால இதெல்லாம் அவவுக்கு வசதி. வேலைக்குப் போகிற ஆட்கள் பழந்தண்ணியை எப்படி எடுத்துக் கொண்டு போறது? மோரை எங்கே வாங்கிக் குடிப்பது?

"வேலைக்குப் போனால் என்ன வீட்டில இருந்தால் என்ன வெக்கை வெக்கைதானே. உடலுக்குச் சுவாத்தியம் வேணுமெண்டால் அதுக்குத் தேவையானதை நாங்கள் எடுத்துத்தான் ஆக வேணும்" பூரணம் மாமி மாறாக்கொள்கையோடு தன்னுடைய நிரலைப்பற்றியே சொல்லிக் கொண்டிருக்கிறா.

அதில் நியாயம் உண்டு என்றாலும் அதையெல்லாம் எப்படி நடைமுறைப்படுத்துவது.

நடைமுறைப்படுத்தாத வரையில் எல்லாத் தத்துவமும் உயர்வானவைதான்.

ஆனால் "எதையும் நடைமுறைப்படுத்த முயன்றால் எல்லாத் தத்துவமும் எளிமையாகி விடும்" என்பார் அய்யா.

அய்யாவும் பூரணம் மாமியைப்போல வெள்ளரிப் பழப் பிரியரே. வத்தகப்பழ ருசிகர். பழந்தண்ணிப் பாசக்காரர். மோரை முட்டியோடு குடிக்கிற ஆள். கோடையைப் பற்றிக் கவலைப்படாத பேர்வழியாக, கோடையை வென்ற வீரராக வாழ்ந்து மடிந்தார்.

அந்த நாட்களில் பள்ளிக்கூடத்தால் வந்த கையோடு நாலு துண்டு வத்தகப் பழம் தின்னாமல் சோற்றுக்குள் கை வைக்க முடியாது.

காலையில் பள்ளிக்கூடம் போக முதல் ஒரு பெரிய சிரட்டை அளவு பழந்தண்ணி வயிறு முட்டக் குடிக்க வேணும்.

இது கட்டளையா வழக்கமா என்று தெரியாது.

ஆனால் வயிற்றில் ஒரு போதும் நெருப்பு மூளவில்லை. உணவு முறையினால் உடலில் கனல் ஏறாமல் பார்த்தார்கள்.

வளவில் வேலியிலும் முற்றத்திலும் மரங்கள் நின்று குளிரூட்டின. ஊரில் தூர்வாரிய குளங்களில் நீர் நின்றது. குளத்தில் நீர் நிரம்பி நின்றால் நிலத்தில் சூடேற வழியில்லை.

இதொன்றும் நீண்ட காலத்துக்கு முன்பென்றில்லை. ஆக மிஞ்சிப்போனால் ஒரு நாற்பது வருசத்துக்குள்ளே இருந்த நிலைமை.

அப்போதும் பங்குனியில் அனலே அடித்தது. சூரியன் உச்சத்தில்தான் நின்றது. ஆனால், வெயிலைக் கண்டு, வெக்கையைக் கண்டு, அனலைக்கண்டு யாரும் அஞ்சியதில்லை.

"அது அதின்ரை காலத்தில அது பாட்டுக்கு எறிக்கட்டும். நாங்கள் எங்கட வேலையைச் செய்வம்" என்று காட்டில் விறகு எடுக்கப் போனார்கள். வேட்டைக்குச் சென்றார்கள். களப்பில் நடு மதியத்திலும் கரப்புக் குத்தி மீன் பிடித்தார்கள். புலவில் மந்து கொத்தினார்கள். குளக்கரையில் மாடு மேய்த்தார்கள். வயலில் உழுதார்கள். காணியில் கிணறு தோண்டினார்கள். கல்லுடைத்தார்கள். மேசன்வேலை, தச்சு வேலை என்றெல்லாம் பார்த்தார்கள். தோட்டத்தில் பயிருக்கு இறைத்தார்கள்.

வெட்ட வெளியில் வெயிலைக் குடித்தபடி எல்லோரும் உழைத்தனர். வெயில் குடிப்பதே அழகு என்றிருந்த காலம் அது. உடம்பில் ஒரு நோய்நொடி அண்டியதில்லை.

யாரையும் வெயிலினால் எதுவும் செய்ய முடியவில்லை. யாரும் வெயிலைப் பொருட்படுத்தவுமில்லை.

அன்றெல்லாம் குளிரூட்டிய அறைகளில் எவரும் இருந்ததில்லை. அப்படி ஒரு "அற்புதமான சமான்" இருக்கிறதெண்டே பலருக்கும் தெரியாது.

வெயிலோடு விளையாடி வெயிலோடு போராடி வெயிலோடு உறவாடி வெயிலோடு வாழ்ந்தனர் எல்லோரும்.

வெயிலில் உடல் கருகி முறுகிக் கடுமையாகும். முறுகிய உடலில் எண்ணெய் தேய்த்து விட்டதைப் போல வியர்வை மினுங்கும். அதுவும் ஒரழகுதான். அதைப் பேரழகு எனலாமா!

எங்கள் வீட்டில் பெரியதொரு மோர்ப்பானை இருந்தது. அது நிறைய எப்போதும் மோரிருக்கும். உறியிலே தயிர்ச்சட்டி தொங்கியது. சுவர்க்கரையில் மோர் கடையும் மத்துகள் வரிசை கட்டி நின்றன. அதற்குப் பக்கத்தில் வெண்ணைச் சட்டி. அதற்குப் பக்கத்தில் நெய்ப்போத்தல்கள். கூடவே பொன்னிறத்தில் ஒன்றிரண்டு தேன் போத்தல்கள். அருகிலே மருந்துச் சரக்குள் போடப்பட்ட நான்கைந்து சுரைக்குடுவைகள்.

வெள்ளரிப் பழங்களை ஒரு போதும் நாங்கள் காசு கொடுத்து வாங்கியதில்லை. காசுக்கு விற்றதுமில்லை. ஆனால் கொடி நிறையக் காய்த்துப் பழுத்து வெடித்திருக்கும்.

அவ்வளவையும் அந்தக் கோடை முழுவதும் நாங்களும் ஊராக்களுமாகத் தின்று முடித்து விடுவோம்.

வெயிலோ வெக்கையோ எங்களைத் தீண்டியதில்லை. விடுமுறை நாட்களில் குளத்தில் குளிப்பு. நீச்சல்.

தம்பாப்பிள்ளை அண்ணை, ஒட்டைச்சின்னத்துரை, ஓணர் சின்னத்துரை, பரமசிவம் அண்ணை, கறுத்தாற்ற செல்லத்துறை அண்ணை என ஒரு ஏழெட்டுப்பேர் வெள்ளரிப்பழம், வத்தகப்பழம், பழந்தண்ணி என்ற இந்த மாதிரி அயிற்றங்களோடு மினக்கெட்டதில்லை.

அவையின்ரை றூட்டே வேற.

காலையில் ஒரு பாட்டம் வேலை முடியப் பனங்கள்ளு. ஆளுக்கு இரண்டு போத்தல் எப்படியும் மதியத்துக்குள் குடித்து முடிப்பார்கள். "உடற்சூட்டைத் தணிப்பற்கு இயற்கை வழங்கிய அற்புத பானமெல்லோ இது" என்பார் தம்பாப்பிள்ளை அண்ணை.

தான் குடிக்கிறது மட்டுமென்றில்லாமல் கோடையில் பிள்ளைகளுக்கும் ஒவ்வொரு சிரட்டை கள்ளைக் கொடுப்பார். எதையும் அளவோட குடிச்சால் ஒரு விக்கினமும் இல்லை என்பது அவருடைய நம்பிக்கை.

அப்படி நம்பித்தான் கள்ளைப் பருக்கினார். சொன்னால் நம்ப மாட்டீர்கள். அவருடைய மூன்று பிள்ளைகளும் செக்கச் சிவந்த நிறமும் மொழு மொழு என்று வழு வழுப்பாகவும் இருந்தனர்.

இரத்தினத்தாரின் மக்களும் அப்படித்தான். ஏன் அவருடய பெண்பிள்ளைகளும் குமராகிற வரையில் கள்ளோடும் வெள்ளரிப்பழத்தோடும்தான் ஒவ்வொரு கோடையையும் கழித்தார்கள்.

இரவில் தாடித்தம்பரின் பின்னேரக்கள்ளு அளவாக ஒரு போத்தல்.

இதையெல்லாம் யாரும் தப்பென்றோ தவறென்றோ சொன்னதுமில்லை. கருதியதுமில்லை. எல்லாம் நல்ல மாதிரியே நடந்தன.

பருவ காலங்களைக் கடப்பதற்கு அவரவர் தமக்கென வழிகளைக் கண்டறிந்து வைத்திருந்தனர். எல்லாமே இயற்கையிலிருந்து, எங்கள் சூழலில் இருந்து எடுத்த திரவியங்கள்.

கடலோரத்துச் சனங்கள் திருக்கை மீனில் கறியும் வறையும் செய்து தின்றனர். திருக்கை குளிரானது. கோடைச்சூட்டை அமத்தும் என்று நம்பினர் அவர்கள்.

காட்டிலே முரலிப்பழமும் நறுவிலியும் ஈஞ்சும் பழுத்துக் கொட்டின. கோடையை ஆற்றுப்படுத்த பழங்களை அள்ளித் தந்தன காடுகள்.

வீட்டில் கொய்யாவும் மாதுளையும் மாவும் வாழையும் வத்தகையும் வெள்ளரியும்.

குளிக்கவும் முழுகவும் ஊர்கள் தோறும் குளங்கள். சில இடங்களில் மருத மரங்களோடு விளையாடிக் கொண்டோடும் ஆறுகள்.

இதிலெல்லாம் கலந்து புழங்கியே கோடையை வென்றனர் எல்லோரும்.

கடுமையான புழுக்கம் என்றால் முற்றத்தில் நிற்கும் வேம்பின் கீழே ஒரு குட்டித் தூக்கம். அல்லது நான்கைந்து பேர் சேர்திருந்து கதையளத்தல்.

உங்களுக்கு நன்றாக நினைவிருக்கக்கூடும். அப்போது எந்தக் கோடையையும் யாரும் சபித்ததில்லை.

"கோடையே வா கோடையே வா" என்றே எல்லோரும் வரவேற்றனர்.

மாரி மழையில் ஊறிய ஊர் கோடை வெயிலில் விரித்துக் காயப்போட்டதைப்போலிருக்கும்.

கோடையின் அழகு தனியானது. அது மாரிய மழைப்போல இன்னொரு விதமானது. அதைப் பார்க்க வேண்டுமென்றால் மன்னாரில் இலுப்பைக்கடவை, ஆக்காட்டிவெளி, ஆண்டான்குளம், கள்ளியடிக்கு நீங்கள் வரவேணும். இல்லையென்றால் கிளிநொச்சியில் பொன்னகர், காந்திகிராமம், ஊற்றுப்புலம், சாந்தபுரத்தைப் பார்க்க வேணும். முல்லைத்தீவில் மன்னாகண்டல், வன்னிவிளாங்குளப்பக்கம் போகவேணும்.

கோடை வெம்மையின் தேவதை. நீரைத் தன் நாவினால் தீண்டிச் சுவைக்கும் பெருஞ்சர்ப்பம். என்னுடைய உயிர்க்காதலி. பூரணம் மாமிக்குத் தோழி. ■

எதிரொலி
Ethiroli

அம்பலம் பதிப்பகம்,
இல. 241, கைதடி - மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

## கண்டுகொள்ளப்படாத மாற்றுக்கள்

கடந்த வாரம், பல திருப்பங்கள். மனிதன் இதுநாள் வரையும் கற்பனையில் மாத்திரமே கண்டுவந்த கருந்துளையின் முதல் புகைப்படம் வெளியானமை, அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசுகளின் கோரமுகங்களைத் தோலுரித்துக் காட்டிய விக்கிலீக்ஸ் இணையத்தின் ஜூலியன் அசாஞ்சே பிரிட்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை, சூடானில் 30 வருடங்களாக ஆட்சி செய்த ஓமர் அல் பசீர் இராணுவப் புரட்சி மூலம் பதவியில் இருந்து அகற்றப்பட்டமை, அமெரிக்க குடியுரிமையை ரத்துச் செய்யப் போன கோத்தபாய வெறுங்கையோடு திரும்பி வந்தமை என பரபரப்புக்குப் பஞ்சமில்லை.


ஆனால் இவையெல்லாவற்றையும் விட, இலங்கை மக்களை அதிகம் ஈர்த்த விடயம், கடந்த சில வாரங்களாக நீடித்த மின்வெட்டு முடிவுக்கு வந்தமை தான். இலங்கைக்கு நேரே சூரியன் உச்சம் கொடுக்கும் காலப் பகுதியில், மின் வெட்டும் போட்டுத் தாக்க, மக்கள் என்ன செய்வதென்று தெரியாமல் விழிபிதுங்கினார்கள். முதலில் நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலைய இயந்திரத்தில் கோளாறு என்று மின் தடைக்குப் பிள்ளையார் சுழி போடப்பட்டது. ஆனால் அந்த இயந்திரம் திருத்தப்பட்ட பின்னும், மின் விநியோகம் ஒழுங்குக்கு வரவில்லை. பின்னர் தான் திக்கித் திணறி, "நீர்மின் உற்பத்திக்கான நீரேந்து பகுதிகளில் போதியளவு நீரின்மையால், தொடர்ந்து மின் வெட்டு நீடிக்கும்" என்று அரசு சொன்னது. அவ்வளவுதான். முழு இலங்கையும் ஆட்டம் கண்டது. பல தொழிற்சாலைகளில் பகல் நேர மின் வெட்டால் உற்பத்திகள் வீழ்ச்சியடைந்தன. இன்னும் சில தொழிற்சாலைகளோ, மின் வெட்டு நேரத்தைக் கணித்து, மின் வந்த பின்னர் தொழிலாளர்களை வரச் சொல்லி உத்தரவிட்டன. இதனால் அப்பாவித் தொழிலாளர்கள் பலரும் காலையில் கடமைக்கு வந்து, இரவான பின்னரே வீடு செல்லும் நிலை உருவானது.

மின் வெட்டு அமுல் படுத்தப்பட்ட காலத்தில் தான் பாடசாலை மாணவர்களுக்கான முதலாம் தவணைப் பரீட்சைகள் இடம்பெற்றன. மின்வெட்டால் உரியவாறு மாணவர்கள் பரீட்சைக்குத் தயாராக முடியவில்லை. இப்படி பல பிரச்சினைகள் முளைத்தன. தனியார் துறையிடம் மின் விநியோகத்தைத் தாரைவார்க்கவே இப்படி ஒரு மின்வெட்டு நாடகத்தை அரசு அரங்கேற்றுவதாக ஆரம்பத்தில் சில தரப்புகள் சொல்லி நின்றன. ஆனால் அதை அரசு அடியோடு மறுத்தது. இருப்பினும் இப்போது தனியார் துறையிடம் மின்சாரத்தைக் கடன் வாங்கிய தன் மூலமே மின்வெட்டுக்கு முடிவு காணகூடியதாக இருந்தது.

"மழை பெய்யாமல் போனமைக்கு அரசாங்கம் என்ன செய்யமுடியும்?" என்று சிலர் கேட்கலாம். மழை தேவையானளவு பெய்கிறது. ஆனால் அதன் மூலம் கிடைக்கும் நீரை உரியவகையில் முகாமைத்துவம் செய்து சேமிக்கத் தவறுதலே இவ்வளவு பிரச்சினைக்கும் காரணம். நீரேந்து பகுதிகளுக்கு அண்மித்ததாக துணை நீரேந்து பகுதிகளை உருவாக்கி, வறட்சிக் காலத்தில் அங்கிருந்து நீரைப் பெற்றுக் கொள்ளலாம். இல்லாவிட்டால் சூரியக் கலங்களை இலகு கடன் திட்டங்கள் மூலம் , மக்களுக்கு வழங்கி, ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான மின்சாரத்தை தாமே உற்பத்தி செய்யும் நிலையை உருவாக்கலாம். இதன் மூலம் பெருமளவான மின்சாரத்தைச் சேமிப்பதோடு, மக்கள் மின்சாரத்துக்குச் செலவிடும் பணத்தையும் மீதப்படுத்தலாம்.

இப்படி கைவசம் பல மாற்றுத் திட்டங்கள் இருந்தாலும், அவற்றை அரசாங்கம் பெரிதாக கண்டுகொள்வதில்லை. உடனடித் தீர்வுதான் அவர்களுக்குத் தெரியுமே, தவிர நிரந்தரமான, எல்லோருக்கும் பயனளிக்கக் கூடிய மாற்றுத் தீர்வுகள் கண்ணுக்குத் தெரிவதில்லைப் போலும்.

**"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"**



# அடுத்த ஜனாதிபதி கோத்தாவா?

● எம்.ஐ.முபாறக்

"இரட்டைப் பிரஜாவுரிமையை நீக்க அமெரிக்காவுக்குச் சென்றமை வெற்றியளித்துள்ளது"

அமெரிக்காவில் இருந்து வந்து, கட்டுநாயக்க விமான நிலையத்தில் கால் வைத்ததும் கோத்தபாய ராஜபக்ஷ சொன்ன வார்த்தைகள் இவை. அதைக் கேட்டு அவரது ஆதரவுக்குஞ்சுகள் ஆர்ப்பரித்து, கோத்தவைத் தோளில் சுமந்தபடி, "எங்கள் எதிர்கால ஜனாதிபதி" என்று கோஷமிட்டார்கள். இந்தக் கோஷம் ரணில்தரப்புக்கு மாத்திரமல்லாமல், மஹிந்த ராஜபக்ஷவுக்கும் உவப்பானதாக இருக்காது. உண்மையில் கோத்தாவின் இரட்டைப் பிராஜவுரிமையை அவ்வளவு எளிதில் அமெரிக்கா ரத்துச் செய்யாது. அதற்காகவே இப்போது கோத்தாவுக்கு எதிரான வழக்குகள் போடப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. அமெரிக்காவின் இந்த நகர்வு ரணிலுக்குச் சாதகமான ஒரு சூழலை ஏற்படுத்தியுள்ளது.

மஹிந்த மாத்திரமன்றி அவரின் முழுக் குடும்பமுமே ஜனாதிபதி ஆசனத்தில் அமர முடியாதவாறுதான் ரணில் 19 ஆவது திருத்தச் சட்டத்தை வடிவமைத்தார்.

ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல்ஜனாதிபதியாக வருவதற்கு அனுமதி வழங்கும் மஹிந்த கொண்டு வந்த 18 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழித்து மஹிந்த இனி ஜனாதிபதியாக முடியாத நிலையை 19 ஆவது திருத்தச் சட்டத்தில் உருவாக்கிய ரணில், மஹிந்தவின் சகோதரர்களான பசிலும் கோட்டாவும் ஜனாதிபதிகளாக வர முடியாதவாறும் சட்ட ஏற்பாடு ஒன்றைச் செய்து விட்டார்.

அவர்கள் இருவரும் அமெரிக்கப் பிரஜா உரிமையைப் பெற்றிருப்பதால் அதையே அவர்களுக்கான ஆப்பாக மாற்றிவிட்டார் ரணில்.


இரட்டை பிரஜா உரிமை உள்ளவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்றொரு ஆப்பை ரணில் 19 இல் சொருகிவிட்டார். கோத்தாவையும் பசிலையும் இலக்கு வைத்தே அந்த ஆப்பு சொருகப்பட்டது.

வெளிநாட்டு பிரஜா உரிமையை நீக்கிவிட்டு இவர்களில் ஒருவர் 2020 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்வருவார் என்று அறிந்து அதற்கு ஆப்பு வைப்பதற்கும் இரண்டு தெரிவுகளை ரணில் கையில் வைத்திருந்தார்.

அதில் ஒன்று "வெளிநாட்டுப் பிரஜா உரிமை நீக்கப்பட்டு இரண்டு வருடங்களின் பின்பே எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட முடியும்" என்றொரு சட்ட ஏற்பாட்டைக் கொண்டு வருதல்.

இரண்டாவது இவர்களுக்கு எதிராக இருக்கின்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அமெரிக்காவில் வழக்குகளைத் தாக்கல் செய்து பிரஜா உரிமையை நீக்க முடியாத ஒரு சிக்கல் நிலைமையை உருவாக்குதல்.

**ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாக வருவதற்கு அனுமதி வழங்கும் மஹிந்த கொண்டுவந்த 18 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழித்து மஹிந்த இனி ஜனாதிபதியாக முடியாத நிலையை 19 ஆவது திருத்தச் சட்டத்தில் உருவாக்கிய ரணில், மஹிந்தவின் சகோதரர்களான பசிலும் கோட்டாவும் ஜனாதிபதிகளாக வர முடியாதவாறும் சட்ட ஏற்பாடு ஒன்றைச் செய்து விட்டார்.**



ரணில் இப்போது இரண்டாவது தெரிவைத்தான் கையில் எடுத்துள்ளார். கோத்தபாய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போகிறார் என்ற அறிவிப்பு வெளியானதும் இந்த இரண்டாவது தெரிவைக் கொண்டு ஆப்பு வைக்கும் வேலையை அவர் ஆரம்பித்துள்ளார்.

அதன் அடிப்படையில், கோத்தாவுக்கு எதிராக இப்போது அமெரிக்காவில் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பில் அவரது மகளால் ஒரு வழக்கும், 2007 இல் இலங்கை படையினரால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட தமிழர் ஒருவரால் இன்னொரு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்கு விசாரணைகளுக்கு ஆஜராகுமாறு கலிபோர்னியா நீதிமன்றத்தால் கோத்தாவுக்கு அழைப்பாணையும் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைகள் முடியும்வரை அமெரிக்க அரசு கோத்தாவின் பிரஜா உரிமையை இரத்துச் செய்யாது. இந்த வழக்குகளின் விசாரணைகள் பல வருடங்களுக்கு நீடிக்கலாம். தமிழர் தரப்பால் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மேலும் பல வழக்குகள் தாக்கல் செய்யப்படலாம். இதனால் அவரின் பிரஜா உரிமையை நீக்கிக்கொள்வதற்கு மேலும் பல வருடங்கள் எடுக்கலாம்.

இது 2020 ஜனாதிபதித் தேர்தலில் ரணில் வெற்றிபெறுவதற்காக 2015 லேயே வகுக்கப்பட்ட இராஜதந்திரமாகும். 2020 ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு சவாலாக வரப் போகின்ற முக்கிய வேட்பாளர்களை அடையாளம் கண்டு அந்த சவாலை முறியடிப்பதற்கு அப்போதே அவர் திட்டம் வகுத்துவிட்டார். அந்தத் திட்டத்தை சட்டமாகவும் ஆக்கி விட்டார்.

இதில் ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால் மஹிந்தவினதும் அவரது மகன் நாமலினதும் மறைமுக ஆதரவு இதற்கு இருப்பதுதான். அதற்கான காரணம் எல்லோருக்கும் தெரிந்ததுதானே.



# இதுதான் உயிரின் ஆரம்பம்

■ ராஜ் சிவா

உங்களால் இதை நம்ப முடிகிறதா? உங்கள் அப்பாவின் அப்பாவின் அப்பா அதாவது உங்கள் பூட்டன், தன் இளமைக் காலத்தில், அதைச் செய்தேன், இதைச் செய்தேன் என்று சொன்னால், அது எவ்வளவு பழமையானதாக உங்களுக்குத் தோன்றும். இன்றைய உலகின் அனைத்து நவீனக் கருவிகளையும் கைக்கொண்டிருக்கும் நீங்கள், இயற்கையை மட்டுமே துணையாகக் கொண்டிருந்த, அந்தப் பூட்டனின் சாதனையை ஒரு ஏளனச் சிரிப்புடனே பார்ப்பீர்கள். அவரிடம் என்ன இருந்திருக்கும்? கணணி இல்லை. மொபைல் போன் இல்லை. எதுவுமே இல்லை. இருந்ததெல்லாம் இயற்கையில் கிடைக்கும் பொருட்கள் மட்டுமே! அந்தக் காலத்தைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்? அப்படியான ஒரு காலத்தில், கிட்டத்தட்ட நூற்றி நான்கு வருடத்துக்கு முன்னர், 1915ஆம் ஆண்டு அல்பேர்ட் ஐன்ஸ்டைன் என்னும் ஒருவர், வெறும் கணிதத்தை மட்டும் வைத்துக் கொண்டு, விண்வெளிபற்றிய ஒரு கோட்பாட்டை உருவாக்கினார். அப்போது, அவரிடம் கணணி இருக்கவில்லை. கல்குலேட்டர் இருக்கவில்லை. தொலைக்காட்சியும் இருக்கவில்லை. இன்றுபோல உடனுக்குடன் சொல்லிவிடக்கூடிய மீடியாக்களும் இல்லை. தன் மூளையில் விண்வெளிபற்றிய எண்ணங்களைப் படமாகச் சித்தரித்துக் கணிதச் சமன்பாடுகளை மட்டும் வைத்துக்கொண்டு அந்தக் கோட்ப்பாட்டை உருவாக்கினார். விண்வெளியிலிருக்கும் அதி எடை கொண்ட பொருளானது அந்த விண்வெளியில் ஒரு குழியை உருவாக்கும் என்றார். அதுவே, எல்லையில்லா எடைகொண்டு அந்தப் பொருள் இருந்துவிட்டால், ஏற்படும் குழியானது, ஒருமைப் புள்ளியொன்றை அடையும் வரை ஆழமாகிச் செல்லும். அந்தக் குழியிலிருந்து ஒளிகூடத் தப்பிச்செல்ல முடியாது என்றார்.


இதை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு குழியை நாம் உருவாக்க வேண்டுமென்றால், எங்கே உருவாக்க முடியும்? பூமியின் மண் தரையில் ஒரு குழியை உருவாக்க முடியும். எந்தவொரு திடமான பொருளிலும், ஏதோவொரு விதத்தில் நம்மால் குழியை உருவாக்கிவிட முடியும். கடல் நீரில் ஒரு குழியை உருவாக்க முடியுமா? முடியாதல்லவா? அதை உங்களால் கற்பனை செய்து பார்க்கவே முடியாது. ஆனால், ஒரு கப்பலைக் கடலில் விடும்போது, அது நிற்குமிடத்தில், அதன் எடைக்கேற்பத் தண்ணீர் குழிகிறது. இப்போது யோசித்துப் பாருங்கள். தண்ணீரில் நம்மால் குழியை உருவாக்க முடியுமா? முடியுமென்றுதானே தோன்றுகிறது. கப்பல்களின் எடை அதிகரிப்புக்கு ஏற்ப அது ஏற்படுத்தும் குழியும் ஆழமாக இருக்கும். இதே அடிப்படையில், விண்வெளியிலுள்ள கோள்கள், நட்சத்திரங்கள், கருந்துளைகள் அனைத்தும் விண்வெளியில் குழிகளை ஏற்படுத்துகின்றன என்று ஐன்ஸ்டைன் சொன்னார். இப்படி அவர் சொன்னதை எவராலும் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. நாம் பார்ப்பது வானம். வானத்தில் நட்சத்திரங்கள். அப்படி இப்படியென்று நினைத்துக் கொண்டிருக்கையில், அங்கே வானம் என்ற ஒன்று இல்லை. இருப்பது, இரப்பர் பாய்போன்ற ஒன்றுதான். அந்தப் பாயிலேயே, நட்சத்திரம் போன்றவை இருக்கின்றன. அவை, அந்தப் பாயில் பெருங்குழிகளை ஏற்படுத்துகின்றன என்று ஐன்ஸ்டைன் சொன்னார். "என்ன, விண்வெளியில் குழியா? அது எப்படிச் சாத்தியம்? பூமியில் குழி இருப்பது சரி. ஏன் கடலில் கப்பல் குழி ஏற்படுத்துகிறது என்பதும் சரிதான். ஆனால், விண்வெளியில் குழியை எப்படி ஏற்படுத்த முடியும்? இவரென்ன இரப்பர் பாய், மென் சவ்வு, அது இது என்று சொல்கிறாரே! எந்தப் பாயையும் நாம் காணவில்லையே!" என்று சொல்லி திகைத்து நின்றது உலகம். அத்துடன் ஐன்ஸ்டைன் சொன்ன இன்னொன்றையும் கேட்டு அறிவியல் உலகமே பதைத்துப் போனது. 350 வருடங்களுக்கு மேலாக நம்பிக்கொண்டிருந்த ஒன்றை இல்லையென்று சொல்கிறாரே இவர் என்று தடுமாறியது.

1680ஆம் ஆண்டளவுகளில், ஐசாக் நியூட்டனால் புவியீர்ப்புவிசைக்கான புரட்சிகரக் கருதுகோள் வெளியிடப்பட்டது. அந்தக் கருதுகோளையே மாற்றிச் சொன்னார் ஐன்ஸ்டைன். ஐசாக் நியூட்டன் சொல்லியிருந்த புவியீர்ப்புவிசைபற்றிய கோட்பாட்டையே நம்பிவந்தவர்களுக்கு, ஐன்ஸ்டைன் தடைக்கல் போட்டார். மேலே சொன்னதுபோல, அதி எடைகொண்ட ஒவ்வொரு பொருளும் விண்வெளியில் ஏற்படுத்தும் குழிவே, அப்பொருளை நோக்கிய ஈர்ப்பை உருவாக்குகிறது என்றார். உதாரணமாகப் பூமியானது, விண்வெளியில் ஏற்படுத்தியிருக்கும் குழிவின் வளைவுக்குள் அகப்பட்டுக்கொண்ட சந்திரன், அந்தக் குழியினுள்ளேயே சுற்றிக்கொண்டிருக்கிறது. இதுவே பூமிக்கும், சந்திரனுக்குமான ஈர்ப்புக்கான காரணம். இது போலவே, சூரியன் ஏற்படுத்தியிருக்கும் பெருங்குழியில், பூமி உட்பட ஏனைய கோள்களும் அகப்பட்டபடி சூரியனைச் சுற்றுகின்றன. நியூட்டனின் ஈர்ப்புவிசைக் கொள்கைக்கு மாற்றாக ஐன்ஸ்டைன் முன்வைத்ததை, ஏற்க முடியாமலும், விலக்க முடியாமலும் தவித்தது உலகம். காலம் செல்லச் செல்ல ஐன்ஸ்டைன் கூறிய ஈர்ப்புக் கோட்பாடு சரியெனப் புரிந்துகொண்டது உலகம். அதன் நீட்சியாக ஐன்ஸ்டைன் சொல்லியிருந்ததுதான் கருந்துளைக்கான வித்தாகியது. கருந்துளைக்கு எல்லையில்லா அதியீர்ப்பு உண்டு என்பதால், அது விண்வெளியில் நினைக்கவே முடியாத ஆழம்வரை பெருங்குழியை ஏற்படுத்தும். அந்தக் குழியின் முடிவு, ஒற்றைப் பரிமாணமுள்ள ஒருமைப்புள்ளியாக இருக்கும் என்றார். கருந்துளை பற்றி இவ்வளவு விவரமாக விளக்கிச் சொன்னாரேயொழிய, அவர் இருக்கும்வரை அப்படியானதொன்று உண்மையில் இருக்கிறது என்பதை நிறுவவே முடியவில்லை. ஒருகட்டத்தில் கருந்துளை என்ற ஒன்று இல்லையென்ற சந்தேகம்கூட அவருக்குத் தோன்றியது. ஆனால், இன்று நூற்றுநான்கு ஆண்டுகளுக்குப் பின்னர், அந்த மாமேதை சொன்ன கருங்குழியை, அவர் சொன்னபடியே கண்டுபிடித்திருக்கிறோம். இதுவரை அப்படியானதொன்று இருக்கிறது என்று அடித்துச் சொன்னாலும், அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இப்போது அதைக் கண்டுபிடித்து, அதன் உருவத்தையும் படமெடுத்திருக்கிறோம். மனித குலத்தின் மாபெரும் சாதனை அது. எப்படி அதைக் கண்டுபிடித்தோம்? அது இன்றைய விஞ்ஞானிகளின் அற்புதமான புரட்சிச் சிந்தனையால் சாத்தியமாயிற்று. எப்படி?

உலகிலேயே மிகப்பெரிய காணொளிப்பெட்டியை (Television) துபாய் மோலில் வைத்திருக்கிறார்கள். அது ஒரேயொரு காணொளிப் பெட்டியாக இருந்தாலும். சற்றே உற்று நோக்கினால், ஆயிரம் சிறிய காணொளிப் பெட்டிகளை ஒன்றிணைத்து உருவாக்கியது என்று தெரியவரும். அதாவது ஆயிரம் சிறிய காணொளிப்பெட்டிகள் சேர்ந்து ஒரு மிகப் பெரிய காணொளிப்பெட்டியாக மாறியிருக்கிறது. இதுபோன்ற பெரிய திரைகளை நீங்களும் விழாக்களில் கண்டிருப்பீர்கள். சமீபத்தில் நீங்கள் பார்த்த 'சூப்பர் டிலக்ஸ்' படத்திலும் ஒன்று சொல்வார்கள். பல நுண்ணுயிரிகள் ஒன்றாகச் சேர்ந்து உருவாக்கப்பட்டவன்தான் மனிதன் என்னும் ஒரு உயிர் என்பார்கள். இவற்றைச் சரியாக நீங்கள் புரிந்துகொண்டால் போதும். கருந்துளையைக் கண்டுபிடிப்பதற்கான அடிப்படையையும் புரிந்துகொள்ளலாம். அதாவது 55 மில்லியன் ஒளி வருட தூரத்துக்கு அப்பால் இருக்கும் ஒரு கருந்துளையைப் பார்ப்பதென்றால், நாம் இதுவரை கண்டுபிடித்திருக்கும் எந்தத்தொலைநோக்கியாலும்சாத்தியமேயில்லாதது. அதற்குப் பூமியளவு பெரிய தொலைநோக்கி தேவைப்படும். அப்படியொரு தொலைநோக்கியயை நான் மேலே சொன்ன உத்தி முறையால் உருவாக்கியிருக்கிறார்கள். அந்தத் தொலைநோக்கிதான் 'நிகழ்வு எல்லைத் தொலைநோக்கி' (Event Horizon Telescope - EHT). இது உலகின் பல இடங்களில் பரந்துபட்டுள்ள எட்டு மிகப்பெரிய தொலைநோக்கிகளை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட மாபெரும் தொலைநோக்கி.

(தொடரும்)

**ஒரு குழியை நாம் உருவாக்க வேண்டுமென்றால், எங்கே உருவாக்க முடியும்? பூமியின் மண் தரையில் ஒரு குழியை உருவாக்க முடியும். எந்தவொரு திடமான பொருளிலும், ஏதோவொரு விதத்தில் நம்மால் குழியை உருவாக்கிவிட முடியும். கடல் நீரில் ஒரு குழியை உருவாக்க முடியுமா? முடியாதல்லவா? அதை உங்களால் கற்பனை செய்து பார்க்கவே முடியாது. ஆனால், ஒரு கப்பலைக் கடலில் விடும்போது, அது நிற்குமிடத்தில், அதன் எடைக்கேற்பத் தண்ணீர் குழிகிறது. இப்போது யோசித்துப் பாருங்கள்.**



# வஞ்சத்தால் வீழ்ந்த அசாஞ்சே

● ஆதங்கன்

அதிகார வர்க்கத்தின் கண்ணில் விரலை விட்டு ஆட்டிய, இணைய ஊடகப் போராளி ஒருவன் மீண்டுமொரு தடவை துரோகத்தால் வீழ்த்தப்பட்டுள்ளான். எந்த ஈக்குவடோரை நம்பி, அவர்களின் தூதரகத்தில் அடைக்கலம் புகுந்தானோ, அதே தூதரக அதிகாரிகளின் அழைப்பில் உள்நுழைந்த பிரிட்டன் பொலிஸாரால், விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே கைது செய்யப்பட்டு, இழுத்துச் செல்லப்பட்டுள்ளான்.

'விக்கி'என்பது யார்வேண்டுமானாலும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும், தகவல்களை வழங்கவும் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு சொல். ( விக்கி என்றதும் உங்களுக்கு வடமாகாண முன்னாள் முதலமைச்சர் நினைவுக்கு வந்தால் நாம் பொறுப்பல்ல) விக்கிபீடியா என்ற இணைய அகராதி கூட இந்த வகையைச் சேர்ந்ததுதான். அதனாலேயே ஒரு சுயாதீனப் பொது இணையம் என்பதைக்குறிக்க 'விக்கிலீக்ஸ்' என்ற பெயர் ஜூலியனால் தெரிவு செய்யப்பட்டது.

"புலனாய்வு ஊடகத்துறையில் இன்னும் வெற்றுப்பரப்பாக நீண்டுகிடக்கின்ற வெளிகளை நிரப்புவதே விக்கிலீக்ஸின் ஒரே நோக்கமாகஇருக்கவேண்டும். வெறும் பரபரப்புக்காக தகவல்களை வெளியிடும் மற்றைய ஊடகங்களை விடவும் விக்கிலீக்ஸின் தனித்துவம் அதன்மூலமே வெளிப்படும்" என்பதே ஜூலியன் அடிக்கடி உச்சரிக்கும் வார்த்தைகள். இந்த வார்த்தைகளை உதட்டில் இருந்து உதிர்ப்பதோடு மாத்திரம் நின்று விடாமல் செயலிலும் காட்டினான் ஜூலியன் அசாஞ்சே.

அதிகாரத்தின் உச்சாணிக் கொம்பில் ஊஞ்சல் கட்டி, ஆனந்தமாக ஆடிய படியே உலக நாடுகளின் 'மொனிட்டராக' உலா வந்து கொண்டிருந்த அமெரிக்காவுக்கு ஜூலியன் கொடுத்த அடிகள் மறக்க முடியாதவை. ஒஸாமா பின்லேடன் நடத்திய செப்ரெம்பர் 11 தாக்குதலின் வீரியம் வெளிப்படையாகத் தெரிந்தது. ஆனால் அதை விடவும் பன்மடங்கு வலியை யூலியனின் இணையத்தாக்குதல்கள் அமெரிக்காவுக்கு ஏற்படுத்தின. இந்த வலியின் வேதனையை அமெரிக்கா முழுமையாக வெளிக்காட்டாவிட்டாலும், உள்ளுக்குள் அது அடிபட்ட விலங்காக ஆத்திரத்தோடு ஜூலியனை வேட்டையாடவே அலைந்துகொண்டிருந்தது.

தன்னை இவ்வளவு நாளும் பாடாய்ப் படுத்திய யூலியனுக்கு அமெரிக்கா கொடுத்த பதிலடி தான் சுவீடனைச் சேர்ந்த அன்னா மற்றும் சோபியா என்ற பெண்கள் மூலம் தொடுத்த பாலியல் பலாத்கார வழக்கு என்று பெரிதும் நம்பப்படுகிறது.

உலகின் எல்லா நாடுகளிலும் உள்ள அமெரிக்கத் தூதரங்கள் தமக்கு கிடைக்கும் தகவல்களை இயன்றவரை உறுதி செய்த பின்னர் யார் கண்ணிலும் படாமல், அதனைப் பத்திரமாக அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலகத்துக்கும், உரியவர்களுக்கும் அனுப்பி வைக்கும். உதாரணமாக இந்து சமுத்திரத்தில் சீனக்கடற்படையின் பிரசன்னம் அதிகரித்திருந்தால் அது குறித்து இந்து சமுத்திரத்துடன் தொடர்புடைய நாடுகளான இந்தியா, இலங்கை போன்றவற்றில் உள்ள தூதரகங்களுக்கும், இந்து சமுத்திரப்பகுதிக்குப் பொறுப்பான அமெரிக்கக்கடற்படையின் பொறுப்புவாய்ந்த அதிகாரிக்கும் அந்தத் தகவல் தெரிவிக்கப்படும். அத்துடன் அதன் பிரதி ஒன்று வெளியுறவுத்துறைச் செயலகத்துக்கு அனுப்பப்பட்டு அங்கு ஆவணப்படுத்தப்படும். இவ்வாறு அனுப்பப்படும் ஆவணங்கள் எவ்வித ஊடுருவல்களுக்கும் இடமளியாது சேரவேண்டிய இடத்துக்கு பாதுகாப்பாகப் போய்ச்சேர்வதற்கு பல்வேறு தொடர்பாடல் வழிமுறைகளை தூதரகங்கள் கடைப்பிடிக்கின்றன. அமெரிக்கத் தூதரகம் 'கேபிள்' எனப்பெயர் கொண்ட முறையைப் பயன்படுத்துகின்றது.

இந்தக் கேபிள் தொடர்பாடலுக்கு இணையவலையமைப்பே பயன்படுத்தப்படுகின்ற போதும் பல அடுக்குகளாலான பாதுகாப்புப் பொறிமுறைகளின் துணையுடனேயே அது செயற்படுத்தப்படுகின்றது. இந்தப்பாதுகாப்புப்பொறிமுறைகள் எவராலும், எப்போதும் அணுகப்பட முடியாதவை. அந்தப்பொறிமுறைகள் எத்தனை, அவை எவ்விதம் செயற்படுகின்றன என்பதெல்லாம் சிதம்பர இரகசியமானவை. இவ்வாறு பூதம் காக்கும் புதையலைப் போல பொத்திவைக்கப்படும் கேபிள்கள் அமெரிக்காவுக்கு அவ்வளவு தூரம் முக்கியமானவை. ஏனெனில் அமெரிக்கா, பிறநாடுகளில் செய்கின்ற நாசவேலைகள், அந்த நாடுகள் தொடர்பாகக் கொண்டிருக்கின்ற உண்மையான மனப்பாங்கு, எதிர்காலத்தில் எவ்வாறு அந்த நாடுகளில் செயற்பட வேண்டும் என்ற திட்டமிடல்கள் என்பனவெல்லாம் தூதரகத்தில் அதிகாரம் கொண்டவர்களால், அவர்களது கையொப்பத்துடன் அனுப்பப்படும் ஒன்றாகும். எனவே இவை வெளிப்படுத்தப்பட்டால் அதற்கும் எங்களுக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை என்ற பழைய பல்லவியை அமெரிக்காவால் பாட முடியாது.

தனக்கான சுருக்கு கயிற்றை' இறுக்குவதற்கு அமெரிக்கா துடிப்பதை உணர்ந்து கொண்ட ஜூலியன் தன்னுடைய மிகப் பெரிய தாக்குதலாக இந்தக் கேபிள்களை வெளியிடுவதெனத் தீர்மானித்தான்.

யாருமே உட்புக முடியாதென் அமெரிக்கா நினைத்திருந்த கேபிள் வலையமைப்பு என்ற இரும்புக்கோட்டைக்குள் தன்னந்தனியனாக ஜூலியன் நுழைந்தான். தன்னுடைய கணினித்தொழினுட்ப அறிவின் உச்சத்திறன் முழுதையும் · செலவிட்டே யூலியனால் இதை நிகழ்த்த முடிந்தது. கேபிள் வலையமைப்புக்குள் புகுந்து விட்டு ஜூலியன் வெறுங்கையை வீசிக்கொண்டு வெளியே வரவில்லை. லட்சோப லட்சம் கேபிள் ஆவணங்களையும் தன் கூடவே அள்ளிவந்தான்.

*2010 நவம்பர் 28.*

அமெரிக்காவின் கரிநாள். தான் கவர்ந்திருந்த கேபிள்களை விக்கிலீக்ஸில் வெளியிடும் கைங்கரியத்தை அன்றைக்குத்தான் ஜூலியன் ஆரம்பித்தான். தனியே ஒரு நாடு மட்டும் என்றில்லாது சகல நாடுகளிலுமுள்ள அமெரிக்கத் தூதரகங்கள் அனுப்பி வைத்த ஆவணங்கள் நாளொரு தகவலும் பொழுதொரு உண்மையுமாக அரங்கேறத்தொடங்கின. விக்கிலீக்ஸ் வெளியிட்ட தகவல்களால் உலகின் எல்லா முனைகளிலும் தீப்பிடிக்கத் தொடங்கியது. அந்தத் தீயின் உக்கிரத்தில் அமெரிக்கா போர்த்தியிருந்த ஜனநாயகம் என்ற போலித்தோல் வெந்து சாம்பலானது.

ஏதோ இதுவரை உலகுக்குத் தெரியாதிருந்த விஷயங்கள் இப்போது தான் விக்கிலீக்ஸ் மூலம் தெரியவந்திருப்பதாக அர்த்தமல்ல. விக்கிலீக்ஸில் வெளியாகியுள்ள விஷயங்கள் பல ஏற்கனவே தெரிந்தவைதான். உலகெங்குமுள்ள பல முற்போக்கான பத்திரிகையாளர்களும் அறிவுஜீவிகளும் இவற்றை ஏற்கனவே அம்பலப்படுத்தியுள்ளனர். ஆனால் இந்தக் கேபிள்களில் அவற்றை அனுப்பிவைத்த அதிகாரிகளே வாக்குமூலம் போல எல்லாவற்றையும் எழுதிக் கையொப்பமும் வைத்திருப்பதுதான் இதன் நம்பகத்தன்மைக்கும், பிரபலத்துக்கும் காரணமெனலாம்.

ஐ.நா சபையின் உயரதிகாரிகளை உளவுபார்க்க அமெரிக்க அரசு உத்திரவிட்டமை, ஈரானின் அணு சக்தி உற்பத்தி மையங்கள் அழிக்கப்பட வேண்டுமென்று அமெரிக்காவிடம் சவுதி அரேபியாவின் மன்னர் வைத்த கோரிக்கை, இலங்கை இராணுவத்தின் நிழலில் பிரதியமைச்சர் கருணா மற்றும் ஈ.பி.டி.பி அமைப்பினர் செய்த மக்கள்விரோதச் செயற்பாடுகள் என்பனவும் விக்கிலீக்ஸ் வெளியிட்ட இந்தக் கேபிள் தகவல்களுள் அடக்கம். இதனால் வெகுண்ட அமெரிக்கா ஜூலியன் மீதான பகிரங்கப் போரைப் பிரகடனம் செய்தது.

(15ஆம் பக்கம் பார்க்க)

# மந்திரப் பொம்மை




சோலைவனம் கிராமத்தில் வசித்த ரவி, கடின உழைப்பாளி. அருகில் உள்ள வயல்களில் வேலை செய்து சம்பாதித்து வந்தார். யாருக்கு என்ன உதவி என்றாலும் ஓடிவந்து உதவி செய்வார். தன்னுடைய வருமானத்தில் ஒரு பகுதியை, இல்லாதவர்களுக்குக் கொடுத்துவிடுவார்.

ரவியைப் பற்றிக் கேள்விப்பட்ட துறவி ஒருவர் சோலைவனம் கிராமத்துக்கு வந்தார். அவரைச்சந்திக்க ஏராளமானவர்கள் வந்தனர். ஆனால், ரவி மட்டும் வரவில்லை. தான தர்மம் செய்யக்கூடிய ரவி ஏன் தன்னை வந்து சந்திக்கவில்லை என்று துறவிக்குக் குழப்பமாக இருந்தது.

மூன்றாவது நாள் மாலை, துறவியைப் பார்க்க வேகமாக ஓடிவந்தார் ரவி. "துறவியாரே, தாமதமாக வந்து உங்களைச் சந்தித்ததற்கு என்னை மன்னிக்க வேண்டும். மூன்று நாட்களாக அறுவடை. மூச்சுவிடக் கூட நேரம் இல்லை. மாலையில் வடக்கு வீதியில் ஒரு பெரியவர் நோய்வாய்ப்பட்டிருந்தார்.

அவரைக் கவனிக்க யாரும் இல்லை என்பதால் அங்கு சென்றுவிட்டேன். இன்று தான் அவர் குணமானார். உங்களைக் காண நேரம் கிடைத்து. இன்று என் வீட்டில் தாங்கள் உணவருந்த வேண்டும்" என்று அன்புடன் கூறினார் ரவி.

"நானே உன்னைச் சந்திக்க விரும்பினேன். இன்று நீயே வந்துவிட்டாய். வேலைதான் முக்கியம். உழைப்புதான் உயர்வைத் தரும். அதேபோல் ஒரு பெரியவரைக் கவனித்ததும் முக்கியமான விஷயம். இரவு உன் வீட்டில் தங்குகிறேன்" என்றார் துறவி.

ரவி மகிழ்ச்சியுடன் வீட்டுக்குச் சென்றார். சற்று நேரத்தில் துறவியும் வந்தார். அவரை நன்கு உபசரித்து, தேவையான அனைத்தையும் செய்துகொடுத்தார் ரவி. துறவியின் மனம் மகிழ்ந்தது. ஊரைச் விட்டுச் செல்லும் அன்று, ஒரு மந்திரப் பொம்மையை ரவியிடம் கொடுத்தார்.

"ரவி, தினமும் ஒரு முறை இதை வணங்கி, மாதம் ஒருமுறை என் கையில் உள்ள மண்ணைப் பொன்னாக மாற்று என்று சொன்னால், 3 தங்க நாணயங்கள் கிடைக்கும். இதை உன் உழைப்புக்குப் பரிசாகத் தருகிறேன். பெற்றுக்கொள். மகிழ்ச்சியாகவும் பிறருக்கு உதவி செய்தும் வாழ்க்கையை நடத்து" என்றார் துறவி.

நன்றி சொல்லி, பொம்மையை வாங்கிக் கொண்டார் ரவி. தினமும் அந்தப் பொம்மையை வணங்கினார். ஒரு மாதத்துக்குப் பிறகு, துறவி சொன்னதைப் பரிசோதனை செய்து பார்க்க நினைத்தார்.

"மந்திரப் பொம்மையே, என் கையில் உள்ள மண்ணைப் பொன்னாக்கு" என்று சொல்லி முடித்ததும், மூன்று தங்க நாணயங்கள் வந்தன. ரவியின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

மூன்று தங்க நாணயங்களை வைத்துக் கொண்டு ஆடம்பரமாகச் செலவு செய்ய ஆரம்பித்தார். பணம் தீர்ந்ததும் மீண்டும் பொம்மை மூலம் பொற்காசுகளைப் பெற்றுக்கொண்டே இருந்தார்.

திடீரென்று இந்தப் பொம்மையை யாராவது திருடிவிட்டால் என்ன செய்வது என்ற எண்ணம் தோன்றியது. மிகவும் பாதுகாப்பான இரும்புப் பெட்டி ஒன்றை வாங்கி, அதில் பொம்மையைப் போட்டுப் பூட்டி வைத்தார். ஆனாலும் திருப்தி இல்லை. 'பெட்டி அருகிலேயே இருந்தார். உழைப்புக்கு உதாரணமாக இருந்தவர், உழைப்பையே மறந்துவிட்டார்.

வேலை செய்யாமல் வீட்டிலேயே உட்கார்ந்து சாப்பிட்ட ரவியின் உடல் நலம் பாதித்தது. இதைப் பார்த்து அவரது நண்பர் வேலு வருந்தினார். மந்திரப் பொம்மையைப் பற்றியும் அறிந்துகொண்டார். அன்று இரவு ரவி தூங்கும்போது வீட்டுக்குள் நுழைந்தார். மந்திரப் பொம்மைக்குப் பதிலாகச் சாதாரண பொம்மையை வைத்துவிட்டார்.

மறுநாள் காலை கண் விழித்ததும் மந்திர பொம்மையை எடுத்தார் ரவி. வணங்கி, மண்ணைப் பொன்னாக மாற்றும்படிக் கேட்டார். ஆனால், மண் பொன்னாகவில்லை. அதிர்ச்சி அடைந்தார்.

"ஐயோ! திடீரென்று மந்திரம் வேலை செய்யவில்லையே! இனி நான் என்ன செய்வேன்? ஒருவேளை நாளை வேலை செய்யலாம்" என்று தனக்குத்தானே கூறிக் கொண்டார்.

ஒரு மாதம் ஆகியும் மந்திரப் பொம்மை வேலை செய்யவில்லை. இனி மந்திர பொம்மையால் பலன் இல்லை என்பதை உணர்ந்துகொண்டார். உணவுக்கு வழியில்லாமல் மீண்டும் வேலைக்குப் போக ஆரம்பித்தார். உடல் ஒத்துழைக்கவில்லை. மிகவும் கஷ்டப்பட்டார். இரண்டு மாதங்களுக்குப் பிறகு மீண்டும் பழைய ரவியாக மாறினார். கடினமாக உழைத்தார். எல்லோருக்கும் உதவினார்.

வேலு மந்திர பொம்மையுடன் வந்தார். "ரவி, என்னை மன்னித்துவிடு. உழைக்காமல் உடல் வேதனைப்படும் உன்னைக் குணமாக்கவே இந்தப் பொம்மையை எடுத்துச் சென்றேன். உழைக்காமல் வரும் பொருள் நிலைக்காது என்பதை உணர்ந்திருப்பாய். உழைத்தால் நோயின்றி மகிழ்ச்சியாக வாழலாம். உன் மந்திர பொம்மையை வைத்துக்கொள்" என்றார்.

"ஐயையோ! எனக்குப் பொம்மை வேண்டாம். இப்போதுதான் நிம்மதியாக இருக்கிறேன். இதைத் துறவியிடமே கொடுத்து விடுகிறேன்" என்றார் ரவி.

அங்கு வந்த துறவி, "உழைப்பாளியான உன்னை இந்தப் பொம்மை சோம்பேறியாக்கிவிட்டதே! நல்லவேளை வேலுவால் நீ திருந்திவிட்டாய். இனி என்றென்றும் உன் வாழ்வில் மகிழ்ச்சி இருக்கும். உழைப்பால் இன்னும் உயரமான இடத்துக்குச் செல்வாய். இந்தப் பொம்மையை நான் எடுத்துக்கொள்கிறேன்" என்றார்.

# பூச்சி என்றால் சும்மாவா?

அநேக பூச்சிகளுக்கு பறப்பது கைவந்த கலை. சில உதாரணங்களைப் பாருங்கள். கொசு தலைகீழாகவும் பறக்கும் திறமை கொண்டது. சில கொசுக்களால் மழை பெய்து கொண்டிருக்கும் போது மழைத்துளிகளை "டபாய்த்து"விட்டு நனையாமல் பறந்து செல்ல முடிகிறது. வெப்பமண்டலத்தில் வாழும் சில குளவிகளும் தேனீக்களும் மெல்லிய இரைச்சலோடு மணிக்கு 72 கிலோமீற்றர் வேகத்தில் பறக்கின்றன. வட அமெரிக்காவிலுள்ள ஒரு பெரிய வண்ணத்துப்பூச்சி (monarch butterfly) இடபெயர்ச்சிக்காக 3,010 கிலோமீற்றர் பறந்து செல்கிறது. ஹோவர் / பிளைஸ் (hover flies) என்ற சிறு ஈக்கள் ஹம்மிங் பறவைகளைவிட வேகமாக விநாடிக்கு ஆயிரம் தடவை சிறகை அடித்துக் கொள்கின்றன. தும்பிகள் பின்னோக்கிப் பறக்கின்றன. இது ஆய்வாளர்களின் ஆர்வத்தைத் தூண்ட, அவர்கள் இதை மிகவும் உன்னிப்பாக ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

ஒரு ஈயை அடிக்க முயன்ற அனுபவம் இருந்தால் உங்களுக்கே தெரியும், அவை 'மைக்ரோஸ்கோப்' பார்வை கொண்டவை என்பது. இவற்றின் ரிஃப்லக்ஸ் நம்முடையதை விட பத்து மடங்கு கூடுதல் வேகமுடையது. மற்றொரு சுவாரசியமான விஷயம், ஈக்களின் கூட்டுக் கண்ணில் (compound eye) ஆயிரக்கணக்கான ஆறு பக்க லென்சுகள் உள்ளன, அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தியங்கும் திறன் உண்டு. அப்படியென்றால் ஈயின் பார்வை சிறு சிறு துணுக்குகளாக பிரிந்திருக்கின்றது.

மனிதனால் பார்க்க முடியாத புறஊதா ஒளியை சில பூச்சிகளால் பார்க்க முடிகிறது. ஆகவே நம்முடைய கண்ணுக்கு மங்கின வெள்ளை நிறமுடையதாய் தெரியும் ஒரு வண்ணத்துப்பூச்சி ஆண் வண்ணத்துப் பூச்சியின் கண்ணுக்கு அப்படி இல்லை. புறஊதா ஒளியில் பார்க்கும்போது அழகிய வடிவங்கள் கொண்ட ஆடை அணிந்தாற்போல் தோன்றும் பெண் வண்ணத்துப் பூச்சியின் கவர்ச்சியில் ஆண் வண்ணத்துப்பூச்சி அப்படியே சொக்கிப்போகிறது.

பல பூச்சிகளின் கண்கள் திசை காட்டியின் வேலையைச் செய்கின்றன. உதாரணமாக தேனீக்களாலும் குளவிகளாலும் ஒளிக்கதிரின் திசையை உணர்ந்துகொள்ள முடியும், ஆகவே. சூரியன் மேகங்களுக்குப்பின் ஒளிந்து கொண்டாலும் இவற்றால் அதன் இடத்தை நிர்ணயிக்க முடியும். இந்தத் திறமை இவற்றிற்கு இருப்பதால் தான் இரை தேடி வெகு தூரம் சென்றாலும் வழி தவறாமல் கூட்டுக்கு திரும்பி வர முடிகிறது.

அறிவோம்





# எழுத்தைக் கொல்லும் புத்தரின் சீடர்கள்

காமினி வியங்கொட
('விகல்ப' தளத்தில் வெளியான
கட்டுரையின் தமிழாக்கம்)

ஷக்திக சத்குமார ஓர் சிங்களச் சிறுகதையாளராவார். அவர் சில மாதங்களுக்கு முன்னர் 'அர்த' (பாதி) என்ற பெயரில் சிறு கதையொன்றினை எழுதி தன்னுடைய பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டார். துறவு வாழ்க்கை, லௌகிக வாழ்க்கை மற்றும் ஓரினச் சேர்க்கை பற்றியதே இந்த சிறு கதையின் உள்ளடக்கமாகும். இது வொரு விசேடமான சிறுகதையல்ல. சில வேளைகளில் முதிர்ச்சியடைந்தோர் எனக் கருதப்படுகின்ற சிறுகதையாளர் களினால் எழுதப்படுகின்ற சாதாரண சிறுகதையைப் போன்றது. எவ்வாறாயி னும், ஓரினச் சேர்க்கை பாலியலை சம நிலையாகவும் அடையாளமாக சித்தரிக்க வைப்பதிலும் அவர் வெற்றி கண்டுள்ளார். ஆசிரியரிடம் ஒருவிதமான ஒழுக்கப் பண்புகள் உள்ளதென்பது அதன் மூல மாக தெளிவாகின்றது. கதையின் ஒரு சந் தர்ப்பத்தில் சித்தார்த்தன் மற்றும் யசோ தராவின் பாலியல் தொடர்புகளின் தன் மையினையும் ராஹுல பற்றி மகாயானத் தில் கூறப்படுகின்ற பொருள்கோடலை யும் உப கதையம்சமாக உள்ளடக்கியுள் ளார்.

இந்த சிறுகதையின் பிரதான பாத்திர மாக சித்தரிக்கப்படுபவர் பௌத்த துற வியாக "சதஹம் சேனாவ" (சதஹம் படை) உடன் தொடர்பு கொண்டிருந்து பிறகு துறவறத்தை கைவிட்ட ஒரு நபராவார். கதையானது துறவறத்தை கைவிட்ட நாளிலிருந்தே ஆரம்பிக்கப்படுவதாக சித்தரிக்க்ப்படுகிறது. இந்தக் கதையின் ஓரிடத்தில் ஞானசார தேரரைப் பற்றி யும் கூறப்படுகிறது. "நீங்களெல்லாம் வெளிநாட்டிலிருந்து பணத்தைப் பெற்று, முன்னைய புலிகள் அமைப்பினரின் தலைவர்களுடைய குடும்பத்தாருக்கு வீடு கள் அமைக்கிறீர்களாமே, உண்மையா?" என்று ஞானசார தேரர் கேள்வி எழுப் புகிறார்.

"புத்தபகவானின் ஊர்சுற்றித்திரிதல்" பற்றியும் கூறப்படுகின்றது. அரச சார் பற்ற நிறுவனம் ஒன்றில் கடமையாற்று கின்ற லொய்ட் அண்ணா என்ற ஒரு வரும் உள்ளார். இந்த அனைத்து சம்ப வங்களும், அதாவது, 'சதஹம் சேனாவ', ஞானசார தேரர், 'புத்தபகவானின் ஊர் சுற்றித்திரிதல்' மற்றும் 'அரச சார்பற்ற நிறுவனம்' என்பவை எமது நிகழ்கால விவாத மேடையில் சர்ச்சைக்குரிய விடயங் களாகும். இவ்வாறு கூறுவதற்கான கார ணம் தற்போது இந்த ஆசிரியருக் கெதிராக எழுந்து நிற்கின்ற தரப்பினர் குழப்பம் அடைந்திருப்பது, மதத்தினை இழிவுபடுத்தும் எந்தவொரு சம்பவத்திற் காகவுமல்ல. மேலே குறிப்பிட்ட ஒட்டு மொத்த தரப்பினரால் பின்பற்றப்படு கின்ற சமூக மனப்பாங்குகள் தொடர்பில் எழுந்துள்ள பிரபல்யமான குரோதத்தி னால் ஏற்பட்டதென்பதனை தெரிவிப் பதற்காகவாகும்.

இந்த இளைஞர் தேரராக இருந்த காலப்பகுதியில் தலைமைத் தேரரின் பாலியல் ஆசாபாசங்களுக்கு அடிமை யாக இருந்த நிலைமையினை மறைமுக மாக வெளிப்படுத்துகின்றார். அடுத்த தாக, துறவறத்தை கைவிட்ட பிறகு மேலே குறிப்பிட்ட லொய்ட் அண்ணனா லும் அதே சம்பவம் இடம்பெற்றதென் பதனையும் மறைமுகமாக கூறுகிறார். வேறொரு விதமாக கூறுவதாயின், துறவு வாழ்க்கையிலும், லௌகீக வாழ்க்கை யிலும் இந்த இளைஞனுக்கு சுதந்திரம் கிடைத்திருக்கவில்லை. அந்த இலக் கானது, இதனையும் விட சிறப்பான சிறு கதையொன்றினை எழுதுவதற்காக பயன் படுத்தி இருக்கக் கூடியதொரு அபூர்வ மான 'கருப்பொருள்' என்பதே எனது எண்ணமாகும்.

தற்போது இந்த எழுத்தாளர் எதிர் வரும் 9ஆம் திகதி வரையில் பொல் கஹவெல நீதவான் நீதிமன்றின் மூல




மாக தடுப்பில் வைக்கப்பட்டுள்ளார் (9ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம் எழுத்தாளர் ஷக் திக சத்குமாரவை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிட்டுள்ளது) . அது, 'புத்த மதத்தினை பாதுகாக்கும் இளைஞர் முன்னணி' என்ற பௌத்த துறவிகள் குழு வொன்று பொல்கஹவெல பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலாகும். 'பௌத்த மதத் தினை இழிவுபடுத்தும் வகையில் பல் வேறான ஆக்கங்களை வெளியிட்ட மையே அவருக்கெதிரான குற்றச்சாட் டாகும்.

இந்த முறைப்பாட்டின் மூலமாக ஷக் திக சத்குமாரவின் நூல்கள் 'ஆக்கங் களாக' ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதாகும். அவ்வாறு கூறுவ தற்கான காரணம் வேறொன்றுமில்லை, எமது விமர்சன பணி இதன் காரணமாக இலகுபடுத்தப்படுகின்றமையே ஆகும். நாம் இங்கு கலந்துரையாடுகின்ற விடய மானது, ஒரு மதத்திற்கோ, ஒரு இனத் துக்கோ அல்லது விசேடமானதொரு குழுவிற்கோ எதிராக குரோதத்தினை விதைக்கின்ற அல்லது இரத்தும் சிந்த வைக்கின்றதொரு சம்பவம் அல்ல. நாமிங்கு கலந்துரையாடுவது, நூலொன் றைப் பற்றியும் கதையாசிரியர் ஒரு வரைப் பற்றியுமே. ஓர் ஆக்கத்தினைப் பற்றியே, படைப்பாளி ஒருவரது சுதந் திரத்தைப் பற்றியாகும்.

எனவே, கருத்துத் தெரிவிக்கும் சுதந் திரம் என்பது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை யில் அதாவது கலைஞர் ஒருவரது கருத்து வெளிப்பாட்டு எல்லைக்குள் வைத்து எம்மால் கலந்துரையாட முடியும்.

கருத்து வெளிப்பாட்டு சுதந்திரமா னது முன்னேற்றம் அடைந்த நாடுகளி லும் சில சந்தர்ப்பங்களில் வரையறை செய்யப்படுகின்ற நிலை ஏற்படுகிறது. யுத்தம் இடம்பெறுகின்ற சந்தர்ப்பம் அதிலொன்றாகும். மற்றைய சந்தர்ப்ப மாவது, இனரீதியான மற்றும் சமய ரீதி யான குரோத்தினை உரைக்கின்ற போது. இவற்றைத் தவிர தனிநபர் இழிவுபடுத் தல்கள் அல்லது சமய ரீதியான, இன ரீதியான நிந்தித்தல்கள் தொடர்பாக பொதுவான சட்டங்கள் அனைத்து நாடு களிலும் காணப்படுகின்றன. எனவே, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் என் பது எந்தவொன்றையும் கூறுவதற்கு ஒரு வருக்குள்ள உரிமையாக கொள்வதற்கு எவ்வித வாய்ப்பும் இல்லை என எவரும் அறிவர். ஆயினும் மறுபுறம், அதே கூற்று, அதாவது சுதந்திரம் என்பது 'எந்தவொன் றையும் தெரிவிப்பதற்கான உரிமை யன்று' என்பது மிகவும் ஆபத்தான வகை யில் கலைஞரது படைப்புக்கான வெளிப் பாட்டுச் சுதந்திரம் மற்றும் சிந்தனை உரிமையினை பறித்துக் கொள்வதற்கும் அதிகாரம் படைத்த ஒருவரால் மிக இலகு வாக பயன்படுத்தக் கூடிய ஒன்றெ்ன் பதனையும் யாரும் அறிந்து கொள்வது அவசியமே.

இவ்விரண்டையும் வேறுபடுத்தி அடையாளம் காணக்கூடிய இரண்டு சந்தர்ப்பங்களைஇங்குகுறிப்பிடுகிறேன். 1939-1945 இரண்டாம் உலக மகா யுத்த காலப்பகுதியில் ஜேர்மனியில், போலந் தில் மற்றும் இன்னும் பல இடங்களில் அமைக்கப்பட்டிருந்த எரிவாயு அறை களில் இடப்பட்டு அறுபது இலட்சம் யூதர்கள் படுகொலை செய்யப்பட்ட ஒரு சம்பவம் உள்ளது. இச்சம்பவமானது அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங் கள் வாயிலாகவும், கடந்த காலத் தர வுகள், தகவல்களாகவும் இன்றும் உயி ரோட்டத்துடன் காணப்படுகின்ற பல் லாயிரக் கணக்கான மக்களது உயி ரோட்ட சாட்சியாகவும் உலகம் முழு வதும் காணக்கூடியதாகவுள்ள ஓர் உண் மைச் சம்பவமாகும். ஓர் இனத்தை இலக் காகக் கொண்டு மானிட வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட மாபெரும் அழி வாக கருதப்படுவது இந்தச் சம்பவ மேயாகும். அந்தச் சம்பவத்தினை ஒரு கற்பனையென்றோ அல்லது பொய் யென்றோ இன்று பகிரங்கமாகக் கூறு வது ஐரோப்பிய நாடுகளில் சிறைத் தண்டனை வழங்கக் கூடிய குற்றமாகும். இது முன்னேற்றமடைந்த நாடுகளில் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தினை வரையறை செய்துள்ள ஒரு சந்தர்ப்ப மாகும். அதன்படி, பல நாடுகளில் வலதுசாரி இனவாத அரசியல்வாதிகள் சிலர் கடந்த காலங்களில் அந்த நாடு களில் சிறையில் அடைக்கப்பட்டனர்.

மறுபுறம், 'கடவுள் இறந்துவிட்டார்' என பகிரங்கமாக கூறுவது எந்த வகை யிலும் தவறாகாது என இன்று முன் னேற்றம் கண்ட உலகம் கருதுவதற் கில்லை. அதாவது, 15ஆம் 16ஆம் நூற் றாண்டுகளில் அவ்வாறான கூற்று அல் லது அதற்கு குறைவான கருத்தையுடைய கூற்றாக இருப்பினும் 'மதத்தினை இழிவு படுத்தல்' என்ற கருத்தின் அடிப்படை யில் பல்லாயிரக்கணக்கான மக்களும் பெண்களும் தீயில் இட்டு கொளுத்திய ஓர் இனத்தின் முன்னேற்றமானது இன்று, முன்பு காணப்படாத இணக்கமான நிலைக்கு தேவாலயங்களும் கிறிஸ்தவ மதமும் இன்று மாற்றமடைந்துள்ளது.

அடுத்ததாக கடந்த ஒரு தசாப்த காலமாக மேற்கத்தேய தேவாலயம் எனப் படும் கூட்டுத்தாபனத்துக்குள் இடம்பெறு கின்ற பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர் பான குற்றச்சாட்டுக்கள் காரணமாக ஆயர்களும் கர்தினல்களும் சிறைக்கு சென்ற சந்தர்ப்பங்களை எம்மால் கேட்க கிடைத்தது. யாராயினும் மதகுரு ஒருவர் தொடர்பில் இவ்வாறான குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்ட உடனேயே அந்த சம்பவமானது நீதிமன்றிற்கு கொண்டு செல்வதற்கு முன்னரே குறிப்பிட்ட நப ருக்கெதிரான தடைகள் அறிவிக்கப்பட் டது தேவாலயங்களில் ஆகும். அவர்கள் அவ்வாறு செயற்படுவதற்கான கார ணம், தேவாலயம் எனப்படும் சமயத் தைப் பாதுகாப்பதற்கு விசேடமாக நவீன யுகத்தில் அவ்வாறான கடும் நட வடிக்கைகளை மேற்கொள்வது அத்தியா வசியமானது என்பதில் எவ்வித சந்தேக மும் இல்லை. ஆனாலும், எமது விகா ரைகள் தொடர்பில் நிலைமை அவ் வாறில்லை. விகாரைகள் அவ்வாறான விமர்சனங்களைப் பொறுத்துக் கொள்வ தில்லை. மதிப்புரைக்கும் விமர்சனத்திற் கும் தமது தர்மம் மிகவும் வெளிப்படை யானது என தெரிவித்த ஒரே மகான் புத்தபகவான் ஆவார். எனவே, வர லாற்று ரீதியாக பார்க்கின்ற போது பொறுமை என்பது தேவாலயங்களை விடவும் விகாரைகளிலேயே இருக்க வேண்டும். அவ்வாறிருக்கையில் புத்த பகவானுடைய சீடர்கள் என கூறிக் கொள்கின்ற புத்த துறவிகள் தற்போது அதற்கு புறம்பான வகையில் புத்தரின் போதனைகளுக்கு எதிராகவே செயற் படுகின்றனர். ஷக்திக சத்குமாரவிற் கெதிராக • குற்றஞ்சாட்டுகின்ற இந்தத் தேரர்கள் அந்த பிரிவிற்குரியவர்களாவர்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனத்தின் கீழ் ஷக்திக சத்குமாரவுக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இலங்கை அந்த சாசனத்தில் ஒரு பங்குதாரர் என்ற கார ணத்தினால் அவ்வாறு செய்வதற்கான வாய்ப்பு அதிகாரிகளுக்கு உண்டு. ஆயி னும், இந்த எழுத்தாளருக்கு தண்டனை வழங்குவதே அதிகாரிகளின் தேவைப் பாடாக இருந்திருந்தால், இந்த சர்வதேச சாசனத்தினை கையாளாமல், அதனை எமது குற்றவியல் தண்டனைச் சட்டத்தின் 291 (ஆ) பிரிவின் கீழ் வழங்கியிருக்கலாம்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாதத்தை பலியெடுப்பது எப்படி?

## உலகுக்கு காண்பித்த இரும்புப்பெண்மணி!

● ஆறிலன்



நல்லாட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு நாட்டில் நல்ல தலைவனின் பண்புகளை அறிந்துகொள்வது மிகக்கடினம். நாடு இக்கட்டான சூழலை எதிர்கொள்ளும்போதுதான் ஒரு ஆளுமை மிக்க தலைவனின் திறமையை மதிப்பீடு செய்துகொள்ளமுடியும். அவனது முடிவெடுக்கும் திறன் முதல் "இவனை நம்பி இந்த நாட்டை ஒப்படைக்கலாமா" என்ற அடிப்படை கேள்விவரை பல விடயங்களை ஒரு சராசரி வாக்காளன் மௌனமாக அவதானிக்கிறான்.

அந்த வகையில், பேரிடர்கள் வந்தபோதெல்லாம் எந்தவிதமான அரசியல் தெளிவுமில்லாமல் நிலைமைகளை போட்டுடைத்த பல தலைவர்களை நாங்கள் கண்டிருக்கிறோம். அதுவும் தெற்காசிய அரசியலில் இப்படிப்பட்ட அரசியல் தலைவர்களை காண்பதற்கு பற்றாக்குறையே இராது.

ஆனால், இவற்றுக்குள்ளிருந்து விலத்திப் பார்க்கவேண்டிய ஒரு ஒளிக்கீற்றாக அண்மையில் வெளிப்பட்டவர் நியூஸிலாந்து பிரதமர் ஜஸின்டா ஆர்டன்.

ஏனென்றால், நியூஸிலாந்தில் இடம்பெற்ற படுகொலைப்படலத்தை இலகுவாக கடந்துசென்றுவிடமுடியாது. வெள்ளையின வெறிபிடித்த - தீவிர வலதுசாரி அரசியல் கொள்கையில் ஊறித்திளைத்த - முஸ்லிம் இனத்தின் மீது தீராத வன்மம் கொண்ட - கொடூர மனம் படைத்தவன் ஒருவன் திட்டமிட்டு அரங்கேற்றிய படுகொலைப்படலம் அது. அதுவும் தான் செய்கின்ற இந்தக்கொடுங்காரியத்தை உலகமே பார்க்கவேண்டும் என்றும் அதன் மூலம் தனது கொலையின் பின்னணியில் தான் முன்வைக்கின்ற காரணத்தை உலகுக்கு கூறவேண்டும் என்றும் மிகத்துல்லியமாக திட்டமிட்டே அந்தப் படுகொலை படலத்தை அவன் செய்துமுடித்திருந்தான்.

இப்படியான படுகொலைகளை புரிகிறவர்கள் அநேகமாக தங்களது இலக்கை அடைந்தவுடன் தற்கொலை செய்துகொள்வார்கள். இல்லாவிடின், யாராவது தம்மை கொலைசெய்யும் வரையாவது தாக்குதலை நடத்திக்கொண்டிருப்பர். ஆனால், இந்தக் கொலையாளிக்கு தனது படுகொலை படலத்தின் பின்னரும் உயிரோடிருக்கவேண்டும் என்ற திமிர் இருந்திருக்கிறது.

இது ஒருபுறமிருக்க -

இப்படிப்பட்ட ஒரு சம்பவம் இடம்பெற்ற நாட்டில் இந்த சம்பவத்தினால் ஏற்பட்ட பதற்றத்தை தணிப்பதென்பது மிக மிகக்கடினமானது. தாக்குதல் நடைபெற்றவுடன் அங்கு விரைகின்ற பொலிஸ் வாகனங்களும் உயர் ரக துப்பாக்கிகளுடன் குவிகின்ற பொலிஸாரும் அவர்களின் நாய்களும் உயர் தொழில்நுட்ப கருவிகளும் ஊடகங்களில் பார்க்கும்போது ஒரு நாட்டின் அனர்த்த முகாமைத்துவத்திலுள்ள மேன்மையை காண்பிக்கிறது. எதிர்பாராத ஒரு சம்பவம் இடம்பெற்றால் அங்கு சென்று செய்யவேண்டிய சம்பிரதாயமான சம்பவங்கள்தான் இவை. அதாவது, வீட்டில் பொருள் ஒன்று கீழே விழுந்து உடைந்துவிட்டால் அதைக்கூட்டி அள்ளுவது போன்றதொரு செயற்பாடு.

அனர்த்தங்களுக்கு பிறகு அரசாங்கங்கள் காண்பிக்கும் இப்படியான நடவடிக்கைகள் எதுவும், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாட்டு மக்களின் மனங்களில் ஏற்பட்ட பதற்றத்தை இலகுவில் தணிப்பதில்லை. மாறாக, தாங்கள் சுதந்திரமாக திரிகின்ற வீதிகளில் திடீரென்று சீருடைகளில் திரியும் இராணுவத்தினராலும் பொலிஸாரினாலும் பொதுமக்கள் மேலும் அச்சத்திற்குள்ளாகிறார்கள். அடுத்தது என்ன என்ற பீதியில் உறைந்துபோகிறார்கள்.

அதற்காக அந்தச் சீருடையினர் தங்களது கடமையை செய்யாமல் விடவும் முடியாது. ஆனால், இப்படிப்பட்ட அழிவு - அனர்த்தம் போன்றவற்றிலிருக்கின்ற விளைவுகளில் இருந்தும் அவை உற்பத்தி செய்கின்ற அச்சத்திலிருந்தும் நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பதும் நேர்வழியில் நடத்துவதும்தான் ஒரு நாட்டுத்தலைவனினதும் பொறுப்புமிக்க அரசாங்கத்தினதும் உயரிய திறனாகிறது.

நியூஸிலாந்து பிரதமர் ஜஸிண்டா ஆர்டன் என்ற 38 வயதான பெண் அதனைச் செய்து காண்பித்திருக்கிறார்.

2008 ஆம் ஆண்டு முதன் முதலாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட ஜஸிண்டா ஒன்பது வருடங்களிலேயே அரசியலின் உச்சத்தைத்தொட்டார். 2017 ஆம் ஆண்டு நியூஸிலாந்தின் 40 ஆவது பிரதமராகப் பதவியேற்றார். இவர் பிரதமராக பதவியேற்றபோது வழக்கம்போல பல புறுபுறுப்புக்கள் பெண்ணை - அதுவும் 38 வயதுக்காரியை - நம்பி நாட்டை ஒப்படைப்பதா என்ற உட்குடைச்சல்கள் எல்லாம் கட்சிக்குள் இருக்கத்தான் செய்தன. எல்லாவற்றையும் மீறி நியூஸிலாந்தின் தொழிலாளர் கட்சி அவரை பிரதமர் வேட்பாளராக நிறுத்தி சாதித்தது.

இவ்வாறான ஒரு இறுக்கமான தலைமைத்துவப் பண்புடன்தான் அண்மையில் கிறைஸ்ட் சேர்ச்சில் இடம்பெற்ற படுகொலைச்சம்பவத்துக்கு எதிரான அரச எதிர்ப்பையும் வீதியில் இறங்கி நின்று தன் கையிலெடுத்தார்.

தனது நாட்டில் குறிப்பிட்டதொரு சமூகத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருக்கும் பாரிய படுகொலை சம்பவத்தினால், நாட்டு மக்களே பீதியில் உறைந்துபோயுள்ளனர் என்பதற்கு அப்பால், குறிப்பிட்ட சமூகத்தவர்கள் அச்சத்தில் கிடக்கிறார்கள் என்பதை கூர்மையாக உணர்ந்தார்.

உடனடியாக முஸ்லிம் மக்கள் வழிபாடு நடத்துகின்ற பெரும்பாலான இடங்களுக்கு சென்று அவர்களுடன் சென்று பர்தா அணிந்துகொண்டு வழிபாட்டில் ஈடுபட்டார். நியூஸிலாந்து நாடாளுமன்றத்துக்கு இஸ்லாமிய மதகுருவை அழைத்து வந்து கிறைஸ்ட் சேர்ச்சில் இறந்த மக்களுக்கானபிரார்த்தனையை மேற்கொண்டார். துப்பாக்கித்தடைச்சட்டத்தை கொண்டுவருவதாக உடனடியாக அறிவித்தார். அண்மையில் பிறந்த தனது குழந்தையை பெற்றோரிடம் சேர்ப்பித்துவிட்டு, தனது தனிப்பட்ட குடும்ப வாழ்வை ஓரமாக வைத்துவிட்டு நாட்டின் பதற்றத்தை உணர்ந்து ஒவ்வொரு இடமாகச் சென்று மக்களை சந்திப்பதில் அதிக நேரத்தை செலவிட்டார்.

நியூஸிலாந்து எனப்படுவது பல்லின மக்கள் வாழும் நாடு. இங்கு தீவிரவாததுக்கு இடமில்லை. எந்த இனமும் ஒன்றை விட மற்றையது உயர்ந்ததில்லை. இங்கு சகல இன மக்களும் பாதுகாப்புடன் வாழ்வதென்பது நிச்சயிக்கப்பட்ட ஜனநாயக உரிமை. அதனை உத்தரவாதம் செய்து தருவது தனது கடமை என்று மக்களின் மனங்களில் தெம்பூட்டினார். துணிவைக் கொடுத்தார்.

பயங்கரவாதத்தினை தோற்கடிப்பது என்பது கத்திக்கு கத்தி - கொலைக்குக் கொலை என்ற ரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற பழிவாங்கும் நடவடிக்கை அல்ல. ஒன்றிணைந்த மக்கள் சக்தியின் மனத்திடத்தினால் பயங்கரவாதம் என்ற கொடூர மிருகத்தின் நகங்களையும் பற்களையும் நறுக்கி எறியமுடியும் என்று உறுதியாக நம்பினார். அதை மக்களிடமும் கொண்டு போய் சேர்த்தார்.

உண்மையைச் சொல்லுங்கள்!

இன்று எத்தனை அரசியல் தலைவர்கள் இவ்வாறானதொரு ஆளுமைப் பண்போடு வீதியில் இறங்கியிருக்கிறார்கள்?

எந்த ஒரு நாட்டில் அனர்த்தம் நடந்தாலும் தேசிய ஊடகங்களில் வந்து நின்று சோகம் வழிந்த முகத்தோடு ஒரு ஊடகக் குறிப்பை கொடுக்கிறார்கள். அநியாயத்துக்கு வருத்தம் தெரிவிப்பார்கள். மிஞ்சிமிஞ்சிப்போனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு கொடுப்பார்கள். இதுதானே வழமை.

பயங்கரவாதத்துக்கான எதிர்ப்பென்பது முழுக்க முழுக்க மனவெளிகளில் நடத்தப்படவேண்டியது. அதுதான் நிரந்தரமானது. எவ்வளவுதான் இரத்தவெறியாட்டம் செய்தாலும் ஒற்றுமைப்பட்ட மக்கள் அந்த அழிவிலிருந்து மீண்டு வருவார்கள் என்ற செய்தி மீண்டும் மீண்டும்பயங்கரவாதிகளுக்கு சொல்லப்படவேண்டும். மக்களது ஒற்றுமைக்கு முன்னால் பயங்கரவாதம் என்பது வெறும் துரும்பு என்பது திரும்ப திரும்ப இப்படியான சம்பவங்களின் பின்னால் இடித்துரைக்கப் படவேண்டும்.

நியூஸிலாந்து பிரதமர் இதனைச் செய்து காட்டினார். தனது நாட்டு மக்களை தன்னோடு திரட்டிக்கொண்டு உலகுக்கே முன்மாதிரியாக நின்றார். ஆனால், எல்லா நாடுகளும் அதன் தலைவர்களும் அவ்வாறான துணிச்சல் மிக்கவர்களா? ஆளுமைப்பண்பு கொண்டவர்களா என்பதுதான் இங்கு கேள்வி.

இதனைத்தான், அண்மையில் "த ப்ரொஜெக்ட்" என்ற நிகழ்ச்சியல் ஆஸ்திரேலிய பிரதமர் ஸ் கொட் மொறிஸனை அழைத்து வந்து செவ்வி கண்ட ஊடகவியலாளர் வலீட் அலி மூஞ்சியில் அடித்ததுபோல கேட்டு மக்களின் முன்னால் உரித்து வைத்தார்.

இந்த செவ்வி இடம்பெறுவதற்கு முன்பே - கிறைஸ்ட்சேர்ச் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றவுடன் - ஊடகவியலாளர் வலீட் அலி "த புரொஜக்ட்" நிகழ்ச்சியில் வெளியிட்ட சிறப்பு ஆய்வுக் குறிப்பில், ஆஸ்திரேலியாவில் இப்படியான தாக்குதல் அச்சமுள்ளதா என்பது பற்றி ஆராய்ந்தார். அதில், ஆஸ்திரேலியாவில் முஸ்லிம் மக்கள் தொடர்பான விவகாரத்தை சரியாக கையாளத்தெரியாத பிரதமர் உட்பட ஆளும் கட்சியினர் அதில் குளிர்காயப்பார்க்கிறார்கள் என்ற சாரப்பட ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தார். தனது கருத்துக்கு ஆதாரமாக ஊடகவியலாளர் வலீட் அலி ஒரு பட்டியலைப் போட்டு பிரதமரிடம் நேரடியாகக் கேட்டார்.

- இஸ்லாத்தின் பெயரால் மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்களை ஆஸ்திரேலியாவிலுள்ள முஸ்லிம் தலைவர்கள் பெயரளவில் கண்டிக்கிறார்களே தவிர, அது தொடர்பில் அவர்களுக்கு கரிசனை எதுவும் கிடையாது என்று ஆஸ்திரேலியாவில் பிரதமர் கூறுகிறார்.

- உள்துறை அமைச்சர் பீற்றர் டட்டன் கூறும்போது 70 களில் லெபனான் மக்களை ஆஸ்திரேலியாவுக்குள் அனுமதித்ததில் அப்போதைய ஆஸ்திரேலிய அரசு மிகப்பெரிய தவறிழைத்துவிட்டது என்கிறார்.

- கிறைஸ்ட்சேர்ச்சில இடம்பெற்றது போன்ற தாக்குதல்கள் எதிர்பார்க்கக்கூடியதுதான் என்று அந்த இரத்த வெறியாட்டத்தை கிட்டத்தட்ட ஆதரித்து கருத்து வெளியிட்டு 17 வயதுச் சிறுவனால் முட்டையடி வாங்கிய பிரேஸர் அனிங்கிற்கு ஆளும் லிபரல் கூட்டணியிலுள்ள ஏழுக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே கைலாகு கொடுத்து வாழ்த்துக்கிறார்கள்.

இவை மாத்திரமல்ல, ஆஸ்திரேலிய அரசியல்தரப்பில் முஸ்லிம்கள் விவகாரம் மற்றும் பயங்கரவாதம் ஆகியவை தொடர்பில் இவ்வளவு பொறுப்பற்றதனமாக கருத்துவெளியிட்டுக்கொண்டு -

இங்கு மக்களிடையே ஒற்றுமையை கொண்டுவரவேண்டும். பயங்கரவாதத்தினை ஒன்று சேர்ந்து எதிர்க்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதில் என்ன பயனிருக்கிறது என்று கேட்டார் வலீட் அலி.

பிரதமர் ஸ்கொட் மொறிஸன் ஏதேதோ சமாளிப்புக்கள் எல்லாம் சொல்லி ஒருவாறுதனதுபதிலைதாளித்துக்கொடுத்தார்.

இங்குதான் நியூஸிலாந்து பிரதமருக்கும் ஏனைய நாட்டுத்தலைவர்களுக்குமான வித்தியாசங்கள் விசித்திரமாக வெளித்தள்ளியவாறு தெரிகின்றன.

அதாவது, மக்களிடம் ஏற்படவேண்டிய மிகப்பெரிய மாற்றங்களாக எதிர்பார்க்கப்படும் விடயங்களை அரசியல் ரீதியாக அமுல்படுத்தமுடியாது. அது மிகப்பெரியதொரு சமூகச்செயற்பாடு. தலைவர்களாக தங்களை பிரகடனப்படுத்துபவர்கள் முதலில் தங்களிலிருந்து அந்த மாற்றத்தை ஆரம்பிக்கவேண்டும். இதய சுத்தியுடன் இந்த அரசியல் மாற்றம் நிகழவேண்டும்.

அந்தவகையில், சமகாலத்தில் நியூஸிலாந்து மற்றும் கனடியப் பிரதமர்கள் இளம் சமுதாயத்துக்கான உதாரணத்துக்குரிய ஆளுமைளாக தொடர்ந்தும் வெற்றியீட்டியவண்ணமுள்ளார்கள். ■



● ஆத்மீ

# ஈரநிலம்

நிலம் 13

"தாயு.. தாயு, எங்கடா இருக்கிறாய்.." என்று யார் யாரோ வெல்லாம் கூப்பிட்டுக்கொண்டிருப்பதும், தேடி அலைவதும் ஆங்காங்கே கேட்டுக்கொண்டிருக்கிறது. ஆனாலும், அது எதற்கும் பதில் கிடைப்பதாகத் தெரியவில்லை.

எங்கிலும் புகை சுற்றிக்கொண்டிருந்தது. அந்த மண்டலத்தை விலக்கி விலக்கி, சிதைந்தும், சிதறியும் கிடக்கும் மண்மேடுகளுக்குள்ளும், காவலரண் இடைகளுக்குள்ளும் தம் சகாக்களை தேடிக்கொண்டிருந்தார்கள். அந்தத் தேடல்களில் சிலது நம்பிக்கையற்றதாயும், சிலவற்றில் அரைகுறை தேடல்களும் ஒளிந்திருந்தன. என்ன செய்ய? எங்கே தேட? காணாமல் போயிருக்கும் தம் சக போராளிகளை கண்ணீர் செரிக்க வைக்கும் புகை மண்டலத்தின் நடுவிலும் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அந்த தேடலில், சில பொய்த்து விட்டன. வந்து விழுந்திருந்த கொத்துக் குண்டுகளின் தாக்குதல் கோரமாய் அந்த இடத்தையே சிதைத்திருந்தன. எங்கிலுமே குண்டுச் சிதறல்கள் அறுத்து விட்டிருந்தன. எல்லா இடங்களும் முண்டங்களாகத் தொங்கிக்கொண்டிருந்தன.

அந்த இடைகளின் செருகல்களிலிருந்து சில போராளிகளின் உடற்பாகங்கள் கிடைத்திருக்கின்றன. அவைகள் பார்க்க முடியாதளவுக்கு வேதனையை கொட்டி விட்டிருக்கிறது அவர்களுக்கு. வேதனையைக் கொடுத்திருந்தால் மட்டுமில்லை வெறியையும் உக்கிர கோபத்தையும் கொடுத்திருக்கிறது. எத்தனை வலிகள் இழப்புக்கள்? எல்லாவற்றையும் எப்படி எம்மால் தாங்கிக்கொள்ள முடியும்? அழுதுகொண்டும் கத்தி கூப்பாடு போட்டுக்கொண்டும், குண்டு கொன்றவர்களை, குதறியவர்களையும் தேடிக்கொண்டிருந்தார்கள்.

கொத்துக்குண்டுகள் வெடித்துச் சிதறி கொஞ்ச நேரம் ஆகியிருந்தாலும், அந்தக் குண்டுகளின் கோரத்தாண்டவம் அதிகமாய் இங்கு பதிவாகி விட்டது.



மீண்டும் தாயகனைத் தேடும் கூப்பாடு கேட்கிறது.

"தாயு.. தாயு, எங்கடா.. என்னாச்சு...?" வோக்கி டோக்கி எங்கோ அலறுகிறது. அதிலும், அவனைத் தேடிய குரல்கள், சங்கேத வார்த்தைகளினால் ஏதேதோ பேசிக்கொள்கின்றன. சிலவற்றை கண்டுகொள்ள முடியவில்லை. உணர்ந்துகொள்ளவும் அறிவில்லை.

பச்சைப் புல்மோட்டை வெளிகளில் அப்பொழுது நடத்தி முடிக்கப்பட்டிருந்த கொத்துக்குண்டு தாக்குதலினால், அளவுக்கு மீறிய இழப்பு இவர்களிடத்தில் ஏற்பட்டிருந்தது. அந்த இழப்புக்களில் போராளிகள் பலர் வீரச்சாவடைந்து விட்டார்கள். பலரின் வித்துடல்கள் கூட கிடைக்கவில்லை. சிலரது உடற்பாகங்கள் மட்டும் தான் கிடைத்திருந்தன. இன்னும் மீதமானவர்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

கிடைக்கவில்லை. கிடைப்பதற்கான அறிகுறிகளும் தோன்றவில்லை.

புகை மண்டலத்தின் இடைகளில், எங்காவது தாயகம் இருப்பதற்கான அடையாளம் தெரிகிறதா என்று, அவனோடு ஒன்றாக விருந்த தீரன் தேடிக்கொண்டிருந்தான்.

இல்லை எங்கும் அவன் தென்படுவதை தெரியவில்லை. அந்த தேடலில் பயனிருப்பதாயும், அதன் முடிவில் அவன் கண்டு பிடிக்கப்படுவான் என்றும் தீரனுக்குத் தோன்றவில்லை. உடைந்து, சிதறியும் கிடக்கும் ஒவ்வொரு பங்கராகத் தேடியும், அழைத்தும் பார்த்தபடி அலைகிறான் தீரன்.

பெரும்பாலானவர்களை கொண்டுவிட்டார்கள். சிலரின் உடல்களை அப்புறப்படுத்திக் கொண்டு இன்னொரு அணி நகர்கிறது. ஒரு புறத்தில், அவர்கள் உள்நுழைவதற்காக அடிக்க ஆரம்பித்திருந்தார்கள். அதைத் தாக்குப் பிடிப்பதா, இங்கு தொலைந்து போனவர்களை கண்டுபிடிப்பதாவென்று ஒரே குழப்பம்.

ஆனாலும், ஒரு சிலர் சிறு சிறு குழுக்களை இணைந்து, குண்டு ஒன்றினால் தொலைந்து போனவர்களை தேடிக்கொண்டிருந்தார்கள்.

சுற்றுமுற்றும் வெறுமையும் கந்தகம் சுமந்து சுற்றும் காற்றுமே வீசிக்கொண்டிருந்தன. கண்டு கொள்ளும் அளவுக்கு அவைகளைத் தவிர எந்த சஞ்சாரங்களுமில்லை.

மீண்டும் தூரத்தில் ஷெல் கூவுவதும், வீழ்ந்து வெடித்துப் பறப்பதுமான அரவம் கேட்கிறது. இந்தப் பக்கத்தை அடுத்து குறிவைப்பதற்கு நேரம் போகாது என்பது அனைவருக்கும் தெரியும். ஆனாலும், தேடிக்கொண்டேயிருக்கிறார்கள். தாயகன் மட்டும் தென்படுவதாகத் தோன்றவில்லை.

தீரன் அழைக்கிறான்.

"தாயு.......... தாயு....." என்று ஆரம்பிக்கையில், அவன் நின்றிருந்த இடத்துக்கு அப்பாலிருந்த பங்கர் வாசலில் தாயகனின் சாரம் கிழிந்து கிடந்தது. அந்த சாரத்தை தீரனும் ஒருநாள் கட்டியிருக்கிறான். அதே சாரம் பங்கரின் வாசலில் பாதியாகக் கிழிந்து கிடக்கிறது.

அப்போ... தாயகன்.... என்றபடி, வாசலுக்கு ஓடுகிறான்.

அங்கே... !!!

(நனையும்..)

# "அரைச்சாண் துண்டும் அரையிலை கிடவாது"


திரும்பவும் வேதாளம் முருங்கை மரத்திலை ஏறப்போகுது போலை கிடக்கு. மரத்துக்குக் கீழை நிண்டு ஏறக் குறி பாக்கிற மாதிரித் தெரியுது. என்ன நடக்கப் போகுதோ தெரியாது. திருப்பியும் ஆரோ மைத்திரியைக் குழப்புறாங்கள். 2020 க்கு முன்னம் ஆள் தன்ரை ஜனாதிபதிப் பதவியை றிசைன் பண்ண வெளிக்கிடுது போலை கிடக்கு.

இதுக்கை "நான் தமிழற்றை வாக்குகள் இல்லாமல் நான் ஜனாதிபதியா வந்து காட்டுறன். அதுக்கு முன்னாலை அமெரிக்காவுக்கு ஒருக்கா ஓடிப்போய் என்ரை இரட்டைக் குடியுரிமையை வெட்டிப் போட்டு வாறன் அண்ணை," எண்டு மஹிந்தாட்டைச் சொல்லிப் போட்டுப் போன கோத்தா அமெரிக்காவிலையே சிக்குப்பட்டு, திக்கித் திணறித்தான் வந்ததாக் கேள்வி. அவருக்கு எதிரா வழக்குகள் போடப்பட்டதால, அந்த வழக்குகள் முடியுமட்டும் ஆளுக்கு அமெரிக்கன் சிற்றிசனை வெட்ட முடியாது. அங்கை தனக்கு வழக்குகள் இருக்கிறதைத் தெரியாமைப் போய் மாப்பிளை மாட்டியிருக்கிறார் போலை கிடக்கு.அங்கை இவருக்கு அவற்றை முன்வினையள் காத்துக் கொண்டிருந்தது தெரியாது போலை. அரசன் அன்று கொல்லுவன். கடவுள் நின்று கொல்லும். "இந்த விசியத்திலை பல தடவை தங்கடை சொல்லைக் கேளாமல் கோத்தா சேட்டை விட்டவர் எண்ட கடுப்பிலைதான் அமரிக்கன் உந்த வேலையைச் செய்திருக்கிறான்போலை" எண்டு முதலி சொல்லுறான்.

பிராந்து போய் கோழிக்குஞ்சைக் குறி வைச்சுத் தூக்கிறமாதிரி பின் லேடனைத் தூக்கிக் கொண்டு வந்து ஆளின்ரை விலாசம் இல்லாமலே கடலுக்கை போட்ட அமெரிக்காவோடை சேட்டைவிடவோ? விடுவானோ? அமத்திப்போட்டான். இருந்து பாருங்கோவன் கடைசியா இருக்கிற ஒரு முழக் கோவணத் துண்டையும் எழுதி வாங்கிறமாதிரி உவரிட்டை எல்லாத்தையும் எழுதிக் கொண்டிசன் போடாமல்அமெரிக்கன் ஆளை விடமாட்டான். சைனான்ரை சொல்லைக் கேட்டுப் போட்டு மஹிந்தான்ரை வம்சம் எல்லாரும் சேந்து அவனோடை மிண்டிப் போட்டினம் எல்லே! இனி அவன் விடான். றம்பும் விடான். சீ.ஐ.ஏ யும் விடாது. துரத்தித் துரத்திக் கடி நாய் மாதிரித்தான் கடிப்பங்கள். காந்தியைக் கடைசி வரையும் கொண்டந்திட்டுக் கடைசியிலை முடிப்பிச்சவங்கள். மாத்தவேணும் எண்டு நினைச்சாங்களோ மாத்திப்போடுவங்கள். சைனாக்காரனிலை ஒரு குணம். தோக்கப் போறன் எண்டு கண்டால் நடுவிலை விட்டிட்டுப் போயிடுவன்.அப்பிடிப் போகப்பிடாது. அப்பிடிப்போனால் மற்றவை கஷ்டப்போயினமே எண்டு பாரான். அரைகுறையா எண்டாலும் விட்டிட்டுக் கண்ணை இறுக்கி மூடிக்கொண்டு போயிடுவன். ஐ.நாவிலை எண்டால் சீனா உவைக்காக வீட்டோவைப் பாவிக்கும். இது இப்ப அமெரிக்காவின்ரை உள்வீட்டுப் பிரச்சினை மாதிரி எல்லே போச்சுது?

இப்ப உடனை எலக்சன் வரப்போற மாதிரியும் ஒரு கதை இருக்கு. ஆனால் இனி மைத்திரியையோ இல்லாட்டி அந்தாளைப் போலையோ ஒராளையோ கொண்டு வாற யோசனை சந்திரிக்காக்கு இருந்தால் அதை அவ விட்டிடவேணும். ஏனெண்டால் அந்தாளைக் கொண்டு வந்திட்டு அவ மட்டுமில்லை இந்த நாடே அல்லல்பட்டது எல்லாருக்கும் தெரியும்.

ஆனபடியாலை அவவும் அவவைச் சேர்ந்தவையும் இந்தமுறை அந்த விசியத்திலை கவனமாக இருப்பினம் எண்டுதான் நினைக்கிறன். ரணிலும் தன்ரை வழமையான நரிக்குணங்களைக் கைவிட்டிட்டு நாட்டின்ரை நன்மையைப் பற்றி யோசிச்சால் நல்லது. இது அதை விட்டிட்டு அவர் சீனாவின்ரை வாலைப் பிடிச்சுத் தொங்க. இவர் அமெரிக்கான்ரை வாலைப்பிடிச்சுத் தொங்க. அப்பப்ப இந்தியாக்காரன் வெருட்டேக்கை திருப்பதியைக் கும்பிடப் போறம், சாயிபாபாட்டைப் போறம் எண்டு சொல்லிக் கொண்டு அவனோடை போய் ஒருக்காப் படுத்திட்டு வாறது. இரண்டு பக்கத்திட்டையும் உந்தக் குரங்குக் குணம் இருக்கு.



இனிவாற ஜனாதிபதி எலக்சனிலை ஒரு தரமான நிர்வாகியை நாங்கள் சபைக்குக் கொண்டுவராட்டி சிங்களவன், தமிழன் எண்டு இல்லாமல் எல்லாரும் செத்தம். எல்லாரும் எங்களிலை ஏறிக் குதிரை ஓடிப்போட்டுப் போயிடுவங்கள். நாட்டை அடைவு வைச்சுத் திண்டிடுவங்கள். பிறகு கட்ட அரைச்சாண் துண்டும் அரையிலை கிடவாது.

– வில்லங்கம் விநாசி

# தமிழ்ப்புத்தா
# வழியில்லாத,

● செந்தூரி

ஆரியமும் - இந்துத்துவமும் சேர்ந்து மலிவுவிலையில் விற்கின்ற, "பிரபவ" தொடங்கி "விய"வில் முடிகின்ற 60 ஆரிய ஆண்டுகளும், அசூசை கலந்த புராண நம்பிக்கையையே பின்னணியாக கொண்டுள்ளன! மகாவிஷ்ணு, நாரதரைப் பெண்ணாக்கி செயற்கரிய புணர்ச்சி முடித்து பெற்ற குழந்தைகள் தானாம், இந்த 60 ஆண்டுகளின் பெயர்களும் என்று சொல்கின்றது புராணம்.

தமிழனைத் தலையெடுக்க விடாத, திராவிடத்தின் ஏனைய இந்தியப் பங்காளிகளுக்கும் எல்லாம் சித்திரை முதல் நாளிலேயே வருடம் பிறக்கிறது, இலங்கையின் பேரினவாத சிங்களத்துடன் சேர்த்து? மலையாள தேசம் விஷூ திருநாளையும் (கனி காணும் திருநாள்), கன்னட மற்றும் தெலுங்கு தேசம் - யுகாதி திருநாளையும், பௌத்தம் - இந்துத்துவ சித்திரை புத்தாண்டையும் இதே மாதத்திலேயே கொண்டாடிக் களிக்கின்றனர்.

சித்திரை முதல்நாள் ஆரியரின் வருடப்பிறப்பு - இந்து மார்க்கத்தின் 12 மாதங்களின் முதல் மாதம் சித்திரையாக கொள்ளப்படுகின்றது. தமிழர்களின் கணிப்புக்களின் படி, உழவுத்தொழிலை முதன்மைப்படுத்திய பருவகால மாற்றங்களை வரிசைப்படுத்திய வருடக்கணிப்பு - தை முதல்நாளை தமிழர்களின் வருடத்தொடக்கமாக, தமிழ்ப்புத்தாண்டாக வரையறுக்கின்றது. சமவிடத்தில், ஈழத்தமிழர்களினதும் தாய் நெறி வீரசைவம், இந்துத்வம் இல்லை என்பது கவனிக்கத் தக்கது.

தமிழக அரசியலில் தென்னிந்தியர்கள் என்ற வாதம் இந்தி எதிர்ப்புக்கான பொதுவியல்பாக தேவைப்பட்ட போது எழுந்ததுதான் "திராவிட" உதயம் உட்பட்ட திராவிட கட்சிகள். அயல் மாநிலத்தவர்களான கேரளர்கள், தெலுங்கர்கள், கன்னடர்களை உள்ளடக்கிய திராவிடக் கோஷம் முல்லைபெரியாற்றை உடைக்கவும் முடக்கவும், காவிரியை தடுக்கவும், மத்தியில் அதிகார மமதையில் தமிழனை நசுக்கவும் தமிழகத்தோரை தவிர ஏனைய யாவர்க்கும் உதவியது.

அதே திராவிடத்தின் எதிர்த் தரப்பாக கோடிடப்படுகின்ற "ஆரியம்" குறித்த தெளிவான வரையறைகளை பேண முடியாமல் மதக்கலப்புக்குள்ளானதன் காரணமாகவே, பகுத்தறிவு இயக்கங்கள் தமிழர்களிடம் செல்வாக்குப் பெற்றன. "ஒரிசா", "பாட்னா"விலிருந்து குடியேறியவர்கள் என்று தமது வந்தேறிப் பிறப்பை வெட்கங்கெட்டு ஒப்புக்கொண்டவர்களின் வருடம் தொடங்கும் நாளில் நாமும் போய் ஒட்டிக்கொள்ளுமளவுக்கு சுயமில்லையா எம்மிடம்? ஆரியர்களான விஜயனும் தோழர்களும் தேசப்பிரதிஷ்டம் செய்யப்படு முன்னரே நிலையான நாகரிகத்துடன் ஈழத்தில் வாழ்ந்த எம்மினம் கொண்டாட்டத்தால் ஒட்டியிருப்பது ஆரிய-இந்துத்வ சதிகளில் ஒன்று!

இனங்களின் உரிமைகளுக்காக சிறியதொரு விட்டுக்கொடுப்பை கூட ஆற்றாமல், மத ரீதியான துவேசத்துடன் அண்மைக்கால அடக்குமுறைகளை ஏவிவிட்டு சிலிர்க்கும் மாற்றானின் இரவல் கொண்டாட்டம் நமக்கெதற்கு? இன்னொரு மக்கள் குழுமத்தின் பெருநாளை கொண்டாடுவதில், எந்த நட்டமுமில்லைத்தான்! ஆனாலும், ஏன் "தமிழ்" என்ற அடைமொழி கடுமையாக உறுத்துகின்றது? கன்னட, தெலுங்கு, மலையாள, பாளி பெற்ற கூட்டுமொழிகொண்ட சிங்களவர்கள், அண்மைய நாட்களில் "'சிங்கள - இந்துப் புத்தாண்டு" என்று பாவிக்கத்தொடங்கியிருப்பதை கவனிக்க நேரமிருக்கிறதா எமக்கு?

இன்றைக்கும் எம்மூதாதை இராவணன் கொல்லப்பட்டதை, பொம்மை கட்டி எரித்து அரக்கர் குல அழிவாக கொண்டாடிக் கொண்டிருக்கும் வடஇந்தியர்களின் சம பாரம்பரியத்தில் வந்த சிங்ஹல புதுவருடம் எமதில்லை! "சமஸ்கிருதம்", "பஞ்சாங்கம்", "ஆரியம்", "இந்துத்வம்" என்று தமதில்லாத இரவல் புடவைகளில் கொய்யாணம் கட்டி அழகு பார்க்கும் சமூக மடமைகளிலிருந்து வெளிவரும் நேரம் இது.

இவர்கள் யாவரினதும் இதிகாசங்கள் முறையற்ற பிறப்பாக விபரிக்கின்ற, ஒரு யுகம் (அதிலிருந்து திரிந்ததே, உகாதி / யுகாதி) எனப்படும் 60 ஆண்டுப்பெயர்களினதும், வடமொழி வார்த்தைகளின் தமிழர்த்தங்கள் யாவை? மூன்றாவது ஆண்டு - சுக்கில, 23வது - விரோதி, 33வது - விகாரி, 38வது - குரோதி, 54வது -ரௌத்ரி, 55வது - துர்மதி, இந்த 60 வருடங்களினது தமிழாக்கங்கள் பாதிக்கு மேல் நன்மையல்லாத தீயனவற்றை காட்டி பயமுறுத்தும் வழக்கமான ஆரிய மாயையே தான்?

பண்டிகையோ திருநாளோ எப்போதும் துன்பமில்லாதது தான். ஆனால், திட்டமிடப்பட்டு - திணிக்கப்படுகின்றவை தொடர்பில், தூங்கும் போதும் ஒருகண்ணில் விழிப்பு சுமக்க வேண்டிய தேவையுடைய இனமாக தமிழினம் தன்னை நிலைநிறுத்தவேண்டிய தேவையுள்ளது. மரபின் திணிப்பினால்; சுயசம்பாத்தியம் கருதிய கலப்பினுள் -தூய தொல்தமிழினத்தையும், உலகமொழிகளுக்கெல்லாம் தாய்மொழியான செம்மொழித்தமிழையும் ஏன் விட்டுக்கொடுக்க வேண்டும் நாங்கள்?

நாங்களே மன்னித்தாலும் கூட எவ்வழியிலேனும் முற்றிலும் ஒடுக்கி அடக்கி, வருஞ்சந்ததி முழுமையும் ஏகாதிபத்தியம் கொண்டு ஆளவேண்டுமென நினைக்கின்ற, இந்த நூற்றாண்டின் பெரும் சோகத்தை, கச்சிதமான இனவழிப்பாக நிகழ்த்தியவர்களோடு - எங்ஙனம் ஒரே நாளில் திருநாள் ஒன்றை பகிர்ந்திடல் முடியும்? குலமழித்தவனோடு சேர்ந்தா கொண்டாட்டமும், கைவிசேடமும்?.

தமிழ்ப் புத்தாண்டு தை முதல் நாள் என்று ஓங்கி உலகெங்கும் சொல்ல ஆரம்பிக்கவும், சிங்கள- இந்து சித்திரை வருடப்



# போரு
# வியாபா

● வேதநாயகம் தபேந்திரன்

"சொத்துச் சேர்ப்பதற்கு முன்பு வியாபாரம் செய்தோம். இப்போது சோறு தின்பதற்கு வியாபாரம் செய்கின்றோம்."

யாழ்.நகரில் வணிக நிலையமொன்றை வைத்திருக்கும் ஓர் அன்பர் கூறிய கூற்று அது.

ஒரு காலத்தில் வங்கியில் நடைமுறைக் கணக்கு திறப்பது என்றால் பெரிய முதலாளிக்கு மட்டும் தான் அனுமதிப்பார்கள்.1980 களின் ஆரம்பத்தில் மெல்ல மெல்லப் போர் ஆரம்பித்தபோது வணிகர்களும் போரினால் பாதிக்கப்பட்டார்கள்.1983 யூலையின் பின்னர் போர் தீவிரமடைந்த போது பாதிப்பு யாவருக்கும் பொதுவானதாகவே இருந்தது. நாடு சுதந்திரமடைவதற்கு முன்பாகவே யாழ்ப்பாணத்து வணிகர்கள் நாடு முழுவதும் கடை வைத்திருந்தார்கள்.

பிரிட்டிஸ் காலத்தில் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் கொழும்பை மையமாகக் கொண்டு பலவித வியாபாரங்களைச் செய்து வந்தார்கள். அவர்களது கடைகளில் பலவித தொழில்களுக்குமாக யாழ்ப்பாணத்தின் தீவகப் பிரதேச இளைஞர்கள் வேலைக்குச் சென்றார்கள். தீவகத்தில் நிலவளம் குறைவு. அதனால் மானாவாரி காலம் தவிர்ந்த காலத்தில் வாழ்வாதாரத்துக்கு இடர்பட்ட மக்கள் அதிகமாக இருந்தார்கள்.

அவர்கள் தொழில்களை நாடி நாட்டின் நாலா திசைக்கும் சென்றார்கள். நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் தாம் உழைத்தது போதுமென்று ஒரு கட்டத்தில் இந்தியா திரும்பிய போது தமது கடைகளில் வேலைக்கு நின்ற விசுவாசம் மிக்க தீவக இளைஞர்களிடம் கடைகளைக் கொடுத்துச் சென்றார்கள்.

இவ்வாறு தான் தீவகப் பிரதேச மக்களிடம் நாட்டின் வியாபாரத்தின் பெரும்பங்கு சென்றது. அதனால் தீவக மக்கள் வியாபாரத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களாக வந்தார்கள். அவர்கள் போல யாழ்ப்பாணத்தின் வேறு சில பல இடத்து மக்களும் நாட்டின் பலபகுதிகளில் வியாபாரத்தில் சூரர்களாக இருந்தார்கள்.

கொழும்பு தம்பையா, நுவரெலியா கார்த்திகேசு, மாத்தளை கந்தையா, காலி செல்லத்துரை, பதுளை நவரத்தினம் என வணிகர்களுக்கு அவர்கள் கடைகள் வைத்திருந்த ஊரின் பெயருடன் அவர்களது பெயரும் இருந்தது.

தாம் கடைகள் வைத்திருந்த ஊர்களில் நன்றாக உழைத்து யாழ்ப்பாணத்தில் தாம் வாழ்ந்த பிரதேசங்களை வளம் படுத்தினார்கள். வணிகம் செய்த ஊர்களிலும் வீடு வளவு வைத்திருந்தோரும் இருந்தார்கள். அந்தக் காலங்களில் தென்பகுதியில் முஸ்லீம் மக்களே ஓரளவு கடைகள் வைத்திருந்தார்கள். சிங்கள மக்கள் பேக்கரித் தொழில், மரத் தளபாடங்கள் தவிர வேறு தொழில்களில் பெருமளவு ஈடுபட்டது குறைவு.

அதனால் யாழ்ப்பாணத்தைக் குறிப்பாகத் தீவகத்தை மையமாகக் கொண்ட தமிழர்கள் நாடெங்கும் பெரும் வர்த்தக சாம்ராச்சியங்களை வைத்திருந்தார்கள். 1956, 1977 ஆம் ஆண்டுகளில் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறைகளை விட 1983 யூலையில் நிகழ்த்தப்பட்ட வன்முறைகள் மிகவும் மோசமானதாக இருந்தது.குரூரமாக இருந்தது. ஓரிரு ஆயிரம் பேர் கொல்லப்பட்டார்கள். வேரோடு பிடுங்கி எறியப்பட்டார்கள். கப்பலிலும், வாகனங்களிலும் இடம்பெயர்ந்து வந்தார்கள். நாடு முழுவதும் வணிக சாம்ராச்சியங்கள் அமைத்துக் கோலோச்சிய வசந்த காலம் முடிந்தது. 1983 யூலையில் பாதிக்கப்பட்டுத் தாயகம் திரும்பியோரில் அதிகம் பேர் வளர்ந்த நாடுகளை நோக்கிப் புலம்பெயரத் தொடங்கினார்கள். பல்லாயிரக் கணக்கில் புலம்பெயர்வு தொடங்கியது. தாயக விடுதலை நோக்கிய விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டோரும் இருந்தனர். மிகச் சிறிய அளவிலானோரே தென்பகுதியில் குறிப்பாகக் கொழும்பில் தாம் முன்னர் வைத்திருந்த கடைகளை மீளவும் அமைத்துக் கொண்டனர். தாயக மண்ணில் ஓயாத புயலாக போர் நடந்தது. வியாபாரம் செய்தோரை அது கடுமையாகப் பாதித்தது.

திடீரென ஓரிடத்தில் குண்டு வெடிக்கும் அல்லது துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படும். பொது மக்கள் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு ஓடினார்கள். ஆனால் கடைகளை வைத்திருந்தோர் கடைகளைப் பூட்டி விட்டுத் தான் ஓட முடிந்தது. அந்த நேரத்தில் பலர் கொல்லப்பட்ட நிகழ்வுகளும் நடந்தது. விமானக் குண்டு வீச்சு, தீயிடல் ஆகியவற்றில் அகப்பட்டு கடைகளை பொருள்களுடன் முழுமையாக இழந்தோரும் இருந்தனர்.

திடீர் இடம் பெயர்வுகளின் போது கடைகளை முழுமையாகவோ பகுதியாகவோ கைவிட்டு பெரும் இழப்புக்களைச் சந்தித்த முதலாளிகளும் இருந்தார்கள். போராட்ட இயக்கம் ஒன்றுக்கு வரி கட்டி முடிய இன்னுமொரு இயக்கம் வந்து தனக்கும் வரி கேட்டு அச்சுறுத்திய போது அதையெல்லாம் தாங்கிக் காசு கொடுக்க வேண்டும். கொடுத்தார்கள்.

இயக்க மோதல்கள் வந்த போது அதனாலும் கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்டார்கள். அது போல படைவீரர்களினாலும் பாதிப்புகளை எதிர்கொண்டார்கள். போரால் நட்டப்பட்ட நிகழ்வுகளும் இருந்தன.

அதேவேளை போர்க் காலத்தில் பதுக்கல் வியாபாரத்தின் மூலமாக திடீர் இலட்சாதிபதிகளாகியோரும் இருந்தார்கள். அங்க பிடித்து அவரைப் பிடித்து இவரைப் பிடித்து பொருள்களை கொண்டு வந்து கோடீஸ்வரர்களாகியோரும் இருந்தார்கள். ஜே.ஆர். அரசாங்கம் மாவட்ட அமைச்சர்கள் என்ற முறையைக் கொண்டு வந்த போது யாழ்ப்பாண மாவட்ட அமைச்சராக யு.பி.விஜயக்கோன் எனும் ஆளும்கட்சி எம்பி இருந்தார்.

அவரது பெயரில் றப்பர் ஸ்ராம்ப் செய்து மண்ணெண்ணை பேமிற் முடித்து மண்ணெண்ணை கொண்டு வந்து உழைத்து பெரும் பணக்காரர் ஆகியோரும் இருந்தார்கள்.

போர் தீவிரமடையும் போது வீதிப் போக்கு

# ாண்டுக்கும்
# த, தமிழன்?

பிறப்பை நமதில்லை என்று ஒதுக்கவும், "நீங்கள் வேறு- நாங்கள் வேறு" என்ற உண்மையை காயங்கள் தந்த காட்டேரிகளிடம் கடுமையாக சொல்லவும் வேண்டியிருக்கின்றது?

"தமிழ்த்தேசியம்" : மதச்சார்பற்ற - மொழிவழி - இனத்தின் நிலவுரிமையை கேட்கும், அறநீதிக்கட்டமைப்பாக உருவாக்கப்பட்டதன் அருமையை தமிழ்த்தேசிய நீக்க அரசியல் பின்புலத்திலேயே உணரவும் - உறைக்கவும் வாய்த்திருக்கின்றோம்? தமிழ்த்தேசிய நீக்கம் அவசியமாக தேவைப்படுகின்ற இந்து சமுத்திர பிராந்திய சூழலில், இந்த துணைக்கண்டத்தின் தொல்குடிமக்களான தமிழர்கள் தனித்துவமான இனப்பண்டிகையொன்றை தமிழினப்புத்தாண்டாக கொண்டாடுவது, அதிகார பேராசையுடைய ஆரியத்தின் தீராத தலைவலிகளில் ஒன்று.

மதவழியான குழுமங்கள் ஊடாக மதவழியான பிளவுகளை ஊக்குவித்து கொண்டு, பேரினவாதத்தையும் - சிங்கள, பௌத்த அடக்குமுறையையும் திருப்பி எதிர்க்கும் திராணி, தமிழ்தேசியத்துக்கு எப்போதும் இராது என்பதை இந்து சமுத்திர பிராந்திய வல்லாதிக்கத்தின் மேல் கள்ளக்காதலுறுகின்ற வல்லூறுகள் நன்கே தெரிந்துணர்ந்து வைத்திருக்கின்றன. இந்த அச்சமே, இவர்களும் பௌத்த சிங்கள பேரினவாதமும் சேர்ந்து, மதவாதம் துளியுமில்லாத மொழியை முதன்மைப்படுத்திய பிரபாகரனிய கோட்பாடுகளை வலுவாக வெறுத்து எதிர்க்கவும் காரணமாயிருக்கின்றது.

தமிழினத்துக்கான வழக்கமான சாபங்களை விட்டு வெளியேற முடியாமல், நந்திக்கடலில் மௌனித்த தமிழ்த்தேசிய அர்சியலை முனைப்பெடுக்க வேண்டிய அடுத்த பத்தாண்டுகள் கழிந்த பின்னரும், ஈழத்தமிழருக்கான அரசியல் - தமிழ்த்தேசிய நீக்கத்தை வாழ்வின் கொள்கையாக கொண்டவர்களிடமும், பிரபாகரனியத்தை மறுதலிப்பவர்களிடமும் சிக்கியிருப்பது, காலக்கொடுமையில்லாமல் வேறேது?

தமிழ்த்தேசியம் தனது உயிர்ப்பை தக்கவைக்க - நெடிந்த இலட்சியமான இனவிடுதலையை நோக்கிய நகர்வை துரிதப்படுத்த, தன்மேல் வீசப்பட்ட மதவழிப்பிணைப்புடைய சிக்கலான வலைகளிலிருந்து ஈழத்தமிழன் தன்னை விடுவித்துக் கொள்வது கட்டாயமாகின்றது.

**தமிழ்ப்புத்தாண்டு :** தை முதல்நாளிலேயே என்ற தெளிவை ஏற்படுத்துவது மற்றும் கொண்டாடுவது உள்ளடங்கலாக : பிரபாகரனியத்தை, வாழ்வின் நெறியாக நடந்து - விதைந்து ஒளிரும் பல்லாயிரம் ஆத்துமாக்களுக்கு நாம் செய்யும் ஒரே நன்றி அது மட்டுமே?

**ஆரியம் கூறும் 60 ஆண்டுகளும் -**
**அவற்றின் தமிழ்ப்பெயர்களும்**

1) பிரபவ - நற்றோன்றல் - 1987 - 1988
2) விபவ - உயர் தோன்றல் - 1988 - 1989
3) சுக்ல - வெள்ளொளி - 1989 - 1990
4) ப்ரமோதுத - பேருவகை - 1990 - 1991
5) ப்ரஜோத்பத்தி - மக்கட்செல்வம் - 1991 - 1992
6) ஆங்கிரஸ - அயல்முனி - 1992 - 1993
7) ஸ்ரீமுக - திருமுகம் - 1993 - 1994
8) பவ - தோற்றம் - 1994 - 1995
9) யுவ - இளமை - 1995 - 1996
10) தாது - மாழை - 1996 - 1997
11) ஈஸ்வர - ஈச்சுரம் - 1997 - 1998
12) வெகுதான்ய - கூலவளம் - 1998 - 1999
13) ப்ரமாதி - முன்மை - 1999 - 2000
14) விக்ரம - நேர்நிரல் - 2000 - 2001
15) விஷு - விளைபயன் - 2001 - 2002
16) சித்ரபானு - ஓவியக்கதிர் - 2002 - 2003
17) சுபானு - நற்கதிர் - 2003 - 2004
18) தாரண - தாங்கெழில் - 2004- 2005
19) பார்த்திப - நிலவரையன் - 2005 - 2006
20) விய - விரிமாண்பு - 2006 - 2007
21) ஸர்வஜித் - முற்றறிவு முழுவெற்றி - 2007 - 2008
22) ஸர்வதாரி - முழுநிறைவு - 2008 - 2009
23) விரோதி - நீர்பகை - 2009 - 2010
24) விக்ருதி - வளமாற்றம் - 2010 - 2011
25) கர - செய் நேர்த்தி - 2011 - 2012
26) நந்தன - நற்குழவி - 2012 - 2013
27) விஜய - உயர்வாகை - 2013 - 2014
28) ஜய - வாகை - 2014 - 2015
29) மன்மத - காதன்மை - 2015 - 2016
30) துன்முகி - வெம்முகம் - 2016 - 2017
31) ஹேவிளம்பி - பொற்றடை - 2017 - 2018
32) விளம்பி - அட்டி - 2018 - 2019
33) விகாரி - எழில் மாறல் - 2019 - 2020
34) சர்வாரி - வீறியெழல் - 2020 - 2021
35) பிலவ - கீழறை - 2021 - 2022
36) ஸ/பக்ருது - நற்செய்கை - 2022 - 2023
37) ஸோபக்ருது - மங்களம் - 2023 - 2024
38) குரோதி - பகைக்கேடு - 2024 - 2025
39) விஸ்வாஸ/வ - உலகநிறைவு - 2025 - 2026
40) பிரபாவ - அருட்தோற்றம் - 2026 - 2027
41) பிலவங்க - நச்சுப்புழை - 2027 - 2028
42) கீலக - பிணைவிரகு - 2028 - 2029
43) ஸௌம்ய - அழகு - 2029 - 2030
44) சாதாரண - பொதுநிலை - 2030 - 2031
45) விரோதக்ருது - இகல்வீறு - 2031 - 2032
46) பரிதாபி - கழிவிரக்கம் - 2032 - 2033
47) பிரமாதீச - நற்றலைமை - 2033 - 2034
48) ஆனந்த - பெருமகிழ்ச்சி - 2034 - 2035
49) ராட்சச - பெருமறம் - 2035 - 2036
50) நள - தாமரை - 2036 - 2037
51) பிங்கள - பொன்மை - 2037 - 2038
52) காளயுக்தி - கருமைவீச்சு - 2038 - 2039
53) சித்தார்த்தி - முன்னியமுடிதல் - 2039 - 2040
54) ரௌர்த்திரி - அழனி - 2040 - 2041
55) துன்மதி - கொடுமதி - 2041 - 2042
56) துந்துபி - பேரிகை - 2042 - 2043
57) ருத்ரோத்காரி - ஒடுங்கி - 2043 - 2044
58) ரக்தாட்சி - செம்மை - 2044 - 2045
59) குரோதன - எதிரேற்றம் - 2045 - 2046
60) அட்சய - வளங்கலன் - 2046 - 204





...ப்பட்டது. அந்த இடை
...தட்டுப்பாடு. கையிருப்பு
...திடீர் பணக்காரர் ஆக்கி
...கதியன்று யாழ் வவுனியா
...பிறவுடன் மூடப்பட்டது.
...தால் வட பகுதி மீது
...டை விதிக்கப்பட்டது.
...டிப் பதை ஊடாக ஒரு
...தது. பின்னர் இயக்கச்சி
...த ஊடாகப் பொருள்கள்
...ம் முதல் 1996 ஏப்பிரல்
...ாதை ஊடாகப் பொருள்
... விடுதலைப் புலிகளின்
...பாட்டின் கீழ் தான்
... காலத்தில் பலநோக்குக்
...ரும் வணிக அமைப்பாக
...கங்கள் பெரும் இலாப
...ார வளங்களைத் தேடிக்
... பெருளமளவு இலாப
...ம் விடுதலைப் புலிகளின்
...ழ் நட்டப்படாமல் வாழ்ந்தார்கள்.

வியாபாரம் செய்வோர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொருள்கள் வவுனியா ஊடாகத் தருவித்து வழங்க அனுமதி அளித்தார்கள். 1996 ஏப்பிரல் மாதத்தின் பின்னர் யாழ். குடாநாடு முழுமையாக அரச படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. அப்போது கப்பல் மூலமாகப் பொருள்கள் வர வழைக்கும் முறை வந்தது. கொழும்பில் செல்வாக்கு உள்ளவர்கள் கப்பலில் பொருள்களை ஏற்றி வந்து யாழ்ப்பாணத்தில் இறக்கினார்கள். கப்பல் கால வியாபார முறைமை மேலும் பல புதுப்பணக்கார வகுப்பினரை உருவாக்கியது. ஒரு கப்பலில் பொருள்கள் வந்தால் அடுத்த கப்பலில் பொருள்கள் வர நாள் சென்றால் கையிருப்பில் உள்ள பொருள்களுக்கு அதிக இலாபம் வைத்து இலாபமீட்டினார்கள். கப்பலில் பொருள்களை எடுத்து வந்து விற்கும் காலத்தில் தான் தாம் அதிகம் சம்பாதிக்க முடிந்தது எனக் கூறும் வணிகர்கள் பலர்.

2002 ஏப்பிரல் 08 ஆம் நாளன்று முகமாலை ஊடாக ஓமந்தைக்கு தரைவழிப்பாதை திறக்கப்பட்டது. அப்போது லொறிகள் மூலமாகப் பொருள்கள் எடுத்து வரும் வியாபார முறைமை உருவாகியது. விடுதலைப் புலிகளின் வருவாய்ப் பகுதியினரால் வியாபாரம் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டது. ஓமந்தையிலிருந்த தமிழீழ வைப்பகம் மூலமாக பொருள்களுக்கு விதிக்கப்பட்ட வரிகளைச் செலுத்தி விட்டு வடக்கே பொருள்களை எடுத்து வர முடிந்தது.

அது போல வன்னியிலும், யாழ்ப்பாணத்திலும் உள்ள பொருள்களை வரி செலுத்தி விட்டு தென் பகுதிக்கு எடுத்துச் செல்ல முடிந்தது. விடுதலைப் புலிகளின் காலம் தான் தமக்கு வாய்ப்பான காலமென வியாபாரிகள் கூறுகின்றனர்.

அவர்கள் ஒவ்வொரு வியாபாரிக்கும் ஒவ்வொரு பொருள்களை எடுத்து வருவதற்கு அனுமதி கொடுத்தார்கள்.

உதாரணமாக ஒருவர் அரிசி எடுத்து வருவ தென்றால் மற்றைய ஒவ்வொருவரும் மா, சீனி, பயறு, உழுந்து என ஒவ்வொரு பொருள்களை எடுத்து வந்தனர். விடுதலைப் புலிகளுக்கு உரிய வரி செலுத்தினால் போதும்.

அதனால் எல்லோருக்கும் வியாபாரம் நன்றாக நடந்தது. 2002 ஏப்பிரல் முதல் 2006 ஓகஸ்ட் 11 வரையான காலமே தமது வியாபாரத்தின் பொற்காலமெனக் கூறுகின்றனர்.

2006 ஓகஸ்ட் 11 இல் முகமாலையில் இறுதிப் போர் தொடங்கியது. பல நாள்களாக இடைவிடாத ஊரடங்குச் சட்டம். பொருள்களுக்குத் திடீரெனப் பெரும் தட்டுப்பாடு. பதுக்கல் வியாபாரத்தில் ஈடுபட்டு கொள்ளை இலாபம் ஈட்டியோரும் இருந்தனர். பின்னர் படிப்படியாக கப்பல், விமானம் மூலமாகப் பொருள்கள் வரத் தொடங்கியது.

வியாபாரிகளுக்கு இலாபகரமாகத் தொழில்கள் ஓடின. 2009 மே மாதத்துடன் போர் முடிந்தது. படிப்படியாகத் தரைவழிப்பாதை திறந்தது. தென்பகுதி வியாபாரிகள் சந்து பொந்து எங்கும் கடை விரித்தார்கள். நேர்மையற்ற அவர்களது வியாபாரங்கள் அரசியல் ஆசீர்வாதத்துடன் நடந்தது. அவர்களுடன் போட்டி போட முடியாத நிலை.

புதிது புதிதாக எமது பிரதேசத்தவர்கள் பலரும் கடை கண்ணிகளைக் கட்டினார்கள். பெரும் நகரங்களை விட குக்கிராமங்களில் கூட பலவித பொருள்களையும் விற்கும் கடைகள் உருவாகின. போர்க் காலம் போல பெருமளவு பொருள்களைக் கையிருப்பில் வைத்திருந்தார்கள். மக்கள் தென்பகுதிக்கு நாளாந்தம் போய் வரும் போது உடுபிடவைகள் உட்பட பல பொருள்களை வாங்கி வந்தார்கள். இங்குள்ள வியாபாரிகள் பலர் காணி கட்டடங்களை வாங்கி பெரும் முதலீட்டை முடக்கினார்கள். இது போன்ற பலவித காரணங்களால் இவர்களது வியாபார நடவடிக்கைகள் பல பின்னடைவைச் சந்தித்தன.

முப்பது வருடப் போருக்குப் பழக்கப்பட்ட வியாபாரம் திடீரென வந்த அமைதி நிலைக்குத் தாக்குப் பிடிக்க முடியவில்லை. நிறையப் பேரை கடுமையாகவே பாதித்துக் கொண்டது. அதனால் தான் சொத்துச் சேர்க்கச் செய்த வியாபாரம் சோத்துக்குச் செய்யும் வியாபாரம் எனக் கூறுமளவுக்கு வந்து விட்டது. தற்போதைய நிலையிலிருந்து எமது வணிகர்களை மீண்டெழ வைக்க நடைமுறைக்குச் சாத்தியமான வேலைத் திட்டங்களே தேவையானது. ■

எதிரொலி
Ethiroli
17 - 23 ஏப்ரல் 2019

## சிறுகதை




■ அகமது ஃபைசல்
பொத்துவில்

அந்த வீட்டு முற்றத்தில்முளைத்திருக்கும் புற்கள் சுதந்திரம் பெற்றவை என எடுத்துக் கொள்ளலாம்,வேலி ஓரமாக நட்சத்திரங்களைப் பூத்து நிற்கிற மணத்தாளி செடிக்கு வானம் அவசியமில்லை என்றும் வைத்துக் கொள்ளலாம். அந்த அறையில் இருக்கும் மேசைக் கடிகாரத்துக்கு எப்போதும் ஞாபக மறதி என்று கூடச் சொல்லலாம். அது வீட்டில் உறங்குகிற யாரையும் உரிய நேரத்துக்கு எழுப்பிவிடுவதில்லை. வீட்டைக் கூட்டிப் பெருக்கி, செடிகளுக்கு தண்ணீர் ஊற்றி, கதவு இடுக்கிலும், சுவர் மூலையிலும் விழாமல் பிடித்து நிற்கும் ஒட்டடைகளைத் துடைத்து, மஞ்சள் தெளித்து, கதவு நிலை வெடிப்பில் ஊது பத்தி மூன்றைக் கொளுத்தி வைத்துவிட்டு மைமு நகரும்போது மஃரிப் தொழுகைக்கான அதான் ஒலிக்கத் தொடங்கியது.

பள்ளிக்கூட சட்டைகளைப் பளிச்செனும் வரை கழுவி கொடியில் உதறி உதறி காயப்போடுகிற வரை மகளிடம் யாரும், எது சொன்னாலும் நடக்கிற காரியமே இல்லை. இத்தனை காலமும் மாமி வீட்டில் ஒத்தியில் வாழ்ந்த மைமு குடும்பத்துக்கு விடிந்த பொழுது தான் இது. நல்ல விலைக்கு வந்த வளவை வாங்கிப்போட்டு, சுற்றி வர மதில் வேலைகள் முடிந்த பிற்பாடு தான் நூர் வாப்பாவின் மண்டைக்கு ஏறியது வீடு கட்டுவதற்குப் பணம் போதாதே என்று.

இருந்த காசைக்கொண்டு ஒரு அறையும், ஒரு தாழ்வாரமும்தான் கட்ட முடிந்தது அவரால்.

“அடுப்படி வேணுமே. அடுப்படி இல்லாம எப்புடி? எங்க குந்திகிட்டு சோறு ஆக்கிற?” என்று அந்த மனுசன் நூர் வாப்பாவின் பின்னால் அலைந்து திரிந்து ஒருபடியாய் கிடந்த துண்டுக் கற்களையும், மரத்துண்டுகளையும் போட்டு அந்த ஒரு அறையின் மேற்குப் பக்கமாக சுவரோடு சேர்த்து ஒரு சிறிய அடுப்படியும் தயாரான பின்பு தான் மைமு மூச்சு விட்டாள். ஒத்தி வீட்டில் இருந்த நாட்களெல்லாம் மகளுக்கு ஓயாத வேலை. உம்முசல் மாமியின் வீட்டைக் கூட்டிப் பெருக்கி, பானை சட்டிகளை ஒன்று விடாமல் கழுவி, நாளைக்கு சாகும் என்ற நிலையில் இருந்தாலும் அந்த செடிக்கும் தண்ணீர் ஊற்றி மாமி வீட்டில் காலம் கழித்த சோர்வில் என்னவோ அவளுக்கு சொந்த வீட்டு வேலைகளைச் செய்ய ஒரு கள்ளத்தனம். ஆனாலும் வளவு நல்ல பெரியதுதான்.ஒரு மூலையில் வீடு. மறு மூலை வரை காய்கறித் தோட்டம்.

நூர் வாப்பாவும், மகனும் தாழ்வாரத்தின் திண்ணையில் படுத்துக் கொள்வார்கள். தோட்டத்துக்கு காவலும் வேண்டுமே. நூர் வாப்பாவுக்கு பயமே இல்லை என்பதால் குறட்டை விட்டு உறங்குவார். மகன் அப்படியில்லை பெரிய பயந்தாங்கொள்ளி. பாதித் தூக்கத்தில் எழுந்து விடுவான். மறு நாள் காலை, அல்லது மதியம் மீதித் தூக்கத்தை அந்த ஒற்றை அறையினுள் தூங்கிச் சரி செய்துகொள்வான். கட்டிலும் இல்லை. கீழேதான் படுக்கவேண்டும். விரும்பினால் பாய் ஒன்றைவிரிக்கலாம். அவனுக்கு இரண்டு தலையணை மட்டும் போதும். அந்த ஒரு அறை வீட்டை யாரும் தள்ளிக் கொண்டு போனாலும் தெரியாத அளவுக்குத் தூங்குவான்.

குளிர் நீரில் ஐந்தே வினாடிகள் விழுந்து கிடந்த துணிபோல் இருந்தது காற்றோடு கூடிய அந்த மாலை. நூர் வாப்பா நல்ல திடமான, சோர்வே இல்லாமல் வேலை செய்யும் ஆள். இளம் வயதில், உலர்த்திய மான் இறைச்சியும் நல்ல தேனும் சாப்பிட்டிருப்பார் போல. தெம்பாக இருக்கிறார். நிலம் வாங்கி ஒரு வருடத்துக்குள் காய் கறி போட்டுத் தோட்டம் ஒன்றை உண்டாக்கிவிட்டார் என்றால் பாருங்களேன். மைமு பயற்றஞ் செடிகளுக்கு அடுப்படிச் சாம்பலை கொஞ்சம் கொஞ்சமாக அள்ளித் தூவிக்கொண்டிருந்தாள். நூர் வாப்பா மதில் ஓரமாய் பந்தலில் படர்ந்து தொங்கும் புடலங்காய்களுக்கு சிறு கல்கட்டித் தொங்கவிட்டார். அங்கே சிறு வண்டொன்றை விரட்டிக் கொத்தியது மஞ்சள் நிறக் கோழி. அது பக்கத்து வீட்டுச் சேவல் தான்.கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்த பளிங்கு போன்று அங்கொன்றும் இங்கொன்றுமாக தொங்கும் கத்தரிக்காய்கள். வண்ணத்துப் பூச்சிகள் கத்தரிச் செடியின் இலைகளில் வாய் வைத்து நூர்வாப்பாவின் வியர்வைத் துளிகளைக் குடிப்பது போன்றே இருக்கும்.

ஒரு பெரும் கொட்டாவியுடன், பின் துவாரத்தால் காற்றையும் வெளியேற்றியவாறு வந்து நின்ற மகனுடைய காதில் விழும்படி ஒரு சத்தம் வைத்தார் நூர் வாப்பா , “டே மகேன். இங்குட்டு கொஞ்சம் வா” அவன் பிடறியிலும் கண்கள் இருப்பவனைப் போன்றே சுவரில் ஒட்டிக்கொண்டிருக்கும் பல்லியின் வயிற்றுக்குள் தெரிகிற வெண்நிற முட்டையை துல்லியமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். தலையில் கவிழ்த்திருந்த முக்காட்டை எடுத்துவிட்டு மஃரிப் தொழுவதற்கு ஆயத்தமானாள் மைமு. வழமை போல் சிமினி விளக்கை எடுத்து வந்து துடைத்துக்கொண்டு தானும் வேலை செய்து கொண்டுதானிருக்கிறேன் என்ற பாவனையைக் காட்டத் தொடங்கினாள் மகள்.

“விடியிறதுக்குள்ள விளக்க கொழுத்திடுவியா மகள்?” என்று கிண்டலாக கேட்டுவிட்டாள் மைமு.

“கவலப்படாதங்கோ” என்று தேற்றினாள் மகள்.கையில் இரண்டு, அல்லது மூன்று பயற்றங்காய்களை ஆய்ந்து எடுத்துக்கொண்டு நூர்வாப்பாவுக்குப் பின்னால் போய் நின்றான் அவன். “மீனே.ய். மீனே...ய்” என்ற சத்தம் வர “மீன் யாவாரி போறான் மீன் வாங்கிறலியா உம்மா?” என்று சொல்லிக்கொண்டு அடுப்படிக்கு முன்னால் கிடந்த அந்த ஓரம் கிழிந்த சாக்குத் துண்டை மண் உதறித் திரும்பவும் அதே இடத்தில், முன்பு இருந்ததை விட கொஞ்சம் தள்ளிப் போட்டுவிட்டு, சிமினி லாம்பை ஏற்றி முடித்திருந்தாள் மகள்.

“வாப்பாட்ட சொல்லு கறிக்கி ஏதாச்சும் காய்களப் பாத்து பிச்சிட்டு வரட்டும். நான் தொழப் போறன்” என்றாள் மைமு.

“வாப்போ கறிக்கி கொஞ்சம் காய் பிச்சின்டு வாங்கோ.” என்று சத்தமாக சொல்லிவிட்டு, சிமினி லாம்பின் வெளிச்சத்தில், அவள் ஒட்டிப் படுக்கும் சுவரின் அருகில் போய் இருந்து கொண்டு பென்சிலால் வரைந்த பூக்களை ஒரு முறை பார்த்தாள். தான் படிக்கும் பாடத்தின் புத்தகங்களை அந்த சுவர் அருகில் எடுத்து வைத்துக் கொண்டாள். அவளுக்கு அந்த சுவர் இணை பிரியாத சினேகிதி. எப்படியும் இரவு பதினொரு மணிக்குப் பிறகு துவக்கு வெடிச் சத்தம், காட்டுக்குள் குண்டு வெடிக்கும் சத்தம் எல்லாம் கேட்கும். அப்போது அந்த சுவரோடு ஒட்டிப் படுக்காவிட்டால் அவளுக்கு நித்திரை வராது. எப்போது படுக்கைக்குச் சென்றாலும் அரை மணி நேரமாவது சுவரில் பூக்கள் வரைவதும், கணித வாய்ப்பாடு எழுதி வைத்து மனனம் செய்வதும், பள்ளிக்கூடத்துப் பாட அட்டவணையை எழுதிவைத்து அதன்படி செயற்படுவதுமாகப் போயிற்று அவளுக்கு.

தினமும் வரும் தோட்டத்து வருமானத்தை வைத்தே மைமுவின் குடும்பம்ஓடுகிறது. பூசணிதலைப்புடனும், நடுத்தர பூசணிக் காய் ஒன்றுடனும் வந்து அடுப்படியில் ஏறி நின்றார் நூர் வாப்பா. “இந்தப் பூசணித் தலைப்ப சுண்டுங்க புள்ளே. இந்த காயும் நல்ல பருவமா இருக்கு உளுவ மீன் கருவாடு இரிக்கிதான? போட்டுச் சின்னக் குழம்பும் வையுங்க”என்றார். ஊது பத்தி இரண்டினை பற்றவைத்து கதவு நிலைக்கும், சுவருக்கும் இடையில் செருகிவிட்டிருந்தாள் மைமு. அதன் மணம் வீடெங்கும் பரவியது. வியாழக் கிழமைகளில் எல்லா வீடுகளிலும் ஊது பத்தி வாசம் வருவது வழக்கம். உளுவ மீன் கருவாட்டு வாசத்தை அந்த ஊது பத்தி வாசத்தினால் வெல்ல முடியவில்லை. சமையல் வேலையை ஆரம்பித்த கையோடு அடுப்பில் தேநீரும் தயாராக்கினாள் மைமு.

கறுத்தக் கொழும்பன் மாமரக் கிளையில் தன் இருப்பிடத்தைப் பற்றிக் கொள்ள முயற்சிக்கும் கோழிகளின் சத்தமும், மயங்கிய மாலையும், வலி கொண்ட உடலைப் பிடித்து இதமாக அமுக்கிவிடுவதுபோல் இருந்தது. இருள் சூழச் சூழ சிமினி விளக்கின் ஒளி மஞ்சள் பூவைப்போல் மெல்ல இதழ் விரிக்கத் தொடங்கிற்று. குண்டு வெடிக்கும் சத்தம் காதில் விழ மைமுவின் இதயம் “லப் டப் ” என்று துடித்தது. “இன்னா தொடங்கிட்டு காட்டுக்குள்ள குண்டு போடுறான். .மகரி பட்டா இந்த குண்டு வெடிச் சத்தம் தொடங்கிடும். ரஹ்மானே எப்பதான் நிம்மதியா தூங்குற நாள் வருமோ..” என்றாள் மைமு உளுவை மீன் கருவாட்டைத் துண்டு துண்டாக கிழித்துக்கொண்டு.

“கத்தரி, தக்காளி, கொச்சிக்காய், பொடலங்காய் எல்லாத்தயும் ஆஞ்சி நாளக்கி சந்தயில கொண்டு கொடுங்க. சீட்டுக்காசி கொடுக்க காசி வேணும்” என்றாள் திரும்பவும் மைமு. “நான் சொல்ல நெனக்கிறன் நீங்க சொல்லிட்டியள் புள்ள” என்றார் பதிலுக்கு நூர் வாப்பா. “நம்ம இளந்தாரி எங்க போயிட்டான்? பிளேன்டி கேட்டான். ம்.. ஒரு வேலயும் இல்லாம இருக்கான்” மகனைப் பற்றிய கவலையுடன்.

“மகள் எங்க படிக்கிறாயா?” என்று அவள் காதில் விழும் அளவான சத்தத்தையும் கொஞ்சம் போட்டு வைத்தாள்.

தனக்கு ஆதரவாக தன்னுடன் உறங்கும் அந்த ஒற்றைச் சுவரில் சாய்ந்து கொண்டு மெதுவான சத்தத்தில் பாடப் புத்தகத்தில் இருக்கும் ஒரு கதையை மகள் வாசித்துக்கொண்டிருந்தாள்.


இரவு எட்டு மணிக்குப் பிறகு சாப்பிடவேண்டும், படுக்கையைத் தயார் செய்ய வேண்டும் என்பதும் அவள் மனதுக்குள் ஒரு ஓரத்தில் தோன்றி மறைந்துகொண்டிருந்தது. திரும்பவும் குண்டு வெடிக்கும் சத்தம் கேட்கத்தொடங்கியது. சாப்பாடு சங்கதி எல்லாம் முடிந்து ஊரே உறங்கிக்கொண்டிருக்கும் நல்ல சாமம். “பட..பட..டப்..டப்...பட...பட... பட..” என்ற சத்தம் வர பாதித் தூக்கத்தில் திடுக்கிட்டு எழுந்தள் மைமு. “பட...பட...டப்...டப்” சத்தம். “இப்படி துவக்குச் சத்தம் ஒரு நாளும் கேட்டதில்லை. வீட்டுக் கூரையில் வெடி விழுவதுபோலிருக்கு” என்று அவசரமாக எழுந்து கதவைத் திறந்து தாழ்வாரத்தில் படுத்திருந்த கணவனையும், மகனையும் வீட்டுக்குள் அழைத்துச் சென்று கதவை அடைத்துவிட்டு “என்ற ரகுமானே...என்னது.. நீதான் எங்கள காப்பாத்தனும்...என்ற ரகுமானே” என்று பிரார்த்திக்கத் தொடங்கினாள்.

நூர் வாப்பா கதவை மெதுவாகத் திறந்து தாழ்வாரத்தில் நின்றபடி வெளியே எட்டி வானத்தின் பக்கம் பார்க்கத் தொடங்கினார். ஹெலிக்கொப்டரில் பறந்து பறந்து இராணுவத்தினர் வெடி வைப்பதைக் கண்டு மனம் “திக்” என வீட்டுக்குள் திரும்பி வந்து கீழே அமர்ந்துகொண்டார். மைமுவின் கையைப் பிடித்தபடி ஒரு மூலையில் அமர்ந்துகொண்டாள் மகள். அந்தப் பழைய மேசைக்கு கீழ் தலையணையை இறுக அணைத்துக் கொண்டிருக்கும் மகனைப் பார்த்த நூர் வாப்பாவுக்கு கொஞ்சம் சிரிப்பும் வந்து தொலைந்தது. ஒரு மணி நேரத்துக்கும் மேலாக தொடர்ந்தது வெடிச்சத்தம். மகள் ஒட்டிக்கொண்டு படுக்கும் அந்தச் சுவர் அதிர்வதைப் பார்த்து நெஞ்சில் தண்ணீர் வற்றிப் போயிற்று அவர்கள் எல்லோருக்கும்.

எப்படியும் பொழுது விடியத் தானே வேண்டும் என்று காத்திருந்து விடிந்ததும் அவள் அவசரமாகத் தன் சுவருக்கு என்ன நடந்தது என்று பார்க்க வெளியே ஓடினாள். வாசலில் தோட்டாக் கோதுகள். சுவரில் குண்டு பட்டுத் துளைத்த தடங்கள். ஊரே கிடு கிடு ஆகியிருந்தது.. பக்கத்து வீடுகளில் இருந்து வந்தவர்களும் கூடி நின்று சுவரைப் பார்வையிடத் தொடங்கினார்கள். அங்கே பூசணிக்காய் ஒன்று கிழிந்து கிடப்பதைக் கண்டு மனம் கலங்கி நிற்கிறார் நூர் வாப்பா. ■

வெளிநாடுகளில் வேலை பார்க்கும் இந்திய இளைஞர்களைக் கவனியுங்கள். தமிழகத்தில் இருந்து பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட - இளைஞர்கள்கூட வந்திருப்பார்கள். ஆனால், வட இந்தியாவில் இருந்து பார்ப்பனர்களைத் தவிர யாரும் வந்திருக்க மாட்டார்கள். ஏனெனில் வட இந்தியாவைப் பொறுத்தவரை பணமும் படிப்பும் பார்ப்பனர்களுக்குப் பத்தியப்பட்டது. அப்போ ஏழைகளுக்கு என்ன? அதான் இருக்கிறதே மதமும், சாதியும்தான்.

மோடியைத் தமிழ்நாட்டில் காலனியாதிக்கம் செய்யவந்த வேற்றுநாட்டு அதிபராகத்தான் பார்க்கிறார்களேயொழிய தங்கள் பிரதமராக இல்லை.



# மோடி மீண்டும் பிரதமர் ஆவாரா?

என் இனிய ஆஸ்திரேலியர்களே, அமெரிக்கர்களே, ஆங்கிலேயர்களே, கறுப்பினத்தவர்களே!

உங்களுக்கெல்லாம் கிடைக்காத ஒரு பாக்கியம் எங்களுக்கு கிடைத்திருக்கிறது. உங்கள் பிரதமரோ, ஜனாதிபதியோ இப்போது என்ன செய்துகொண்டிருப்பார்கள்? மிஞ்சிப் போனால் ஏதாவது மீட்டிங்கில் இருப்பார்கள். உலகத் தலைவர்களைச் சந்தித்துக் கொண்டிருப்பார்கள். அல்லது பிரஸ்மீட் கொடுத்துக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் இந்தக் கட்டுரையை நான் எழுதிக் கொண்டிருக்கும்போது எங்கள் பிரதமர் என்ன செய்துகொண்டிருக்கிறார் தெரியுமா? டிஷர்ட் விற்றுக் கொண்டிருக்கிறார்!!

ஆம்! "மெய்ன் பீ சவுக்கிதார்" என்ற வாசகத்துடனான டிஷர்ட்டை டிவிட்டரில் விற்றுக்கொண்டிருக்கிறார். அதுவும் சும்மா விற்கவில்லை. "உங்கள் டிஷர்டை ஆர்டர் செய்ய முந்துங்கள்" - என்று கூவிக் கூவி விற்றுக் கொண்டிருக்கிறார்.

இப்படி வெளிப்படையாக - வெள்ளந்தியாக - கோமாளித்தனம் செய்யும் மனிதர் எப்படித் தேர்தலில் நிற்கிறார்? அதுவும் பிரதமர் பதவிக்குப் போட்டியிடுகிறாரே? இதெல்லாம் பொத்தாம் பொதுவாக இப்போது உலகநாடுகளிலும், உலக ஊடகங்களிலும் நிலவும் சந்தேகம். ஆனால் இந்தியாவில் எதுவும் சாத்தியம். எதுவும் என்றால் மோடி போன்ற ஒரு ஆள் மீண்டும் பிரதமராவதுகூட சாத்தியம்.

சமீபத்தில் எடுக்கப்பட்ட ஒரு சர்வேயில் வடநாடுகளில் இன்னமும் மோடிக்கு செல்வாக்கு இருக்கிறது. ஆனால் தென்னிந்தியாவில் அதளபாதாளத்தில் இருக்கிறது. குறிப்பாக தமிழ்நாட்டில் 2 வீத செல்வாக்கு உள்ளதாம். நாமெல்லாம் - சுலபமாக - இந்தியாவில் வசிக்கிறவர்களை எல்லாம் 'இந்தியன்' என ஒற்றை வார்த்தையில் சொல்லிவிடுகிறோம். ஆனால், மனிதன் என்ற சொல் எவ்வளவு பொதுவானச் சொல்லோ, அவ்வளவு பொதுவானச் சொல்தான் இந்தியன் என்பதும். ஏனெனில் அத்தனை விதமான இனங்களும், மொழிகளும், மதங்களும், வேறுபாடுகளும், அரசியல் பார்வையும் இங்கே இருக்கின்றன.

வடநாட்டு மக்கள் உண்மையில் பாவம். அங்கே பார்ப்பனர்கள், பனியாக்கள் போன்ற உயர்சாதிக்காரர்களைத் தவிர, படிப்பும் சரி, பணமும் சரி வேறு எந்தச் சமூகத்தையும் சென்றடையவே இல்லை. நன்றாகப் படித்து வெளிநாடுகளில் வேலை பார்க்கும் இந்திய இளைஞர்களைக் கவனியுங்கள். தமிழகத்தில் இருந்து பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட - இளைஞர்கள்கூட வந்திருப்பார்கள். ஆனால் வட இந்தியாவில் இருந்து பார்ப்பனர்களைத் தவிர யாரும் வந்திருக்க மாட்டார்கள். ஏனெனில் வட இந்தியாவைப் பொறுத்தவரை பணமும் படிப்பும் பார்ப்பனர்களுக்குப் பத்தியப்பட்டது.

அப்போ ஏழைகளுக்கு என்ன? அதான் இருக்கிறதே மதமும், சாதியும்!! இந்த இரண்டு 'மூளை மழுக்கி" களோடு கொஞ்சம் போலித் தேசியவாதத்தையும் கலந்துவிட்டால் போதும். பாஜகவுக்காக, மோடிக்காக நம் கழுத்தில் ஏறிக் கடிக்கும் ஒரு வெறிபிடித்த சங்கி கிடைத்துவிடுவார். மக்களை இப்படி சங்கிகள் ஆக்கித்தான் பாஜக வெற்றி பெற்றிருக்கிறது.

இந்திய அளவில் பார்த்தால், பாஜகவை ஆதரிப்பவர்கள் இரண்டே வகையினர்தான். மோடி நாட்டுக்குக் கேடு எனத் தெரிந்தும் தங்கள் சமூகம் மட்டும் நன்றாக இருந்தால்போதும் என சுயநலத்தினால் அவரை ஆதரிக்கும் பார்ப்பனர்கள். இன்னொரு வகையினர் நிஜமாகவே மோடியை நம்பும் ஏமாளிகள்.

ஆனால் கல்வியும், பணமும் ஒப்பீட்டளவில் பரவலாகப் படர்ந்திருக்கும் தென்னகத்தில் - குறிப்பாகத் தமிழகத்தில் - பாஜகவின் அரசியல் செயல்திட்டம் செல்லுபடியாகவில்லை. அதனால்தான் 2 சதவிகித ஆதரவில் முக்குகிறது. ஏன் இப்படி? தமிழ்நாட்டில் மட்டும் என்ன ஒவ்வாமை?

இனிப்புக் கடைக்குச் சென்று, ஜிலேபிக்கு தொட்டுக்கொள்ளச் சாம்பார் கேட்பீர்களா? மாட்டீர்கள்தானே!

அதே போலத்தான் தமிழ்நாடும் மோடியும். சாம்பாரை யாவது ஜிலேபியுடன் மட்டும்தான் தொட்டுக்கொள்ள முடியாது. ஆனால் மோடியை தமிழ்நாட்டில் எதனுடனும் தொட்டுக்கொள்ள முடியாது என்பதுதான் நிதர்சனம். ஏனெனில் இந்த ஐந்தாண்டுகளில் மோடியால் - மோடியின் ஆட்சியால் - பயனடைந்தவர்கள் யாரை யாவது காட்டுங்கள் பார்ப்போம்? என்னால் இருவரைக் காட்ட முடியும். அதானியும் அம்பானியும்!

மற்றபடி டீமானடைசேஷன், ஜி.எஸ்.டி, பெட்ரோல், காஸ் விலையேற்றம் எனப் பலவற்றால் பாதிக்கப்பட்ட மக்கள் தெருவில்தான் நிற்கிறார்கள். நிலைமை இப்படி ஆகும் என்பதை முன்னரே கணித்து தானோ என்னவோ, கடந்த மக்களவைத் தேர்தலில் இந்தியா முழுவதும் மோடி அலை இருந்தபோதுகூட தமிழகத்தில் மோடி அலை இல்லை.

சரி. எல்லா மாநிலங்களிலும்தானே மக்களுக்கு இந்தப் பிரச்சினை எல்லாம் இருக்கிறது, ஆனால் ஏன் தமிழகம் மட்டும் இவ்வளவு வெறுப்பை உமிழ்கிறது என நீங்கள் நினைக்கலாம். காரணம் இருக்கிறது. "மதம் மனிதனுக்கு அபீன் போன்றது" - என்றார் கார்ல் மார்க்ஸ். ஏனெனில் மதம் மட்டும் தலைக்கேறிவிட்டால் தனக்கிருக்கும் உண்மையான பிரச்சினைகளை எல்லாம் உணராமல் மதவெறிபோதையில் ஊறிக் கிடப்பானாம் மனிதன். அப்படித்தான் இந்துத்துவா எனும் அபீனை வைத்து வட இந்தியாவில் பிழைப்பை ஓட்டுகிறது பாஜக. ஆனால் தமிழகத்திலே அந்த சித்து வேலை எடுபடவில்லை.

◇ நம் பொருளாதாரம் வீழ்ந்திருக்கிறது.

- நீட் என்கிற பெயரில் கிராமப்புற, பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட - ஏழைக் குழந்தைகளின் டாக்டர் கனவை கருவிலேயே கருக்கிவிட்டார்கள்.

◇ இந்திய ரூபாயின் மதிப்பு வரலாற்றில் .இல்லாத அளவு சரிந்திருக்கிறது.

◇ காட்டுப்பகுதியில் குண்டுபோட்டுவிட்டு பாகிஸ்தானில் போட்டதாகவும் 200-300 பயங்கரவாதிகள் இறந்ததாகவும் கூசாமல் பொய்சொல்கிறார்கள். சாட்டிலைட் இமேஜைப் பார்த்த உலகநாடுகள் நம்மை கேலி செய்கின்றன. மோடி ஆட்சிக்கு வந்தபின் பயங்கரவாதம் 173 வீதம் அதிகரித்துள்ளது. ராணுவ வீரர்கள் சாவது 93வீதம் அதிகரித்துள்ளது.

◇ கல்புர்கி, பன்சாரே, தாபோல்கர், கௌரி லங்கேஷ், போன்ற பல எழுத்தாளர்கள் பாஜகவுக்கு எதிராக கருத்து சொன்னதால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் வட இந்திய மாநிலத்தவர்கள் வேண்டுமானால் மதபோதை கொண்டு மறக்கலாம். ஆனால் தமிழர்கள் மறக்கவில்லை. அருவெறுப்புடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் நிஜமான சவுக்கிதார் யார், அம்பானியின் சவுக்கிதார் யார் என்பது பார்த்த மாத்திரத்தில் மக்களுக்குத் தெரிந்துவிடும். மோடியை காமடி கலந்த வில்லனாக வேண்டுமானால் பார்ப்பார்களேயொழிய இன்னும் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் கதாநாயனாக நினைத்துக்கூடப் பார்க்காமாட்டார்கள்.


அதற்கெல்லாம் மேல், மோடியைத் தமிழ்நாட்டில் காலனியாதிக்கம் செய்யவந்த வேற்றுநாட்டு அதிபராகத்தான் பார்க்கிறார்களேயொழிய தங்கள் பிரதமராக இல்லை.

ஒன்றை உறுதியாகச் சொல்லமுடியும். நேரு காலத்தில் இருந்தே தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும் பிரச்சினைகள் இருந்திருக்கிறது. ஆனால் டெல்லி தமிழ்நாட்டுக்கு இவ்வளவு அந்நியப்பட்டுப் போனது மோடி ஆட்சியில்தான். அது ஒன்றுதான் மோடியின் சாதனை.

சரி. வர இருக்கும் தேர்தலில் மோடி ஜெயிப்பாரா? பிரதமர் ஆவாரா? எனக் கேட்டால் கண்டிப்பாக தமிழ்நாட்டு ஆதரவில் ஆக மாட்டார் என்பதை மட்டும் உறுதியாகச் சொல்ல முடியும். மற்றபடி வட இந்தியர்களுக்கு கொஞ்சமாவது மூளை இருக்கிறதா என்பது இந்தத் தேர்தலில் தெரிந்துவிடும்.

ஆனால் ஜனநாயகத்தின் மிகக் கொடுமையான கோர முகங்களில் ஒன்று பெரும்பான்மை வாக்காளர்கள் என்ன நிலைப்பாடு எடுத்தாலும் ஏனையோரும் அதற்காகப் பல்லைக் கடித்துக் கொண்டு ஐந்தாண்டுகள் செக்கிழுக்க வேண்டும் என்பதுதான். இந்தத் தேர்தலிலாவது தமிழகம் வட இந்தியப் பெரும்பான்மை வாக்காளர்களின் மூடத்தனத்தில் இருந்து தப்புகிறதா எனப் பார்ப்போம்.

**- மைலாப்பூரிலிருந்து,**
**முனியாண்டி ஐயங்கார்.**





# மரபணுமாற்ற மாணவர்கள்

'நான் ரியுசனுக்கு போனால் தான் நல்லாப் படிப்பன்' என்பது இன்றை தமிழ் மாணவர்கள் மத்தியில் இருக்கும் ஒருவித உளவியல் பிறழ்வு.

இன்றைய தனியார் கல்விக்கலாசாரம் எவ்வாறு மாணவர்களை ஆட்டிப் படைக்கின்றது என்பதற்கு இந்த உளவியல் பிறழ்வான சிந்தனை நல்லதொரு எடுத்துக்காட்டு. அதாவது தனியார் கல்வி நிறுவனத்துக்குச் செல்லாமல் தமது கல்வி மட்டம் உயராது என்கின்ற ஒரு மாயையை இவர்களிடத்தில் உருவாக்குவதில் 'ரியூசன்கள்' வெற்றிகண்டுள்ளன என்பதன் குறியீடாகவும் இதனைக் கொள்ளலாம்.

"என்ர பிள்ளை யாழ்ப்பாணத்துக்கு ரியூசனுக்குப் போறவள்" என ஆரம்பித்து, " இவா தன்ர பிள்ளையை அனுப்பாம வைச்சிருக்கிறா. என்னதான் செய்யப் போறாவோ தெரியேலை" என்று அடுத்த வீட்டுப் பிள்ளைகள் பற்றி 'கரிசனை' காட்டும் அம்மாக்கள் இப்போது நம் மத்தியில் உருவாகி விட்டார்கள்.

காலை வேளைகளில் பட்டாம்பூச்சியாக சிறகடித்துச் செல்கின்ற பள்ளி மாணவர்கள் பாடசாலை நிறைவுற்றதும் அவசர அவசரமாக தனியார் கல்வி நிறுவனங்களை நோக்கி ஓடுகின்றனர். பின்னர் மாலை வேளைகளில் முகத்தில் கலை இல்லாமலே வீடு திரும்புகின்றனர்.இவ்வாறு தமது விளையாட்டு நேரங்களையும் தியாகம் செய்து தனியார் கல்விச்சாலைகளை நோக்கி ஓடும் மாணவர்களுக்கு இறுதியில் மிஞ்சுவது என்னமோ கிளிப்பிள்ளைப்பாடம் தான்.

மனிதனை பூரணத்துவம் மிக்கவனாக, ஒழுக்கம் நிறைந்தவனாக பிறரின் உயர்வில் மகிழ்பவனாக ஏன் மனிதப் பண்பு கொண்டவனாக உருவாக்குவதில் கல்வியின் முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கதாகத் திகழ்கிறது .அவனது உயர்வையும், தாழ்வையும் தீர்மானிப்பதில் அவனது கல்வியறிவே செல்வாக்குச் செலுத்துகிறது

கல்வி அறிவை வழங்குவதில் கல்விக்கூடங்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றன என்பது பலரும் அறிந்ததே. இருந்தும் மாணவர்களின் அறிவுப் பசிக்கு அவை சரியான தீனியைப் போடுகின்றனவா? என்றால், இல்லை என்பதே பொதுவான பதிலாக இருக்கும்.

இன்று பாடசாலைகளுக்குப் போட்டியாக பல தனியார் கல்விக்கூடங்கள் தலைகாட்டத் தொடங்கியுள்ளன. பாடசாலைகளில் ஆசிரியர்கள் காட்டுகின்ற அசமந்தப் போக்கு, தனியார் கல்விச்சாலைகளுக்கு தங்கள் பிள்ளைகள் செல்வதைக் கௌரவமாக எண்ணுகின்ற பெற்றோரின் மனோபாவம் என்பனவே இந்தத் தனியார் கல்விச்சாலைகளின் வளர்ச்சியை ஊக்குவித்து வருகின்றன.மேலும் இவர்கள் தங்கள் கல்வி நிறுவனங்களில் கற்று மிகச் சிறப்பாக சித்தியடைந்த மாணவர்களை தமது விளம்பரப் பலகைகளில் காட்சிப்படுத்தி மலினமான விளம்பரங்களையும் தேடுவதும் இப்போதைய 'பஷனாகி' விட்டது. அதேநேரம் இக் கல்வி நிறுவனங்களில் கற்றும், சித்தியடையாத மாணவர்களின் எதிர்காலம் குறித்து, அவர்கள் எவ்வித கவலையும் கொள்வதில்லை என்பதும் இங்கு நோக்கதக்கதாகும்.

மாணவர்கள் பாடசாலைகளுக்கு மாத்திரம் சென்று வந்த காலத்தில் சுயமாகச் சிந்திப்பதற்கும் சில முடிவுகளை எடுப்பதற்குமான ஆற்றலும், காலமும் அவர்களுக்கு இருந்தது. ஆனால் எப்போது தனியார் கல்வி நிறுவனங்களை நோக்கிப் படையெடுக்க தொடங்கினர்களோ அன்றே அவர்களது சிந்தனைச் சக்தி ஆட்டம் கண்டுள்ளது. சுயமாக அவர்கள் சிந்திப்பதற்கான காலமும் அவர்களுக்குச் சுருங்கி விட்டது. தங்களது கல்வி நிறுவனங்களில் கற்கும் மாணவர்கள் சிறந்த சித்தியடைந்து தமக்குப் பெருமையினையும், வருவாயினையும் அதிகரிக்க வேண்டும் என்பதிலேயே 'ரியூசன்' நிர்வாகிகள் குறியாக உள்ளனரே தவிர மாணவர் நலனில் அக்கறை கொள்வதில்லை.

சிறந்த பெறுபேற்றை மட்டுமே இலக்காகக் கொண்டு, மாணவர்களைச் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகளாகவே வளர்த்தெடுக்கின்றன ரியூசன் சென்ரர்கள். மாணவர்களுக்குத் தேவையான குறிப்புகளையும், வினா விடைகளையும் முழுவதுமாக அள்ளி வழங்குவதில் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் நவீனயுக கர்ணர்களாகவே காணப்படுகின்றனர். இவர்களின் வரையற்ற தானம் மாணவர்களின் தேடலை, அவர்களின் சிந்தனைத்திறனை, சுயபுத்தியை மழுங்கடிக்கச் செய்து விடுகின்றது. மரபணுமாற்றம் செய்யப்பட்ட தாக்காளி போல மாணவர்கள் மாறிவிடுகின்றனர். இங்கு கற்கின்ற மாணவர்கள் சொற்புத்தி விற்பனர்களாக மட்டுமே விளங்குவதனால் அடுத்த தலைமுறைகளிற்குக் கற்பிக்கின்ற திறமையற்றவர்களாக மங்கிப் போய்விடுகின்றனர். இதனால் அடுத்த தலைமுறையினரும் இந்தத் தனியார் கல்வி நிறுவனங்களை நோக்கி படையெடுக்கின்ற நிலையே காணப்படுகின்றது.

இந்நிலை தொடருமாக இருந்தால் எம் சந்ததியினரின் அறிவார்ந்த சூழலும், தன் முனைப்பும் கேள்விக்குறியாகிவிடும் என்பதனை பாடசாலை ஆசிரியர்களும், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களும் அத்துடன் பெற்றோரும் கவனத்திற் கொள்ள வேண்டும்

**சிவதர்சினி,**
ஊடகக் கற்கைகள், யாழ். பல்கலைக்கழகம்.

# இந்த வாரம் உங்களுக்கு...

## மேடம்

சாதுர்யமான பேச்சால் சாதித்துக் காட்டுவீர்கள். சுக்கிரன் வலுவாக நிற்பதால் உயர்ரக மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். வாகன விபத்து, வாகனப் பழுது வந்துபோகும். மனைவியுடன் கருத்து மோதல் வரும். உறவினர்கள் ஒரு சிலரின் இரட்டை வேடத்தைப் பார்த்து வேதனைப்படுவீர்கள். மற்றவர்களுக்காகப் பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்க வேண்டாம். குடும்ப அந்தரங்க விடயங்களை எல்லாம் வெளியாட்களிடம் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். வெளி வட்டாரத்தில் மற்றவர்களை தாக்கிப் பேசாதீர்கள். விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகரிப்பால் சந்தோஷம் நிலைக்கும்.

## இடபம்

வீடு, மனை வாங்குவீர்கள். எதிர்பார்த்த பணம் வரும். வங்கிக் கடன் கிட்டும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். பிள்ளைகளுக்கு இருந்து வந்த கோப ,தாபம் குறையும். பாகப்பிரிவினை நல்ல விதத்தில் முடியும். வாகனத்தை மாற்றுவீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். தன்னிச்சையாகச் செயற்படத் தொடங்குவீர்கள். உங்கள் ரசனைக்கேற்ற வீடு அமையும். உங்களைப் பற்றிய வதந்திகள் அதிகமாகும். வீண் பழிகளையும் சுமக்க வேண்டியிருக்கும்.

## மிதுனம்

முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழந்து விடாதீர்கள். காரசாரமாகப் பேசிப் பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். உங்களின் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். கன்னிப் பெண்களின் காதல் கசந்து இனிக்கும். உயர்கல்வியைப் போராடி முடிப்பீர்கள். மாணவர்கள் விளையாட்டின் போது கவனம் தேவை. விரும்பிய பாடப்பிரிவில் சேர கொஞ்சம் போராட வேண்டியிருக்கும். வியாபாரத்தில் புதிய திட்டங்கள் வகுத்து இலாபத்தைப் பெருக்க முற்படுவீர்கள்.

## கடகம்

எதிர்பார்த்த வகையில் பணம் வரும். பழைய கடனைத் திருப்பிச் செலுத்த வழி கிடைக்கும். அதிக வட்டிக்கு வாங்கியிருந்த கடனை கொடுத்து முடிப்பீர்கள். வீட்டில் இருந்த பிரச்சினைகள் தீரும். திருமணப் பேச்சு வார்த்தைகள் நல்ல விதத்தில் முடியும் வாகனம் வாங்குவீர்கள். வேலைச்சுமை அதிகரிக்கும். சில வேலைகளை இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டி வரும். எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி செலவுகள் துரத்திக் கொண்டேயிருக்கும். செலவுகளை கட்டுப்படுத்தி சிக்கனமாக இருந்தாலும் பணப்பற்றாக்குறை நீடிக்கும்.

## சிம்மம்

வழக்கில் வெற்றியுண்டு. பிரபலங்களின் நட்பு கிடைக்கும். பழைய கடனைத் தீர்க்க புது வழி பிறக்கும். உடன்பிறந்தவர்களிடையே இருந்து வந்த மனக்கசப்புகள் விலகும். சொத்துப் பிரச்சினைகள் சுமுகமாக முடியும். திடீர் யோகம், நீண்ட நாள் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். அரசியலில் ஆர்வம் பிறக்கும். அக்கம்பக்கம் வீட்டாரின் ஆதரவு கிட்டும். என்றாலும் குடும்ப விஷயங்களைப் பற்றி விவரிக்க வேண்டாம். வியாபாரத்தில் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள்.

## கன்னி

தன்னம்பிக்கை துளிர்விடும். அழகு, இளமை கூடும். தன இலாபம் அதிகரிக்கும். உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். செல்வாக்கு உயரும். குடும்பத்தில் அமைதி உண்டாகும். கணவன், மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் செலவுகள் இருக்கும். ஆனால், அதே நேரத்தில் அவர்களால் பெருமைத்தரக்கூடிய சம்பவங்களும் நிகழும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். அரசியல்வாதிகள் கட்சி மேல்மட்டத்தில் மதிக்கப்படுவீர்கள். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். புதிய முயற்சியில் தீவிரம் காட்டி வெற்றி பெறுவீர்கள்.

## துலாம்

பழைய நண்பர்கள் உதவுவார்கள். கௌரவப் பதவிகள் தேடி வரும். ஆரோக்கியம் பாதிக்கும். தலை வலி, அடிவயிற்றில் வலி, தூக்கமின்மை, செரிமானக் கோளாறு வந்து நீங்கும். பெரிய நோய்கள் இருப்பதைப் போல அவ்வப்போது நினைத்துக் குழம்புவீர்கள். எதிலும் வெற்றி உண்டு. விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். வீடு, மனை வாங்குவது, விற்பது இலாபகரமாக முடியும். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி உண்டாகும். கணவன், மனைவிக்குள் நெருக்கம் உண்டு. பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேருவீர்கள். மனைவி வழியில் உதவிகள் உண்டு.

## விருச்சிகம்

உறவினர், நண்பர்கள் வீட்டு விசேடங்களை முன்னின்று நடத்த வேண்டிய சூழ்நிலை வரும். பழைய நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். நட்பு வட்டம் விரிவடையும். கணவன், மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். மனைவி வழி உறவினர்கள் உறுதுணையாக இருப்பார்கள். தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வெளிநாடு சென்று வருவீர்கள். வேற்று மதத்தவர்கள், மொழியினரால் திடீர் திருப்பம் உண்டாகும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகமாகும். இடம் மாற்றம் வரும். சக ஊழியர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். மற்றவர்களை விமர்சித்துப் பேச வேண்டாம்.

## தனுசு

காலச்சூழ்நிலைக்கு தகுந்தாற் போல் உங்களை மாற்றிக் கொள்வீர்கள். தன்னம்பிக்கை பிறக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். கல்வியாளர்கள், அறிஞர்களின் அறிமுகம் கிடைக்கும். இழுபறியாக இருந்த வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வீட்டை மாற்றுவது, விரிவுபடுத்திக் கட்டுவது போன்ற முயற்சிகள் வெற்றியடையும். செலவுககள் அதிகரிக்கும். அநாவசியச் செலவுகளைத் தவிர்க்கப் பாருங்கள். சோர்வு, களைப்பு வந்து நீங்கும்.

## மகரம்

வெளுத்ததெல்லாம் பால் அல்ல என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தனித்திறமையை வெளிப்படுத்துவீர்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். மேலதிகாரி அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள். புது வாய்ப்புகளும் தேடி வரும். சம்பளப் பணம் கைக்கு வரும். கலைத்துறையினருக்குச் சின்னச் சின்ன தடுமாற்றங்கள் இருந்தாலும் புகழ் கூடும். விவசாயிகளுக்கு விளைச்சல் இரட்டிப்பாகும்.

## கும்பம்

கொள்கை, கோட்பாடுகளை விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். கன்னிப் பெண்கள் மனதை அலைபாயவிடாமல் ஒருநிலைப் படுத்துங்கள். பழைய தோழிகள் உதவுவார்கள். மாணவர்களுக்கு அவ்வப்போது மறதி, மந்தம் வந்து விலகும். ஆசிரியர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். முக்கிய வேலைகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது.

## மீனம்

வேலைச்சுமை குறையும். வாகனப் பழுது சரியாகும்.எதிர்வீடு,பக்கத்து வீட்டுக்காரர்களுடன் இருந்து வந்த மனத்தாங்கல் நீங்கும். பயணங்களும் அடுத்தடுத்து இருக்கும். தவிர்க்க முடியாத செலவுகளும் அதிகமாகும். பணப்பற்றாக்குறை ஏற்படும். பழைய கடனை நினைத்தும் அவ்வப்போது அச்சப்படுவீர்கள். சகோதரங்கள் உங்களைப் புரிந்துக் கொள்ளாமல் பேசுவார்கள். கன்னிப் பெண்களுக்குகசந்த காதல் இனிக்கும். பெற்றோர் உங்களைப் புரிந்து கொள்வார்கள். மாணவர்கள் வகுப்பாசிரியர் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள்.

# தமிழால் அலைக்கழிவு



ஒருநாள் சேவையில் தேசிய அடையாள அட்டை பெறும் நோக்கில் கொழும்பிலுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு செல்கின்ற தமிழ் மக்கள் வேண்டுமென்றே அலைக்கழிக் கப்படுவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

அந்தந்த கிராமசேவை உத்தியோகத்தர் களினால் விண்ணப்பங்கள் பூரணப்படுத்தப் பட்டு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் உள்ள குறித்த அதிகாரிகளினால் பரிசீலிக்கப் பட்டு கையொப்பமிடப்பட்ட பின்பே ஒருநாள் சேவைக்காக பொதுமக்கள் கொழும்புக்கு அனுப் பப்படுகிறார்கள்.

அவ்வாறு செல்லும் குறித்த நபர்கள் கொழும் பிலுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு அதிகாலை 4.00 - 5.00 மணிக்கு முன்பு சென்று 'ரோக்கன்' எடுத்து 3.00 மணித்தி யாலத்திற்கும் மேலாக வரிசையில் சென்றதன் பின்பு தமிழில் விண்ணப்பம் உள்ளன என்ற காரணத்திற்காக அங்குள்ள மொழிபெயர்ப் பாளரிடம் அனுப்பப்படுகின்றார்கள் பின்பு ஒரே யொரு மொழிபெயர்ப்பாளரே (முஸ்லிம் பெண்) உள்ளதனால் அங்கும் நீண்ட நேரம் கால் கடுக்க நிற்கவேண்டி உள்ளது.

அதன்பின்பு மீண்டும் வழமையான வரிசை யில் விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்க வரும் போது இன்னும் நீண்ட நேரம் வரிசையில் நிற்கவேண்டி உள்ளது.

உதாரணமாக குறித்த தமிழ் மகனுடன் அருகில் செல்கின்ற சிங்கள நபர் காலை 10.00 மணிக்கு தனது புதிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்கின்ற வேளையில் தமிழரொரு வர் பி.பகல் 1.00 மணிக்குப் பிறகே தனது அடையாள அட்டையைப் பெறுகின்றார்.

விண்ணப்பம் சமர்ப்பிக்கின்ற அல்லது அடையாள அட்டை வழங்குகின்ற இடங்களில் ஒரு தமிழ் பேசுகின்ற உத்தியோகத்தருமே கட மையில் இல்லை (மொழி பெயர்ப்பாளர் தவிர). ஏன் இவ்வாறு நடைபெறுகின்றது? தமிழ் மொழி யும் இலங்கையின் தேசிய மொழி அரசகரும மொழி என்பதெல்லாம் வெறும் பேச்சளவிலா? அங்கு செல்கின்ற தமிழ் முஸ்லிம் மக்கள் எவ்வாறு மனம் வருந்துகிறார்கள் சென்றவர் களுக்கே அது தெரியும் . 'ரோக்கன்' இலக்கம் சொல்வதுகூட சிங்களத்தில் மாத்திரமே. 90 ஆவது ரோக்கனைப் பெற்ற ஒரு வடக்கைச் சேர்ந்த தமிழ் மகன் 150 ஆவது ரோக்கனுக்கு பிறகே தனது விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் நிலையினையே காணக்கூடியதாகவும் இருந் தது எவ்வளவு பரிதாபம்.

விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யும் போது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உள்ள பெயர், முகவரி போன்றவற்றை அதனருகில் ஆங் கிலத்திலும் எழுதியிருந்தால் இப்படி மொழி பெயர்ப்பாளரின் முன்னால் வரிசையில் நிற்கத் தேவையில்லை. கிராமசேவை உத்தியோகத் தரோ அல்லது பிரதேச செயலக அதிகாரிகளோ தங்களது கடமையினைச் சரிவர செய்யாததால், கொழும்பில் தமிழர்கள் அல்லாட வேண்டி யுள்ளது.

கிராமசேவை உத்தியோகத்தரோ அல்லது பிரதேச செயலக அதிகாரிகளோ குறித்த விண் ணப்பத்தில் உள்ள நிரந்தர விலாசம் மற்றும் தபால் விலாசங்களை சரியான முறையில் குறிப்பிடத் தவறுகிறார்கள். அத்துடன் ஒருநாள் சேவைக்கான விண்ணப்பத்தில் கிராமசேவை யாளர் பிரித்து வழங்கும் பகுதியை வழங்க வேண்டும் என சிலரும், வழங்ககூடாது என சிலரும் கூறுகிறார்கள் ஆனால் ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரிகளோ அதனைக் கண்டு கொள்வதில்லை. அத்துடன் தமிழ் மொழி விண் ணப்பங்கள் கண்டிப்பாக அங்குள்ள மொழி பெயர்ப்பாளரினால் மொழிபெயர்க்கப்பட வேண் டும் என்பதனை கிராமசேவையாளரோ அல் லது பிரதேச செயலக அதிகாரிகளோ கூறுவது இல்லை.

கிராமசேவையாளர்களையும் பிரதேச செய லக அதிகாரிகளையும் ஒருநாள் பயிற்சிக்காக ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு அனுப்பினால் நன்றாக இருக்கும். அப்போதுதான் அங்குள்ள நடைமுறைச் சிக்கல்கள் அவர்களுக்கும் தெரிய வரும்.

அத்துடன் தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சு மற்றும் அரசகரும மொழிகள் திணைக்களம் என்றெல்லாம் இலங்கையில் உண்டுதானே. அவர்களையும் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும். மனோ கணேசன் என்றொரு அமைச்சர், மும்மொழிக் கொள்கையால் நல்லிணக்கம் செய்துவிட்ட தாகக் கூவித் திரிந்தாரே, அந்த யோக்கியவா னிடம் யாரேனும் இந்த விடயத்தைச் சேர்ப்பிக்க முடியுமா? ■

# வஞ்சத்தால் வீழ்ந்த அசாஞ்சே



(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன் மீதான பழிவாங்கும் படலத்தை அமெரிக்கா முழுவீச்சோடு ஆரம்பித்துவிட்டதை ஜூலியன் உணர்ந்து கொண்டு தன்னுடைய இருப்பிடத்தை பிரிட்டனுக்கு மாற்றினான். அமெரிக்காவின் துரத்தல், சுவீடன் மோகினிகளின் சட்டச் சிக்கல்கள் என்று கடும் நெருக்கடியில் ஜூலியன் பிரிட்டனில் வந்திறங்கியதற்குப் பிறகு நடந்த சம்பவங்கள், திகில் படங்களை விடவும் விறுவிறுப்பானவை. அதன் பின்னர் அமெரிக்க "பிக்பாஸின்" கைப்பிள்ளையாக பிரிட்டனும் மாறிப் போக, ஜூலியன் ஓடவும் முடியாமல் ஒளியவும்முடியாத நிலை ஜூலியனுக்கு. தப்பிக்க இருந்த ஒரே வழி, அமெரிக்காவுக்கு அடங்க மறுக்கும் நாடொன்றின் தூதரகத்தில் அடைக்கலம் கோருவது தான். ஈக்குவடோர் ஜூலியனுக்கு அடைக்கலம் கொடுக்க, பிரிட்டனுக்கு " தண்ணி" காடிவிட்டு, அவர்களின் நாட்டுக்குள்ளேயே ஒய்யாரமாக ஒளித்துக் கொண்டார் ஜூலியன். ஆனால் அடங்காத காளையான ஈக்குவடோரும், ஒரு கட்டத்தில் அமெரிக்காவுக்கு வாலாட்டி, பொலிஸை வரவழைக்க, லண்டனில் உள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் வைத்து ஏப்ரல் 11 ஆம் திகதி கைது செய்யப்பட்டார் ஜூலியன். நம்பியவர்களே முதுகில் குத்துவது ஜூலியனுக்குப் புதிதல்ல. இந்த கைதையும் தாண்டி ஜூலியன் பீனிக்ஸாக வருவார் என்று அவரது ஆதரவாளர்கள் நம்புகிறார்கள்.

## ஜூலியனின் வாழ்வின் முக்கிய தடங்கள்:

ஆஸ்திரேலியா நாட்டின்குயின்ஸ்லாந்து பகுதியைச் சேர்ந்தவர் அசாஞ்சே. 47 வயதுமிக்க அசாஞ்சே 2006-ல் தொடங்கப்பட்ட விக்கிலீக்ஸ் புலனாய்வு இணையத்தளத்தில் ஒரு முக்கிய அங்கமாக பொறுப்பேற்றார்.

அதன்மூலம் எண்ணற்ற புலனாய்வுச் செய்திகளை வழங்கினார். அமெரிக்க இராணுவ இரகசியங்களை வெளியிட்டதால், பென்டகனின் பழிவாங்கலுக்கு ஆளானார்.

**ஜூலை - ஒக்ரோபர் 2010:** ஆப்கன் மற்றும் ஈராக்கில் நடைபெற்ற போர்கள் குறித்து அமெரிக்க ராணுவ ரகசியங்கள் அடங்கிய 4,70,000 இராணுவ ஆவணங்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டது. இதன் பின்னர் அரசின் 2,50,000 இரகசிய (டெலிகிராம் உள்ளிட்ட) கேபிள் தகவல்களையும் விக்கிலீக்ஸ் வெளியிட்டது.

**நவம்பர் 2010:** அசாஞ்சே மீது பாலியல் குற்றச்சாட்டு தொடர்பாக கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அசாஞ்சே அதை மறுத்தார்.

**டிசம்பர் 2010:** ஸ்வீடன் நீதிமன்றம் பாலியல் குற்றச்சாட்டு கூறியதை அடுத்து அசாஞ்சே லண்டன் பொலிஸில் தானே சென்று சரணடைந்தார். அவரை ஸ்வீடனிலிருந்து நாடு கடத்துவதற்கான ஒரு கோரிக்கை நிலுவையில் உள்ளதைத் தொடர்ந்து அவர் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் ஸ்வீடனின் குற்றச்சாட்டுகள் அவதூறு எனக்கூறப்பட்டு அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

**பெப்ரவரி 2011:** பிரிட்டிஷ் நீதிமன்றம் அசாஞ்சேவை ஸ்வீடனுக்கு நாடு கடத்த உத்தரவிட்டது. அசாஞ்சா அங்கே சென்றால் ஆவணங்களை வெளியிட்டதற்காக அமெரிக்காவிடம் தன்னை ஒப்படைத்துவிடுவார்கள் என்று அச்சம் தெரிவித்தார்.

**ஜூன் 2012:** இந்நிலையில் அசாஞ்சே லண்டனில் உள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் தஞ்சம் கோரினார். பின்னர் அவரது கோரிக்கை ஏற்கப்பட்டு அரசியல் புகலிடம் பெற்று பாதுகாப்பு கிடைத்தது.

**அக்டோபர் 2013:** ஈக்குவடோர் தூதரகம் அசாஞ்சேவை அந்நாட்டு தலைநகரமான கியூட்டோவுக்கு அனுப்பிவைக்க அனுமதி கோரியது.

**ஜனவரி 2016:** ஸ்வீடன் வழக்கறிஞர்கள் அசாஞ்சேவை லண்டனில் வைத்து விசாரிப்பதற்கு விடுத்த கோரிக்கையை கியூடோ நிராகரித்தது.

**பெப்ரவரி 2016:** அசாஞ்சே தன்னிச்சையான காவலில்வைக்கப்பட்டுள்ளதாகவும் இதற்காக பிரிட்டன் மற்றும் ஸ்வீடன் ஆகிய நாடுகளிடமிருந்து இழப்பீடு கோர முடியும் என்றும் ஐநா பணிக்குழு தெரிவித்தது. தங்களுக்கு இதில் அதிகாரமில்லை என மறுத்தன.

**ஜனவரி 2017:** அவரது உரிமைகளுக்கு முழு உத்தரவாதம் தரப்படுமென்றால் அவர் அமெரிக்காவுக்குச் சென்று விசாரணையில் கலந்துகொள்ள முடியும் என்று விக்கிலீக்ஸ் தெரிவித்தது.

**மே 2017:** அசாஞ்சே மீது நடைபெற்று வந்த பாலியல் குற்றச்சாட்டு விசாரணையை முடித்துக்கொள்வதாக ஸ்வீடிய நீதிமன்றம் தெரிவிக்கிறது. எனினும் பிரிட்டிஷ் பொலிஸார், தூதரகத்திலிருந்து அசாஞ்சே வெளியே வரும் பட்சத்தில், 2012-ல் அசாஞ்சேவுக்கு அளிக்கப்பட்ட பிணை விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இப்பொழுதும் அவரைக் கைது செய்ய முடியும் எச்சரிக்கை விடுத்தது.

**டிசம்பர் 2017:** அசாஞ்சேவுக்கு ஈக்குவடோர் குடியுரிமை அளித்து கியூட்டோ அனுமதி வழங்குகிறது. அசாஞ்சேவுக்கு தாங்கள் குடியுரிமை அளித்துள்ள நிலையில் அவரைக் கைது செய்யாமல் தூதரகத்தை விட்டு வெளிநாடு செல்ல அனுமதிக்க வேண்டுமென ஈக்குவடோர் கோரிக்கையை பிரிட்டிஷ் நிராகரித்தது.

**ஜனவரி 2018:** அசாஞ்சே தொடர்பாக தொடர்ந்து ஏற்பட்டு வரும் ஆட்சேபணைக்குரிய சூழ்நிலையைத் தீர்க்க ஒரு நடுவர் வேண்டுமென ஈக்குவடோர் தெரிவித்தது.

**பிப்ரவரி 2018:** உடல்நிலையைக் காரணம்காட்டி பிரிட்டிஷ் பொலிஸாரால் கைது செய்யப்படுவதிலிருந்து விலக்கு பெறும் ஒரு சிறிய முயற்சியையும் அசாஞ்சே இழந்தார்.

**மார்ச் 2018:** மற்ற நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற ஒப்பந்தத்தை மீறியதாக அசாஞ்சேவுடனான அனைத்துத் தகவல் தொடர்புகளையும் ஈக்குவடோர் துண்டித்தது.

**ஒக்ரோபர் 2018:** லண்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தில் தங்கியுள்ள அசாஞ்சேவின்மீது புதிய நிபந்தனைகளை ஈக்குவடோர்விதித்ததோடு, தங்களைமீறி அசாஞ்சே செயல்பட்டால் அடைக்கலம் முடிவுக்கு வரும் என்று எச்சரித்தது.

**நவம்பர் 2018:** அமெரிக்க அரசு வழக்கறிஞர்கள், அசாஞ்சே மீது சந்தேகத்திற்கு இடமின்றி ஒரு முத்திரையிடப்பட்ட குற்றச்சாட்டு தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது என்று கூறினர்.

**ஏப்ரல் 2019:** ஈக்குவடோர் அதிபர் லெனின் மொரெனா, அசாஞ்சே புகலிடத்தின் நிலைகளை பலமுறை மீறியுள்ளதாகக் கூறினார். அசாஞ்சே மீது உள்ள விதிமீறல் குற்றச்சாட்டுகள் மீது விசாரணை நடத்துவதற்கான தகுதி குறித்து ஆராய வரும் ஏப்ரல் 25 அன்று "சுதந்திர உரிமைகளின் நிபுணர்" ஒருவர் அசாஞ்சேவைப் பார்க்க வருவதாக அறிவிக்கப்பட்டது.

**ஏப்ரல் 11, 2019:** இதற்கிடையில் ஈக்குவடோர் தூதரகம் அசாஞ்சேவுக்கு அளித்து வந்த புகலிடத் தகுதியை திரும்பப் பெற்றது. இந்நிலையில் பிரிட்டிஷ் பொலிஸ் அசாஞ்சேவை கைது செய்தது. ■

# அடங்கா தமிழன்

# “நானிருக்கப் பயமேன்”

அடிமைத் தமிழன்

**அடங்காத்தமிழன் என அழைக்கப்பட்ட பேராசிரியர் சுந்தரலிங்கம் இலங்கை சட்டசபையில் உறுப்பினராக இருந்து, இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் 1948 முதல் 1960 வரை நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தவர்.சுந்தரலிங்கத்தின் சாதனைகள் எங்குமே ஆவணப்படுத்தப்படவில்லை. அடங்காத் தமிழனின் சாதனைகளை எதிரொலி வாசகர்களுக்காக வாராந்தம் தருகிறார் அடிமைத்தமிழன்.**

தமிழரசுக்கட்சியின் மகாநாட்டுக்கு பாதுகாப்பு வழங்கியவர் சுந்தரலிங்கம். 1958 ஆம் ஆண்டு தமிழ் அரசுக்கட்சியினர் தமது வருடாந்த மகாநாட்டை வவுனியாவில் நடத்தத் தீர்மானித்தனர். தமிழ் அரசுக் கட்சியினர் மகாநாடு நடத்த தீர்மானித்த திகதியில் தென்னிலங்கையில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் ஆரம்பமாகி விட்டன. மட்டக்களப்பில் இருந்து சொல்லின் செல்வர் என அழைக்கப்பட்ட இராசதுரை தலைமையில் தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் மாநாட்டுக்கு வருவதற்கு ஆயத்தமாகியிருந்தனர்.

வருகிற வழியில் சிங்களக் காடையர்கள் தம்மை ஏதாவது செய்துவிடுவார்களோ என எண்ணிப் பயந்து கொண்டிருந்தனர். சுந்தரலிங்கம் சொன்னார் “நீங்கள் பயப்படாமல் உங்களுடைய மாநாட்டை நடத்துங்கள். உங்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியது வவுனியா எம்.பி என்ற வகையில் எனது பொறுப்பு” என்றார். வாக்குறுதி அளித்தது போல் மூன்று நாள் மகாநாடு முடியும் வரை எதுவித அசம்பாவிதங்களும் நடைபெறாமல் பார்த்துக் கொண்டார் சுந்தரலிங்கம்.



(சுந்தரலிங்கம் வேட்டி யை மடித் துக்கட்டிக்கொண்டு தோளில் துப்பாக்கியுடன் நின்ற விடயம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன்) தமிழரசுக்கட்சியின் வவுனியா மகாநாட்டுக்கு சுந்தரலிங்கம் பாதுகாப்பு வழங்கியதற்கு தமிழ் அரசுக் கட்சியின் அப்போதைய தலைவர் ‘இரும்பு மனிதன்’ நாகநாதன் நன்றியும் தெரிவித்திருந்தார்.

# ‘படிக்கக் கனக்க இருக்கு’



● நவீன சவாரித்தம்பர்



ரண்டுநாளா ஒரே நாரி உளைவாலை நான் பட்ட பாட்டைக் கண்டு, என்ர மனிசிக்காரி, குடுத்த அர்ச்சனைச்சொல்லுகளைத் தாங்கேலாமல், ஆசுப்பத்திரிக்குப் போவம் எண்டு வெளிக்கிட்டன் பாருங்கோ.

அடக்கடவுளே! அங்கை போன பிறகுதான், நான் இஞ்சை வந்ததை விட, வீட்டிலை உளைவோடை மனிசியின்ர அர்ச்சனைச் சொல்லுகளைக் கேட்டுக் கொண்டு ஒருமூலைக்குள்ளை சுருண்டு படுத்திருக்கலாம் எண்ட நினைப்பு வந்தது.

மனிசர் ஆசுப்பத்திரிக்கு வருத்தத்துக்கு மருந்தெடுக்கவெண்டு போனால், அங்கை முன்னுக்கு O.P.Dயில இருக்கிற ஆக்கள், வாற வருத்தக்காரரோடை அன்பாக்கதைச்சு, பண்போடை அணுகி, ஆறுதல் சொல்லி டாக்குத்தரிட்டை அனுப்பேக்கை, வருத்தத்தோடை வந்தவைக்கு பாதிவருத்தம் பறந்தோடிப் போனமாதிரியான உணர்வு உடனை வந்திடும். இப்படியான உணர்வை அங்கை இருக்கிற எல்லாரும் ஏற்படுத்துறமாதிரி நடந்திச்சினமெண்டால், உந்த ஆசுப்பத்திரிவளிய மருந்துகளுக்கும் தட்டுப்பாடுகளும் இருக்காது. தாதிமார், டாக்குத்தர்மாருக்கு பற்றாக்குறை எண்ட செய்தியளும் உந்தப்பேப்பர் வளிய வராது பாருங்கோ!

சில ஆசுப்பத்திரியள்ள அங்கையிருக்கிற ரண்டாந்தர ஊழியர்மார், மருந்தெடுக்கவாற வருத்தக்காரரோடை நடந்து கொள்ளுற விதத்தைப் பாக்கேக்கை, பிறசர் இல்லாதவனுக்கும் பிறசர் வந்திடும். மூலவருத்தக்காரனுக்கு இன்னும் மூலத்தாலை ரத்தம் ஒழுகும். காய்ச்சல் முத்தி வாறவனுக்கு சன்னி இன்னும் நல்லாக்கூடி, பலவிதமான பாஷைகளெல்லாம் (தூஷணம் உட்பட) பேசத்தொடங்கியிடுவான் பாருங்கோ!

உந்த அரியண்டம், ஆக்கினையளாலைதான், நான் அரசாங்க ஆஸ்பத்திரியளுக்குப் போறேல்லை. அண்டைக்கு நாரி உளைவு நல்லாப்போட்டுப் பிடிக்க, தாங்கேலாமல் போயிட்டன். நான் போனநாள் ஒரு கிளினிக்நாள்.

எக்கச்சக்கமான சனம். O.P.Dயில ஒருத்தி இருந்து கொண்டு, வரிசையில வந்துநிண்ட வருத்தக்காரற்ர பெயர் வயதுகளைப் பதிஞ்சு, துண்டு குடுத்துக் கொண்டிருந்தாள். இன்னொருத்தி பழைய துண்டுக்காரருடைய பெயர்ப் படிவங்களை எடுத்துக் குடுத்துக் கொண்டிருந்தாள்.

இருந்தாப்போல, பழைய துண்டுப்படிவங்களை எடுத்துக் குடுக்கிறவவுக்கும் கொப்பியில பெயர் வயது பதியிறவவுக்கும் பதிவு சம்பந்தமா புடுங்குபாடு வந்திட்டுது. முன்னாலை ஏகப்பட்ட சனங்கள் நிக்கிறதை அவையள் ரண்டு பேரும் கவனத்தில கொள்ளாமல், ஒருத்தருக்கொருத்தர் ஏகவசனத்தில வாயாலை பொழிஞ்சு தள்ளின வசைமாரியளைக்கேட்டு, அங்கை வருத்தத்தோடை வந்துநிண்ட ஆக்கள் வாய்விட்டுச் சிரிச்சதிலை பாதிப்பேருக்கு நோய்விட்டுப்போன மாதிரி இருந்தது. மிச்சம் மீதிப்பேர் தங்கடை முகத்தைச் சுழிச்சு, தாங்கள் ஒரு நாகரிகமான ஆக்கள் எண்டதைக் காட்டிச்சினம்.

இந்தநேரம் பாத்து என்னைவிட வயசுகூடின அப்பு ஒருத்தர், தன்ரை பழைய துண்டைக்காட்டி, ஒருத்தியிடம், தான் ஊசி போட வந்ததாகச் சொன்னார். அவ்வளவுதான்! பழைய துண்டுகளை வாங்கி, படிவங்களை எடுத்துக் குடுத்துக் கொண்டிருந்தவள், அந்த அப்புமீதுசள்புள்ளெண்டு எரிச்சு விழுந்தாள்.

அப்புவுக்கு கோவம் வந்திட்டுது. உடனை அவளைப் பாத்துக் கேட்டார்.

“என்னடி மோனை, காலமை வேலைக்கு வரேக்கை சுடுதண்ணியிலையே முழுகிப்போட்டு வந்தனி? ஏன் இப்பிடி எரிஞ்சு விழுகிறாய்?” அப்பு கேட்டது எனக்கு நியாயமாகத்தான் பட்டுது.

ஏனெண்டால் பாருங்கோ! மனசிலை அவலை நினைச்சுக்கொண்டு, வெறும் உரலை இடிக்கக்கூடாது. இன்னொருவர்மீதான கோபதாபத்தை சம்பந்தமில்லாத ஆக்களிட்டை காட்டக்கூடாது. அப்பிடிக் காட்ட வெளிக்கிட்டால், அப்புவைப்போலை ஆக்களுக்கு முன்னாலை வார்த்தையளாலை வாங்கிக்கட்ட வேண்டி வரும். அதுவும், உந்த அரசாங்க உத்தியோகம் பாக்கிற ஆக்கள் உதிலை வலு கவனமாக இருக்க வேணும் கண்டியளே! அது ஆசுப்பத்திரியாக இருந்தாலென்ன.அரச அலுவலகமாக இருந்தாலென்ன. சனங்கள் உத்தியோத்தர்மாரை ஒருபடிச்ச மனிசரெண்ட மரியாதையோடை அணு கேக்கை, அந்த மரியா தையை இவையள் உள் வாங்கி, அதே மரியாதை யோடை அந்தச் சனங் களின்ரை தேவையளைக் கண்டறிய வேணும். அது தான் அவை யளின்ர படிப்புக்கும் பாக்கிற தொழி லுக்கும் ஒரு கௌரவமாக இருக்கும். நல்ல மதிப் பையும் குடுக்கும்.

பக்கத்து அறைக்குள்ளை ஊசி போடப்போன அப்பு, ஊசியைப் போட்டுக்கொண்டு பஞ்சாலை ஊசி போட்ட இடத்தை ஊரசினபடி வெளியில வரேக்கை என்னப் பாத்துச் சொன்னார்.

“எனக்கு ஊசிபோட்டது ஒரு சிங்களப்பிள்ளை. எப்பிடியெல்லாம் என்னோடை மென்மையாக் கதைச்சாள். உசியைப் போட்டிட்டு, அப்புவுக்கு நோகுதோ... என்டெண்லாம் கேட்டிச்சுது அந்தப் பிள்ளை. ஆனால், எங்கடையள்...?!”

இதொண்டும் சிங்களப்பகுதியில நடக்கேல்லை. போர் நல்ல அமளியா நடந்து முடிஞ்ச வன்னிப் பகுதியில அதுவும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒரு பிரதேசத்திலை நடந்த விசயம் பாருங்கோ.

வடக்குப்பக்கத்தில இருக்கிற அரசாங்க ஆசுப்பத்திரி முழுக்க சிங்களத்தாதிமாரை அரசாங்கம் நிரப்பிது எண்டு கூப்பாடு போடுற சந்தர்ப்பவாத சுயலாப தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளே! முதல்ல எங்கட ஆக்களுக்கு நோயாளிமாரோடை எப்படி பண்பாகப் பழகவேணும், அன்பாகக் கதைச்சு அனுப்ப வேணும் எண்டதை சொல்லிக் குடுங்கோ. அதுக்குப் பிறகு சிங்களத்தாதிமார் இஞ்சைவந்து ஆக்கிரமிக்கிறதைப் பற்றி கதைக்கலாம்.

உண்மையில சிங்களத்தாதிமாரிட்டை எங்கட ஆக்கள் கற்றுக்கொள்ள வேண்டிய விசயங்கள் நிறைய இருக்குது.இதை இந்தத்தம்பன் சொன்னால் கசக்கும். அனுபவம் தந்தால் புரியும். ■




கேள்வி - வாழ்க்கையே வெறுத்துப் போச்சு. பேசாம சாமியாராகப் போயிடலாம் எண்டு முடிவு பண்ணிட்டன். கடைசியா ஒரு ஜோக் சொல்லு கைப்புள்ள. சந்தோஷமா சிரிச்சுக்கொண்டே போயிடுறன்.

**ஆர்.சுதாகரன், நீர்வேலி**

**பதில்** - ஒரு சின்ன ஊரில் ஒரு சீனியர் டாக்டரும், அவருடைய புதிய உதவி டாக்டரும் சில வீடுகளில் உள்ள நோயாளிகளைக் காண விசிட் பண்ணினார்கள். முதல் வீட்டில் ஒரு பெண்மணி வயிற்று வலியால் அவதிப்பட்டுக்கொண்டிருந்தார். டாக்டர் அவரிடம், "நீங்கள் வாழைப்பழம் சாப்பிடுவதைக் குறைக்கவேண்டும்" என்றார். ஆச்சரியப்பட்ட உதவியாளர், "டெதஸ்கோப் கூட வச்சுப்பார்க்காம எப்படி டாக்டர் அவங்க பிரச்சினையைக் கண்டு புடிச்சீங்க?" என்று வினவினார். "எல்லாம் அனுபவம் தான். என் பேனாவை வேண்டுமென்றே கீழே போட்டுவிட்டு குனிந்து எடுத்தேன். அந்தப் பெண்ணின் கட்டிலுக்கடியில் நிறைய வாழைப்பழத் தோல்கள் கண்ணில் பட்டன. அவ்வளவுதான்" என்றார் சிரித்தபடி டாக்டர்.

அடுத்த வீட்டில் ஒரு இளம் பெண் நோயாளி... "ரொம்ப உடல்சோர்வு" என்று குறைபட்டுக்கொண்டார். இம்முறை தன் உதவியாளருக்கு வாய்ப்பளித்தார் டாக்டர். அவனும் அதே டெக்னிக்கைக் கடைப்பிடித்துப் பேனாவைக் கீழே போட்டான். பிறகு நிமிர்ந்து "நீங்கள் உங்கள் ஆன்மீக ஈடுபாட்டைக குறைத்தால் சோர்வு சரியாகிவிடும்" என்றான். வெளியே வந்த பெரிய டாக்டர் ஆச்சரியமாய்க் கேட்டார், "எப்படி நீ இப்படி ஒரு ட்ரீட்மென்டை அவளுக்குச்சிபாரிசு செய்தாய்? அவன் சொன்னான், "ஐயா நானும் பேனாவைக் கீழே போட்டிட்டுக் குனிஞ்சேனா... கட்டிலுக்கடியில் ஒரு சாமியார் ஒளிஞ்சுகிட்டிருந்தார்."

கேள்வி - ஐ.பி.எல். மேட்ச் எல்லாம் விடாமல் பார்க்கிறாய்தானே. அதில் ஏதாவது சந்தேகம் இருக்கா உனக்கு?

**கே.ரமேஷ், உடுவில்**

**பதில்** - விளையாடும் வீரர்களை எல்லாம் ஏலம் விட்டார்கள். இந்த சியர்ஸ் கேள்ஸை ஏலம் விடமாட்டார்களா? என்றுதான் பார்க்கிறேன்.



கேள்வி - நான் ஒரு கல்யாணப் புரோக்கர். சுமாரான பெண்கள் இருந்தால் சொல்லு என்கிட்ட ஒரு வரன் இருக்கார். சராசரியாகத்தான் இருப்பார்.

**எம்.மதுமிதா, நெல்லியடி**

**பதில்** - பரவாயில்லை. சம்சாரியாகத்தான் இருக்கக்கூடாது.

கேள்வி - எனக்குக் கழுத்து மட்டும் கடன் இருக்கு என்ன செய்யலாம்?

**வி.கந்தசாமி, மட்டுவில்**

**பதில்** - தலையில் இருந்து கழுத்து வரைக்குமா? இல்லை காலிலிருந்து கழுத்து வரைக்குமா?

கேள்வி - உன் வீட்டு வாசலில கீர்த்திசுரேஷ், அமலாபால், சயன்தாரா மூவரும் வருகிறார்கள். யாரை முதலில் உள்ளே வரவேற்பாய் கைப்புள்ள?

**கே.விஜய், கொடிகாமம்**

**பதில்** - என் வீட்டுக்கு மூன்று வாசல்கள் உண்டு நண்பா.

# சொல்லுங்கோ டொக்டர்?



டொக்டர்
எம்.கே. முருகானந்தன்
(குடும்ப மருத்துவர்)

'பொடி ஸ்பிரேயர்' பாவிப்பதால் மார்பகப் புற்றுநோய் ஏற்படும் என்கின்றார்கள். உண்மையா டாக்டர்?

**ஏ.ஷாமினி கண்டி**

பதில்:- 'பொடி ஸ்பிரேயர்' இப்பொழுது தவிர்க்க முடியாத ஒரு பொருளாக பெரும்பாலனவர்களுக்கு மாறிவிட்டது. நெருக்கமான சந்திப்புகள், அலுவலகம், பொது இடங்கள் போன்றவற்றில் மற்றவர்கள் முன் விரும்பப்படுபவராக இருக்க வேண்டும் என்றால் உடை, அலங்காரம் அவற்றிற்கு அடுத்ததாக உடல் சுகந்தமாக இருக்க வேண்டும் என்ற நிலை அவசியமாக இருக்கிறது.

## மார்பக புற்றுநோய்க்கு இதுவும் காரணமா?



'பொடி ஸ்பிரேயர்' பொதுவாக உடலிலும் அக்குள் பகுதியில் அடிக்கப்படுகிறது. அதில் வியர்வை நீர் சுரப்பதற்கு எதிரான இரசாயனங்களும் சுகந்த மணங்களைக் கொடுக்கும் இரசாயனங்களும் அடங்குகின்றன. அக்குளானது மார்பகத்துக்கு அருகில் உள்ளது. எனவே இவை பாவிக்கப்படுவதற்கும் மார்பகப் புற்றுநோய்க்கும் தொடர்பு இருப்பதாக பல விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள்.

'பொடி ஸ்பிரேயரில்' பல வகையான இரசாயனங்கள் கலந்துள்ளன. இவை எல்லாவற்றையும் பற்றி ஆய்வுகள் செய்யபடுவதற்கான சாத்தியங்கள் இல்லை. ஆனால், அதில் கலந்துள்ள இரு முக்கிய இரசாயனங்களான அலுமினியம் மற்றும் பராபென் ஆகியவற்றிற்கே (parabens) புற்று நோய் வருவதற்கான சாத்தியம் இருப்பதாக அந்த விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

மார்பக புற்றுநோய் பெரும்பாலும் பெண்களின் இடது மார்பிலேயே வருகிறது. மார்பகத்தை நான்கு பிரிவுகளாகப் "பார்த்தால் அவர்களின் மார்பின் வெளிப்புற மேற்பகுதியிலேயே அதிகமாக வருவதாகச் சொல்லப்படுகிறது. பொதுவாக வலது கையால் அடிக்கும் போது இடது அக்குளிலியே 'பொடி ஸ்பிரேயர்' அதிகமாக அடிக்கப் படும். அதற்கு அருகில்தான் புற்று அதிகம் ஏற்படும் மார்பகத்தின் வெளிப்புற மேற்பகுதி இருக்கிறது. அவற்றைக் காரணம் காட்டியே மார்பக புற்று நோய்க்கும் 'பொடி ஸ்பிரேயர்' க்கும் தொடர்பு இருப்பதாக முடிச்சுப் போடுகிறார்கள்.

இந்த அலுமினியமானது பெண் ஹோர்மோனான ஈஸ்ரோஜினை ஒத்த விளைவுகளை உண்டாக்கும் என அவர்கள் நம்புகிறார்கள். ஈஸ்ரோஜினானது மார்பக புற்று நோய்க் கலங்கள் வளர்வதை ஊக்குவிக்கும் என்பது தெரிந்ததே. அலுமினியமானது நேரடியாகவும் மார்பக கலங்களில் தாக்கம் செலுத்தும் எனவும் அவர்கள் கூறுகிறார்கள்

இருந்தபோதும் இது வரை செய்யப்பட்ட எந்த நம்பகமான ஆய்வுகளும் அலுமினியமானது மார்பகப் புற்றுநோயைத் தூண்டும் என்பதை உறுதிப்படுத்தவில்லை ஏ்ன்பதைக் கூறலாம்.

வேறு ஆய்வாளர்கள், பல பொடி ஸ்பிரேயர்களில் கலந்துள்ள பராபென் பற்றி எச்சரிக்கை செய்துள்ளனர். இந்த பராபினானது பெண் ஹோர்மோனான ஈஸ்ரோஜினை ஒத்த விதமாக மார்ப்க கலங்களில் செயற்பட்டு புற்றுநோயைத் தூண்டும் என்கிறார்கள். அத்தோடு பராபின் ஆனது சில மார்பக கட்டிகளுக்குள் இருந்தமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவைதான் மார்பக புற்றுநோயைத் தூண்டுகின்றன என்பது எங்குமே நிரூபிக்கப்படவில்லை. இருந்தபோதும் பெரும்பாலான பொடி ஸ்பிரேயர்களில் இப்பொழுது பராபென் சேர்க்கப்படுவதில்லை.

உண்மையில் மார்பக புற்று நோய்க்கும் பொடி ஸ்பிரேயர்களுக்கு இடையே தொடர்பு இருக்கிறதா என சில ஆய்வுகளே செய்யபடுள்ளன. அவை எதுவுமே அவ்வாறான தொடர்பு இருப்பதை உறுதிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பெரிய அளவிலான புதிய ஆய்வுகள் செய்தால்தான் தெளிவான முடிவுகள் தெரியும்.

தெளிவான முடிவுகள் இல்லாத காரணத்தால் தங்கள் சுயபாதுகாப்புக் கருதி தங்கள் குடும்ப சுற்று வட்டத்துக்குள் மார்பக புற்றுநோய் உள்ள பெண்கள் அவற்றை உபயோகிப்தை தவிர்க்கலாம், அல்லது குறைக்கலாம் என்று சொல்லலாம்.

மார்பக புற்றுநோயாளரின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்து வருகிறது. அந்த அதிகரிப்புக்கு வேறு பல காரணங்கள் இருப்பதையும் குறிப்பிட்டே ஆகவேண்டும். இப்பொழுது மனிதர்களின் வயது எல்லை நீடித்து வருகிறது. வயது கூடக் கூட ஏனைய புற்றுநோய்கள் போலவே மார்பக புற்றுநோய் வருவதும் அதிகரிக்கவே செய்யும்.

குறைந்த வயதிலேயே பெரிய பிள்ளை ஆவது, பிந்திய திருமணங்களும் குழந்தைகளைப் பெற ஆரம்பிக்கும் காலம் தாமதிப்பது, தாய்ப் பாலுட்டும் காலம் குறைவது, அதீத எடை போன்ற பலவற்றாலும் மார்பகங்கள் ஹோர்மோன் தாக்கத்துக்கு ஆளாகும் சாத்தியத்தை அதிகரிக்கின்றன. இத்தகைய காரணங்கள் யாவும் ஒன்று சேர்ந்தே இப்பொழுது பெண்கள் மார்பக புற்று நோய்க்கு ஆளாவது அதிகமாகிறது என்பதையும்கவனத்தில்கொள்ள வேண்டும். ■

மருத்துவ ரீதியாக உங்களுக்கு எழும் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவை தொடர்பில் உரிய மருத்துவர்களின் பதில்கள் எதிரொலியில் பிரசுரமாகும். உங்கள் சுய விபரம் இரகசியமாகப் பேணப்பட வேண்டுமாயின் அதனை மறக்காமல் குறிப்பிடுங்கள். நோயற்ற வாழ்வுக்கு கேளுங்கள். பதிலோடு பயனும் பெறுங்கள்.





# சூப்பர் டீலக்ஸ்: நெருப்பின் உக்கிரம்!

சுஹான்சித் ஸ்ரீகாந்த்

அநீதிக் கதைகள் (Amoral Tales) என்று சொல்லப்பட்டபோதே இதில் நாம் உடன்படலாம், முரண்படலாம். மற்றபடி தீர்ப்பளிக்க ஒன்றுமில்லை என்றவாகு வந்துவிடுகிறது. இந்தக் கதைகளின் நியாய, அநியாயங்கள் அவரவர் மனச் சபையின் பார்வைக்குட்பட்டது. எது தர்மம் என்பது போல.

படம் நெடுக இருக்கும் வாழ்வின்பிடி இந்த பரந்துபட்ட கதைகளை இறுக்குகிறது. பிடி மட்டுமே. அள்ளி அணைக்கவும் இல்லை. கிள்ளி எறியவும் இல்லை. ஒரு பிடி. ஒரு மரணத்துக்கு முந்தைய கணம். ஒரு பிரிவுக்கு முந்தைய கணம். ஒரு பலவந்தத்துக்கு முந்தைய கணம். (ஒரு சொட்டுத் தேன் என்ற 'ப்ரோமோ' எத்தனை பொருத்தமானது!)

இயக்குநர் ஒரு கடவுள் போல இயங்கும் ஒரு சில படங்களுண்டு. முகிலின் கோர்வையில்லாத சமூகக் கொந்தளிப்பு.... பின்னால் கதையை மூடும் தத்து வார்த்த விசாரணைகள்... கோடுகள் போல ஒரு தருணம் மட்டும் சந்தித்துக் கொள்ளும் வாழ்க்கைகள் என குமாரராஜா காட்டும் காட்சியையும், சொல்லும் கதையையுமே நாம் கேட்கிறோம். பார்க்கிறோம்.

கணிக்கவே இயலாத எந்த வகைமையும் சாராத இத்தனை அழுக்கை, கோரத்தை, துரோகங்களை, வன்மங்களை, வக்கிரங்களை, நம்ப முடியாத கொடூரங்களையெல்லாம் சுமந்து சுற்றும் உலகில் ஏலியன் ஒன்றும் வந்ததில் என்ன ஆச்சரியம் இருந்துவிடப் போகிறது? மூன்று மணிநேரத்தில் யாதொன்றும் சினிமாவின் வியாபார, பொதுப்புத்தி தேவைக்காக அனுப்பபட்டதல்ல. ஆனாலும், அதில் அநாயசமாக ஒரு ஜனரஞ்சக ஸ்டைலும் பின்னியெடுக்கிறது.

**ஒவ்வொரு கதையும் நெருப்பின் உக்கிரத்துடன் இருக்கிறது. ஷில்பாவின் கதை அக்கினி என்றால்.. லீலாவின் கதை ஜோதி! வேம்புவின் கதை கனல் என்றால்.. காஜியின் கதை பொறி! பற்றி எரிந்து காடே சாயும் முன் அக்கதைகள் குளிர்ந்தடங்கும் ஒரு பெருவேள்வியாகப் படம் கடக்கிறது.**

ஒவ்வொரு கதையும் நெருப்பின் உக்கிரத்துடன் இருக்கிறது. ஷில்பா கதை அக்கினி என்றால்.. லீலாவின் கதை ஜோதி! வேம்புவின் கதை கனல் என்றால்.. காஜியின் கதை பொறி! பற்றி எரிந்து காடே சாயும் முன் அக்கதைகள் குளிர்ந்தடங்கும் ஒரு பெரு வேள்வியாகப் படம் கடக்கிறது.

வேறெந்தப் படங்களிலும் இல்லாத உலகின் ஒரு கோர முகம்.. தாளாத வக்கிரம் இந்தக் கதைகளெங்கும் அப்பிப் படர்ந்திருக்கிறது. ஷில்பா இரண்டாம் முறை பொலிஸ் ஸ்டேஷன் செல்லும் காட்சியின் வெப்பம் திரை முழுவதும் கொப்பளிப்பதன் காரணம் அதுவே.

படத்தின் உச்ச தருணங்கள் லீலா, அற்புதம், ஷில்பா காட்சிகளிலேயே! ஒரு பிறழ்வுற்றவன் நிறுத்த மறுக்கும் ராட்சஸ ராட்டினம் போல நம்பிக்கைகள் தலைகீழாகின்றன. அற்புதம், ஷில்பாவின் கேள்வியில் உலுக்கப்படும் காட்சி அதனாலேயே எதிரொலித்தபடியே இருக்கிறது. லீலா அற்புதத்துக்கு சொல்லும் எளிய தர்க்கமும் அதுவே.

"உங்க புள்ளைக்கு இப்படி ஆகியிருந்தா நான் கண்டிப்பா காசு கொடுத்துருப்பேன். என் கைல இருக்குற கடைசி காசு வரைக்கும் கொடுத்திருப்பேன்" என்கிற வரியை இன்னும் யோசித்துக்கொண்டிருக்கிறேன். ஒரு கதாபாத்திரம் இந்த தாழ்வில் வீழ்வதும்.. அந்த பள்ளத்தினுள்ளேயே இத்தனை உயரத்தில் எழுவதும் ஒரு தரிசனமே.

பத்து ஆண்டுகளின் சிறந்த படம் என்பதெல்லாம் இதன் அடர்த்தியைக் கட்டிப்போடும் சால்ஜாப்பு. பட்டியல்களுக்கு அப்பாற்பட்டு இதன் பெருவலிகளும், பெரும் மீட்சிகளும் உள்ளபடியே உள்ளங்களைச் சுடும். அடங்க நாளாகும் ஒரு பெரும் அதிர்வுதான் சூப்பர் டீலக்ஸ்.



# காதல் கொல்லாது!

கனவுகளுக்கு அர்த்தம் கற்பிப்பதை நம்மில் பலரும் தேவையற்ற ஒரு செயலாகத்தான் நினைப்போம். ஆனால், சில தருணங்களில் கனவுகள் அர்த்தத்துடன் தான் வருகின்றன என்பதை அடிப்படையாக வைத்துப் பயணம்செய்கிறது 'நான்காம் விதி' என்ற குறும் படம். சமீபத்தில் வெளியான இந்தக் குறும்படத்தை அனு சத்யா இயக்கியிருக்கிறார். தொடர்ந்து பல்வேறு தளங்களில் விருதுகளைப் பெற்றுவரும் இந்தக் குறும்படம், சமூக ஊடகங்களிலும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

ஒரு கனவு, ஒரே நேரத்தில் மூன்று நாட்களாகத் தொடர்ந்து ஐந்து பேருக்கு வருகிறது. அந்தக் கனவு ஏன் வருகிறது, அதற்குப் பின்னால் இருக்கும் நோக்கத்தைத் தெரிந்துகொள்ள முடியாமல் அவர்கள் குழம்புகிறார்கள். கனவில் வரும் நிகழ்வு உண்மையாக நடக்கப்போகிறதா? அப்படி நடக்கப்போகிறது என்றால் அதைத் தடுக்க முடியுமா? ஒரு கனவை நம்பிச் செயற்பட முடியுமா? என்பன போன்ற கேள்விகள் அவர்களுக்கு எழுகின்றன.

அவர்களுக்கு வரும் கனவை விளக்குவதற்கு உதவுகிறார் மனநல ஆலோசகர் விக்ரம் (ராம்ஜி). அந்தக் கனவைப் பின்தொடர்ந்து செல்பவர்கள், தங்கள் நோக்கத்தில் வெற்றியடைந்தார்களா? இல்லையா? என்பதை விளக்குகிறது 'நான்காம் விதி' குறும்படம். 33 நிமிடங்கள் ஓடும் இந்தக் குறும்படம், இறுதிவரை ஓர் அறிவியல் திகில் படத்துக்கான தன்மையுடன் நகர்கிறது. ஒரு திகில் படத்துக்கான திரைக்கதையை நேர்த்தியாக எழுதியிருக்கிறார் இயக்குநர்.

புறக்கணிப்புகளை எதிர்கொள்ளத் துணிவில்லாமல், தங்களைப் பற்றிய சுயபரிசோதனையும் இல்லாமல் 'ஒரு தலைக் காதல்' என்ற பெயரில் இளம்பெண்களைத் துன்புறுத்துதல் மற்றும் கொலை செய்யும் அளவுக்கும் சில இளைஞர்கள் சென்றுவிடும் அவலம் அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது. சமூகம் எதிர்கொள்ளும் இந்த முக்கியமான பிரச்சினை தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த தன் குறும்படத்தின் மூலம் முயன்றிருக்கிறார் அனு சத்யா.

உண்மையாக நேசித்த ஒருவரை, எந்தக் காரணத்தாலும் கொலைசெய்ய முடியாது, காதல் ஒருபோதும் கொல்லாது என்ற கருத்தைப் படம் அழுத்தமாகப் பதிவுசெய்திருக்கிறது. படத்தில் முக்கியக் கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் ராம்ஜி, அர்ஜூன், மோனிஷா உள்ளிட்ட அனைத்து நடிகர்களின் நடிப்பும் குமரேஷின் படத்தொகுப்பும் கவனம் ஈர்க்கிறது. ஓர் அறிவியல் திகில் படத்துடன் சமூக அக்கறையை இணைத்திருக்கும் இயக்குநர் அனுசத்யாவின் முயற்சி பாராட்டுக்குரியது.

# தி லவ்லி மிஸிஸ் முகர்ஜி

இணைய மேடையில் சமூகப் பிரச்சினைகளையும் அதன் கூர்மையான முரண்பாடுகளையும் பட்டவர்த்தனமாகப் பேசும் படைப்புகளை அதிகம் பார்க்கலாம். அதே முரண்பாடுகளைப் பகிடி செய்தவாறு பொட்டில் அறையும் கருத்துகளை முன்வைக்கிறது ஜீ 5 இணையத்தின் பிரத்தியேகத் திரைப்படமான 'தி லவ்லி மிஸிஸ்.முகர்ஜி.'

திரைப்படத் துறையில் ஒப்பனைக் கலைஞராக வளர்ந்து வரும் துடிப்பான இளம்பெண்ணிடம் படம் தொடங்குகிறது. தான் நேசிக்கும் தொழிலில் கரைந்திருக்கும் அப்பெண்ணுக்கு ஏற்பாட்டுத் திருமணங்களில் விருப்பமில்லை. எதிர்பாராமல் மாதம் லட்சங்களில் சம்பாதிக்கும் வெளிநாட்டு மாப்பிள்ளை அமைகிறது. பெற்றோரின் நிர்ப்பந்தத்துக்காக உணவு விடுதி ஒன்றில் அவரைச் சந்திக்கிறாள். தான் நேசிக்கும் பணியை அவன் துச்சமாக எண்ணுவதையும் அவனது சராசரியான எதிர்பார்ப்புகளையும் புரிந்துகொள்கிறாள். தனது தரப்பை வெளிப்படுத்தும் நோக்கில் அவனுக்கு ஒரு கதை சொல்லத் தொடங்குகிறாள். அரை மனதுடன் அவனும் கேட்க ஆரம்பிக்கிறான். ஒரு வங்காளப் பெண் தனது மணவாழ்வில் சந்திக்கும் எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களுமாக விரியும் கதைக்குள் இன்னொரு கதைக்கான கதவு திறக்கிறது.

56 நிமிடங்களில் முடியும் எளிமையான காட்சிகள் கொண்ட திரைப்படம் சுமாரான தமிழ் டப்பிங்கிலும் கூட, தனது உள்ளடக்கத்தாலும் நகைச்சுவையோட்டத்தாலும் ஈர்க்கிறது. ஆணாதிக்கவாதிகள் மட்டுமன்றி, இலக்கியவாதிகள், பிற்போக்குவாதிகள், சுயநலமிகள், நவீன அறிவியலின் பிதற்றல்களைப் பிடித்துக்கொண்டு திரிபவர்கள் எனப் பல தரப்பினரையும் ஆரவாரமின்றிக் கிண்டல் செய்திருக்கிறார்கள். ஸ்வஸ்திகா முகர்ஜி, ஜோய்தீப் முகர்ஜி உள்ளிட்டோர் நடிப்பிலான திரைப் படத்தை இந்திரானீல் ராய்சவுத்ரி இயக்கி உள்ளார்.



(1505 முதல் 1948 வரையான யாழ்ப்பாணத்தின் வரலாற்றைக் கட்டுரையாளர் இங்கு தொடராகப் பதிவு செய்யவுள்ளார். இங்கு கூறப்பட்டுள்ள தகவல்கள் பெரும்பாலும் ஆங்கில மூலங்களில் இருந்து பெறப்பட்டவை. தகவல்களில் வேறுபாடு காணப்படும் சந்தர்ப்பங்களில் இரண்டு தகவல்களையும் இங்கு தரவுள்ளதாகவும், அவை தொடர்பில் தான் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனவும் கட்டுரையாளர் தெரிவித்துள்ளார்.)




# 1661 ஆம் ஆண்டில்...

பால்டயஸ் பாதிரியார் பருத்தித்துறையில் ஒரு தேவாலயத்தையும் பாடசாலையையும் கட்டினார். இது 300 பெரியவர்களையும் 1000 சிறுவர்களையும் உள்ளடக்கக் கூடியதாக இருந்தது.இத் தேவாலயம் கட்டப்பட்ட அதே ஆண்டு மன்னாரில் முத்துக்குளிப்பும் ஒல்லாந்தரால் மேற்கொள்ளப்பட்டது.


புதிய முஸ்லிம் குடியேற்றம் தடை செய்யப்பட்டது. முஸ்லிம்களுக்கு விவசாயம் செய்வதற்கும் மீன் பிடிப்பதற்கும் மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது.ஒல்லாந்தர் தமிழ்ப் பெண்களைத் திருமணம் செய்யத் தொடங்கினர். ஒல்லாந்தரை திருமணம் செய்யும் பெண்கள் வாரம் ஒரு முறை தேவாலயத்துக்கு செல்ல வேண்டும். அத்துடன் கிறிஸ்தவ மதத்தை தழுவியதற்கான சான்றுப் பத்திரமும் பாதிரிமாரிடமிருந்து பெறவேண்டும்.

ஒல்லாந்தர் யாழ்ப்பாண மாவட்டத்தில் 38 தேவாலயங்களைக் கட்டியதுடன் குருமடங்களையும் (செமினறி) உருவாக்கினர்.

### ஒல்லாந்தர் நிர்வாகம்

இலங்கை முழுவதற்குமான (கண்டி இராச்சியம் தவிர்ந்த) ஒல்லாந்த தேசாதிபதி கொழும்பில் இருந்தார். இவரின் கீழ் யாழ்ப்பாணத்திலும் காலியிலும் ,ரு தளபதிகள் இருந்தனர். கொழும்பில் இருந்த தேசாதிபதி அல்லது ஆளுநர் (Governor) விடுமுறையில் செல்லும்போது யாழ்ப்பாணத் தளபதியே கொழும்பு தேசாதிபதியின் கடமைகளையும் பொறுப்பேற்று நிர்வகித்தார்.

ஒல்லாந்தத் தளபதியின் கீழ் ஒரு ஒல்லாந்த அதிகாரியும் அவருக்கு உதவியாக இன்னொரு அதிகாரியும் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் Opper Koopman, Onder Koopman என அழைக்கப்பட்டனர். இவர்களின் கீழ் உள்ளூர் அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருந்தனர். பறங்கியரைப் போலவே ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தை நான்கு பிரிவுகளாகவும் 32 கோயிற் பற்றுக்களாகவும் பிரித்து நிர்வகித்தனர்.நான்கு பிரிவுகளுக்கும் நான்கு முதலியார்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். திருகோணமலை, மட்டக்களப்பு மன்னார் என்பனவும் யாழ்ப்பாணத் தளபதியின் நிர்வாகத்தின் கீழ் இருந்தன. இந்த மூன்று மாவட்டங்களுக்கும் தனித்தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.




ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணத் தீவுகளுக்கு ஒல்லாந்தில் உள்ள நகரங்களின் பெயர்கள் ·சூட்டப்பட்டன.

காரைநகர்-Amsterdam, புங்குடுதீவு-Middleberg , ஊர்காவற்றுறை-Kayts, நயினாதீவு-Harrlem, நெடுந்தீவு-Delft, வேலணை-Leyden, இரணைதீவு-Koon or Enkysen, அனலைதீவு-Rottordam

### ஒல்லாந்த அதிகாரியின் கடமைகள்

கோட்டைக்கு வெளியேயுள்ள படையினர் மீதான அதிகாரம்,வீதி செப்பனிடல், உணவுப்பொருள்கள் விலை நிர்ணயம்,விவசாய அபிவிருத்தி,காலை மாலை பிரசங்கங்களை ஏற்பாடு செய்தல்,சந்தை மேற்பார்வை, வரி அறவிடல் போன்றன.

### முதலியாரின் கடமைகள்

தனது பகுதியில் நடைபெறும் விடயங்களைப்பற்றி அறிக்கை அனுப்புவது,தனது பகுதியில் செய்ய வேண்டிய வேலைகளை செய்விப்பது என்பன. **(இன்னும்....)**

# எழுத்தைக் கொல்லும் புத்தரின் சீடர்கள்

**(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

*அந்த பிரிவு பின்வருமாறு உள்ளது:*

*"சமய உணர்வினை இழிவிற்குட்படுத்துவதற்காக ஒரு முகப்பட்டதும் துவேசமானதுமான எண்ணத்துடன், பேச்சு வழக்கிலோ அல்லது எழுத்து மூலமான சொற்பதங்களால் அல்லது காணக்கூடிய சைகைகளின் மூலமாக குறிப்பிட்டதொரு வகுப்பின் சமயத்திற்கோ அல்லது சமய நம்பிக்கைகளுக்கோ இழிவினை ஏற்படுத்தும் அல்லது இழிவினை ஏற்படுத்த முயற்சிக்கும் நபரொருவருக்கு இரண்டு வருட காலப்பகுதிக்கென, இருவகையிலும் ஒருவகையில் சிறைத் தண்டனை வழங்கல் அல்லது தண்டப்பணம் அறவிடல் அல்லது இரண்டு வகையான தண்டனைகளும் வழங்கப்படுதல் வேண்டும்".*

ஆயினும், பொல்கஹவெல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அவரது அதிகார எல்லையையும் மீறிச் சென்று, இதனை மேற்படி சர்வதேச சமவாயத்தின் அடிப்படையில் வழக்கினை தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். இது சாதாரண பொலிஸ் அதிகாரி ஒருவருடைய பொறுப்பற்ற செயற்பாடெனில், அதற்கு மாற்றீடாக நிர்வாக ரீதியான தீர்வொன்றினைப் பற்றி ஆராய முடியும். ஆயினும், எமது நம்பிக்கைக்குரிய விடயமாக இருப்பது மேற்படி தீர்மானமானது உயர்மட்ட அரசியல் அதிகார வர்க்கத்திடமிருந்தே வந்ததென்பதாகும். இவ் அதிகார வர்க்கமானது ஒரு வகையான இனரீதியான மற்றும் சமய ரீதியான சித்தாந்தப் பார்வையின் உள்ளடக்கமாகும்.

மேற்படி சர்வதேச பிரகடனத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் பிணை பெறக்கூடியது உச்ச நீதிமன்றத்திலிருந்து மாத்திரமே. ஆயினும், சந்தேக நபர் முன்நிறுத்தப்பட்டதோ நீதவான் நீதிமன்றத்திலாகும். நீதவான் நீதிமன்றத்திற்கு பிணை வழங்கும் அதிகாரம் இல்லை. நீதவான் நீதிமன்றில் அடுத்த வழக்குத் திகதியாக 9ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த திகதியின் போது உச்ச நீதிமன்றமானது இரண்டு வார விடுமுறையில் சென்றிருக்கும். அதன் உள்ளார்ந்த அர்த்தம் யாதெனில் இன்னும் இரண்டு மாதங்களாயினும் பிணை பெறுவதற்காக எழுத்தாளர் காத்திருக்க வேண்டும் என்பதாகும்.

விடயம் இவ்வாறிருக்க, மேற்படி சர்வதேச பிரகடனத்தின் நோக்கமாக அமைவது நபர்களது 'சிவில் மற்றும் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதே தவிர அரசியல் ரீதியான அல்லது சமய அதிகாரிகளுக்கு அந்த உரிமைகளைப் பறிப்பதற்கான அனுமதிப் பத்திரமாக அமையக் கூடாது. அந்த சர்வதேச பிரகடனத்தின் 19ஆவது உறுப்புரை பின்வருமாறு உள்ளது.

"தடையின்றி ·தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கு அனைத்து நபர்களுக்கும் உரிமை உள்ளது."

அதில் மேலும் பின்வருமாறு கூறப்படுகின்றது.

"அனைத்து நபர்களுக்கும் கருத்து வெளிப்பாட்டு உரிமை உள்ளது. அதில் உள்ளடக்கப்படுவது தகவல்கள் மற்றும் அனைத்து வகையிலுமான கருத்துக்களை, கலைப் படைப்பாக புத்தக வாயிலாகவோ அல்லது தாம் விரும்பும் வேறு வகையிலான எந்தவொரு ஊடக வாயிலாகவோ ஆராய்வதற்கும், பெற்றுக் கொள்வதற்கும் பகிர்ந்தளிப்பதற்கும் உள்ள உரிமையாகும்".

இப்போது எமது உள்ளத்தில் எழும் கேள்வியாவது, சர்வதேச பிரகடனத்தில் கூறப்பட்ட விடயங்கள் அவ்வாறு இருக்கின்ற போது இந்தப் பிரகடனத்தின் கீழ் ஷக்திக சத்குமார எவ்வாறு கைது செய்யப்பட்டார் என்பதாகும். அதனை அவ்வாறு செய்ய முடியும் என பொலிஸ் தரப்பினர் கூறுவதற்கு அந்த பிரகடனத்தின் 20ஆவது உறுப்புரையில் இவ்வாறு கூறப்பட்டிருப்பதன் மூலமாக இருக்கலாம்.

"அநீதியாக, எதிரானதாக அல்லது வன்முறையைத் துண்டும் வகையில் தேசியம், இனரீதியான அல்லது மதரீதியான குரோதத்தினை பரப்புரை செய்தலை தடுத்தலாகும்".

தற்போது நாங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டியது, அநீதிக்கோ அல்லது எதிராகவோ அல்லது வன்முறையைத் தூண்டும் வகையில் இந்த சிறுகதையில் ஏதேனும் இடம்பெற்றுள்ளதா என்பதனையே ஆகும். ராஹலவின் தந்தை சித்தார்த்தன் அல்ல என்று கூறுவது ஏதேனும் துண்டுதலுக்கு ஏதுவாக அமையும் காரணியாக யாராயினும் கருத முடியுமா? அவ்வாறெனில், 'கடவுள் இறந்து விட்டார்' என்று கூறுவது அதையும் விட அதிகமான தூண்டுதலாக அமையாதா? இந்த தவறு இடம்பெறுவதற்கு அவ்வாறான தூண்டுதலாக இருக்கக் கூடிய, 'தேசியம், இனரீதியான அல்லது மதரீதியான குரோதத்தினை பரப்புதலும்' அதனோடு இணைந்ததாக இடம்பெற்றிருக்க வேண்டும். இவ்வகையான சட்டம் அப்படியானதொரு நிலைமையில் மாத்திரமே உரித்துடையதாக அமையும். காரணம், இவ்விடத்தில் அடிப்படையாக தடைசெய்யப்படுவது தேசியம், 'இனரீதியான அல்லது மதரீதியான குரோதத்தினை பரப்புதல்' என்ற காரணமே ஆகும். மேற்படி உறுப்புரையில் கூறப்படும் உள்ளடக்கம் அதுவே. எனவே, ஷக்திக சத்குமாரவின் சிறுகதையில் 'தேசியம், இனரீதியான அல்லது மதரீதியான குரோதத்தினை பரப்புதல்' இடம்பெறுவது எந்த சொல்லில் அல்லது வசனத்தில் அல்லது எந்தப் பந்தியின் மூலமாக?

கலைப் படைப்புகள் தொடர்பாகவோ, கலையினுள் காணப்படுகின்ற பரிமாற்றத்துக்குரியதான விசேட பண்புகள் தொடர்பாகவும் அறிந்திருக்க வேண்டுமென்பதனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவரிடம் நாம் எதிர்பார்க்க முடியாத விடயமாகும் (கலை ரசிகர்கள், கலையுணர்வு கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்களும் உள்ளனர் என்பதும் உண்மையான விடயமே). ஆயினும் 'சமயம்' என்ற சொல் இருந்த மாத்திரத்திலோ, 'தூண்டிவிடல்' என்ற சொல் இருந்த மாத்திரத்திலோ மேற்படி உறுப்புரையானது ஷக்திகசத்குமாரவினது சிறுகதையுடன் தொடர்பற்றதென்ற தன்மையினை இந்த பொலிஸ் அலுவலர் புரிந்து கொண்டிருந்திருக்கலாம். ஆயினும், ஏற்கனவே நாம் தெரிவித்த அரசியல்வாதியினால் அதற்குரிய வாய்ப்பை வழங்காதிருந்திருக்க வாய்ப்புண்டு.

எவ்வாறெனினும், இந்தச் சிறுகதையானது மேலே கூறப்பட்ட கருத்தையுடைய, அதாவது சமய குரோதமல்லாத, சமய அன்பை முன்னிலைப்படுத்தி எழுதியதொன்றாக, அவசியமெனில் இதனை விட மிக இலகுவான விதத்தில் யாருக்காவது தர்க்கரீதியாக தெரிவித்திருக்கலாம். பிரம்மச்சர்ய ஒழுக்கம் என்பது பிக்குகளுக்கு அவசியமான தொன்றாகும். இந்த சிறுகதையினுள் தலைமைத் தேரர் இங்கு கூறப்படுகின்ற இளம் பிக்குவை பாலியல் ரீதியாக பயன்படுத்துவதனை பிரம்மச்சர்ய ஒழுக்க மீறலாக சமூக கருத்தியலை ஏற்படுத்துவதனூடாக, அத்தீய நபரிடமிருந்து விகாரையை தூய்மையாக்கிக் கொள்ள முடியுமென்பது செய்யக்கூடியதாகவிருந்த ஒரு வழியாகும். அது சமயம் தொடர்பில் காணப்படுகின்ற அன்பே தவிர அன்பற்றதொரு விடயமாக அமைவது எவ்வாறு?

எப்படியோ சாசன (சமய) திருத்தம் என்ற விடயம் இங்கு எமக்கு அவசியமில்லை. எமக்கு அவசியமான விடயமாக அமைவது, ஒரு எழுத்தாளருக்கு, ஒரு கலைஞருக்கு, ஒரு ஊடகவியலாளருக்கு, ஒரு சிந்தனையாளருக்கு போலவே வேறெந்த நபருக்கும், சுதந்திரமாக சிந்திப்பதற்கும், சொல்வதற்கும், எழுதுவதற்கும், காட்சிப்படுத்துவதற்கும் உள்ள உரிமையானது நவீன மானிட நாகரீகத்தினுள் அசையாத உரிமையொன்றாக இருப்பது அவசியமே. எனவே, ஷக்திக சத்குமாரவினது உரிமை மற்றும் சுதந்திரத்தின் பொருட்டு நாம் யாவரும் அணி திரள்வது அவசியமாகின்றது.



# படுத்தபடியே உழைக்கலாம்

நீங்களும் நன்றாக ஜேர்மன் பேச தெரிந்தவரா? இதோ ஓர் அரிய சந்தர்ப்பம். சந்திரனுக்கும் செவ்வாய்க்கும் பயணிக்கும் விண்வெளி வீரர்கள் மீது புவியீர்ப்புத் தன்மையற்ற நிலை என்ன தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை ஆராய்ச்சி செய்யவிருக்கும் ஜேர்மன் விண்வெளி அறிவியலாளர்கள், தொடர்ந்தும் 60 நாட்களுக்கு ஒரே இடத்தில் படுத்திருக்கத் தயாராக இருப்போருக்கு 16,500 யூரோக்கள் தருவதாக அறிவித்துள்ளது. இந்த ஆய்வானது 12 ஆண்கள் மற்றும் 12 பெண்களைக் கொண்டதோடு இவர்கள் தொடர்ந்தும் இரண்டு மாதங்கள் கால் பாகம் உயர்ந்தும் தலைப் பாகம் ஆறு டிகிரிக்குத் தாழ்ந்திருக்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் படுக்கையிலே படுத்திருக்க வேண்டும். மேலும் இந்தக் காலப்பகுதியில் களைப்பு, சோர்வு, முகம் வீங்குதல், காதுப் பிரச்சினைகள், நோயெதிர்ப்புச் சக்தி குறைதல் மற்றும் முதுகு வலி போன்ற விளைவுகள் ஏற்படலாம் எனவும் கூறப்படுகிறது.



# இணைய கோடீஸ்வரி

பட்டம் படித்துவிட்டு வேலைக்காகப் போராடிக்கொண்டிருப்போருக்கு மத்தியில் பிரையோனி கோர்டன் எனும் 23 வயதான இளம்பெண் இணையத்தினூடாகப் பல இலட்சங்கள் சம்பாதித்து சாதனை படைத்துள்ளார். இங்கிலாந்தைச் சேர்ந்த பிரையோனி சொந்த வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்கும் நோக்கில் 100 பவுண்ட்ஸ்களை முதலீடாகக் கொண்டு சில துணிகள் வாங்கி அவற்றை பிகினி ஆடைகளாக மாற்றி வடிவமைத்து "தலாய்யா ரோஸ்" என்ற பெயரில் ஒன்லைனில் விற்பனை செய்துள்ளார். இதன் மூலம் இணையதளம் தொடங்கி ஆறே மாதங்களில் 100,000 பவுண்ஸ்களுக்கும் அதிகமாக சம்பாதித்து சாதனை படைத்துள்ளார். சமூக வலைதளங்களில் எதிர்மறையான விடயங்கள் பலதும் பரபரப்பாகப் பேசப்படும் நிலையில், இன்ஸ்டாகிராமின் உதவியோடு தனது முயற்சியில் வெற்றிபெற்றுள்ளார் இந்த இளம் தொழிலதிபர்.



# பிங்க் ஏரி

அவுஸ்ரேலியா, ஸ்பெயின், கனடா மற்றும் செனகல் ஆகிய நாடுகளில் காணப்படுகின்றன. பிங்க் வகை ஏரிகளில் அவுஸ்ரேலியாவின் மெல்பேர்ண் நகரில் அமைந்துள்ள ஏரி சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவர்ந்துள்ளது. இலையுதிர் காலத்தில் அதிகப்படியான சூரிய ஒளி, குறைந்த மழை மற்றும் மிதமான வெப்ப நிலையால் ஏரியில் உள்ள பாசிகள் சிவப்பு நிற நிறமிகளை உருவாக்கி இந்தப் பிங்க் ஏரிகள் உருவாகின்றன. இவை இலையுதிர் கால இறுதிவரைக்கும் இருக்கும். இந்த ஏரியில் உப்பின் அளவு அதிகப்படியாக இருப்பதால், அது சிலரின் தோலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதோடு ஏரிக்கு அருகில் அழுகிய முட்டையின் துர்நாற்றம் வருவதாகவும் கூறப்படுகிறது.




இப்பத்திரிகை மானிப்பாய் வீதி, உடுவில் என்ற முகவரியிலுள்ள அம்பலம் பதிப்பகத்தால், 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 17.04.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.